பக்கங்கள் 20

20/=

Registered as a Newspaper in Srilanka

56

எதிரொலி

10-16 ஜூலை 2019

வாரஇதழ்

Ethiroli

இடருடை வழிபாடும் இழந்த நிலமீட்பும்

மகிந்த பக்கம் கூட்டமைப்பு சாயாது!

உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்

தமிழ் படிப்பிக்கும் பிக்கு!



நாங்கள் எல்லோரும் குழந்தைப் பருவத்திலிருந்து தமிழ் படித்தோம். ஆனாலும் ஒருவருக்கு தமிழ் மொழியில் எழுதவும், வாசிக்கவும் முடியவில்லை. நீங்கள் ஒரு குறிய காலத்தில் எந்த நிறுவனமும் எங்களுக்கு கொடுத்தீர்கள். எங்களுக்கு செய்த உதவு மிகவும் நன்றி. உங்கள் எதிர்கால வேலை வெற்றிகரமாக இருக்கட்டுமாக!

[இங்கே எந்த பிழைகளும் இருந்தால் என்னை மன்னியுங்கள்]

2017 - சாதாரண தர மாணவர்கள்.

மிக்குவிடம் கற்ற மாணவர்கள் எழுதிய கடிதம்

'சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் எனக்கு நன்கு பரிச்சயம் உள்ளது. இதனால் சிங்கள மற்றும் தமிழ் மக்களின் மன உணர்வுகளையும், கருத்துக்களையும், அவர்கள் தரப்பு நியாயங்களையும் என்னால் நன்கு விளங்கிக் கொள்ள முடியும். இவ்வாறான ஒரு மொழி ரீதியிலான புரிந்துணர்வு இருக்குமாயின் எமது நாட்டில் பல பிரச்சினைகள் ஏற்பட்டிருக்காது. இதனை உணர்ந்துதான் தமிழ் மொழி ஆற்றலை வளர்த்துக் கொண்டு சிங்கள மாணவர்களுக்கு தமிழ் மொழியைக் கற்பிக்கின்றேன்" என்று கூறுகிறார் மாத்தளை சுனித்த தேரர். ஒரு பௌத்த பிக்கு மிகவும் நேர்த்தியாக தமிழ் கற்பிப்பதைக்கண்டு ஆச்சரியம் கொள்கின்றனர் கிராம மக்கள்.

'ஒரு பௌத்த பிக்கு எப்படித் தமிழ் படிப்பிக்கின்றார் என்று என்னை எல்லோரும் ஆச்சரியத்துடன் பார்ப்பார்கள். ஆனால் நான் பிறப்பால் தமிழர் என்று அவர்களுக்குத் தெரியாது. ஆனாலும் சிலர் தெரிந்து கொண்ட பின்பும் அவர்களில் நான் எந்த விதமான மாற்றங்களையும் உணரவில்லை" என்று குறிப்பிடும் சுனித்த தேரரின் பிறப்பிடம் மாத்தளை உக்குவெலவில் உள்ள வராபிட்டிய என்ற சிறிய கிராமமாகும். அவரின் தந்தையாரான குமாரசுவாமியின் பிறப்பிடமும் இந்த வராப்பிட்டிய கிராமம் தான். தாய் சரஸ்வதி பொலனறுவை தியபெதும பிரதேசத்தினைச் சேர்ந்த கோந்துருவாவ என்ற கிராமத்தினைச் சேர்ந்தவர். இந்த இரண்டு கிராமங்களிலும் இந்த இரண்டு குடும்பம் மட்டுமே தமிழ்க் குடும்பமாக இருந்திருக்கிறது. "எங்களைத் தவிர எங்கள் ஊரில் இருந்த அனைவரும் சிங்களவர்களாக இருந்தனர். நாங்கள் எப்பொழுதும் வீட்டில் இந்து கடவுள்களின் படத்துடன் புத்தபெருமானின் படத்தினையும் வைத்துத் தான் வணங்குவோம். அப்பகுதிகளில் இருந்த சிங்கள மக்கள் எங்களுக்கு எப்பொழுதும் உற்ற நண்பர்களாகவே இருந்தனர்" என்று சுனித்த தேரர் கூறுகிறார்.

தமிழராக இவர் பிறந்திருந்தாலும், சிங்கள மொழியிலேயே தனது ஆரம்ப கல்வியினைக் கற்று தேர்ச்சி பெற்ற பின்னர் தனது உயர் கல்வியினைத் தமிழிலேயே கற்றிருக்கிறார். இதனால் இரண்டு மொழியிலும் சரளமாகப் பேசக்கூடியவராகவும் எழுதக் கூடியவராகவும் இருக்கும் சுனித்த தேரர் பௌத்த மதத்தைத் தழுவி துறவியானதைப் பற்றி கூறுகிறார்.

"நான் பௌத்த மதத்தினைத் தழுவியது பௌத்த மதத்தின் மீது ஏற்பட்ட ஈர்ப்பினாலாகும். எமது வீட்டுக்கு அருகாமையில் ஒரு பௌத்த விகாரை இருந்தது. அங்கு நான் அடிக்கடி சென்றுவருவேன். ஆதனால் பெற்ற ஈர்ப்பினால், எனது பன்னிரெண்டாவது வயதில் பௌத்த மதத்தினை தழுவிக் கொண்டு 2008 ஆம் ஆண்டு ஜனவரி 7ம் திகதி பௌத்த துறவியானேன். அப்போது தான் விகாரையின் தலைமை விகாராதிபதி தேரர் என்னைத் தமிழ் கற்றுக் கொள்ளுமாறு கூறி அதற்கான பாதைகளையும் வகுத்து தந்தார். அதனால் எனது உயர் கல்வி தமிழிலே அமைந்தது. மொழி ரீதியிலான புரிந்துணர்வு எமது நாட்டுக்குத் தேவை. இன வேறுபாடு இன்றி நாங்கள் மொழியைப் பரஸ்பரம் கற்றுக்கொண்டால் இனங்களைப் புரிந்து கொள்ளும் திறன் வளரும். சக இன மக்களுடன் ஒரு நட்புணர்வினை பேணிக் கொள்ளவும், கருத்துக்களை உணர்வுகளைப் பரிமாறிக் கொள்ளவும் இது உதவும். அந்த வகையில் இரு இனங்களுக்கும்ஒருபாலமாகஇருக்கவிரும்பினேன்." என்கிறார்.

மாத்தளை சுனித்த தேரர், கடந்த 5 ஆண்டுகளாக களுத்துறையில் தமிழ் மொழியைக் கற்பித்து வருகின்றார். சிங்கள மொழி மூலம் கற்ற அரச அதிகாரிகள், நீதிமன்றங்களில் பணியாற்றுவோர், அரச ஊழியர்கள், 2ம் தரம் முதல் 9ம் தரம் வரையிலான பாடசாலை மாணவ மாணவியர், புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றுபவர்கள் உட்பட பலருக்கும் தமிழ் மொழியைக் கற்பித்து வரும் இவர் இந்தப் பணியினை மிகவும் விருப்பத்துடன் செய்து வருவதாகக் கூறுகிறார்.



களுத்துறை நகரில் இவருக்குரிய விகாரையிலேயே கற்பித்தல் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றார். மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க அவர் மாத்தளையிலும் கற்பித்தல் பணிகளை ஆரம்பிக்க வுள்ளதாகத் தெரிவித்தார். சிங்கள மொழி மூலம் கற்றவர்கள் தமிழைக்கற்பதில் மிகவும் ஆர்வத்துடன் இருப்பதாக இவர் கூறுகிறார்.

"நூற்றுக்கு பத்து சதவீதமான சிங்கள மாணவர்கள் எந்தவிதமான பரீட்சை எதிர்பார்ப்பும் இன்றி தமிழ் மொழியை நேசித்து கற்றுக் கொள்ள வருகின்றனர். அது எனக்கு மகிழ்ச்சியைத் தரும் விடயமாகும். மேலும் வடக்கு கிழக்கில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களும், அப்பகுதிகளில்வியாபாரங்களில்ஈடுபட எண்ணியுள்ளவர்களும் தமிழ் மொழியை ஆர்வத்துடன் கற்றுக் கொள்ள வருகின்றனர். இவர்கள் 50 வயது முதல் 60 வயதானவர்களாக உள்ளனர்." என்றும் சுனித்த தேரர் குறிப்பிட்டார்.

இனவேறுபாடு இன்றி நாங்கள்மொழியை பரஸ்பரம் கற்றுக்கொண்டால் இனங்களைப் புரிந்து கொள்ளும் திறன் வளரும். என்ற திடமாக நம்பும் சுனித்ததேரர்,

"எமது நாட்டை நிர்வகித்த ஆட்சியாளர்கள் அதனை உணரவில்லை. இனியும் காலம் தாழ்த்தாமல் தமிழை இரண்டாம் மொழியாக கட்டாயமாக்கவேண்டும் இதற்கான சட்டத்தினை உருவாக்க வேண்டும். பாடசாலைகளில் தற்போது 2 ஆம் தரம் முதல் 9 ஆம் தரம் வரை மட்டுமே இரண்டாம் மொழி கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அதன் பின்பு விரும்பினால் கற்றுக் கொள்ள முடியும் என்றுள்ளது. அதைமாற்றி அனைவருக்கும் தமிழும் சிங்களமும் கட்டாயம் என்பதை சட்டமாக்க வேண்டும்" என்று சுட்டிக் காட்டுகிறார். அதே நேரம் பௌத்த துறவிகளின் அரசியல் நடவடிக்கைகள் பற்றி விசனம் கொள்ளும் சுனித்த தேரர் தான் இதுவரை எவருக்கும் வாக்களிக்காததையும் சுட்டிக் காட்டினார்.

பௌத்த மதம் மற்றும் பௌத்த பிக்குகள் குறித்து தமிழர்கள் மத்தியில் அரசியல் ரீதியிலான அதிருப்தியே நிலவி வருகின்றது.

"இனியும் நான் ஒருபோதும் வாக்களிக்கப் போவதில்லை. 30 வருட கால யுத்தம் முடிவடைந்து 9 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் இனங்களுக்கிடையில் ஒற்றுமையையும், நல்லுறவையும் ஏற்படுத்துவதற்கு பல்வேறு தரப்பினரும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வரும் நிலையில் இந்த பணியில் பௌத்த பிக்குகளும் பிரதான இடத்தினை வகிக்க முடியும். ஆனால் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்று பிக்குகளிலும் இரு தரப்பினர் உள்ளனர். இலங்கையில் பௌத்த மதம் மற்றும் பௌத்த பிக்குகள் குறித்து தமிழர்கள் மத்தியில் அரசியல் ரீதியிலான அதிருப்தி நிலையே நிலவி வருகின்றது. ஞானசார தேரரின் பொது பல சேனா மற்றும் இராவணா பலய போன்ற பௌத்த பிக்குகளை பிரதானமாகக் கொண்ட அமைப்புகள் என்றுமே இனவாதக் கண்ணோட்டத்தில் தமிழர்களின் பிரச்சினைகளை அணுகி வருவது இதற்கு காரணமாகும். தமிழர் தேசியப் பிரச்சினைக்கான தீர்வுத் திட்டங்கள் என்று வரும் போது அதனை முதலில் எதிர்க்கும் தரப்பாக உள்ள பௌத்த பிக்குகளை தமிழ் மக்கள் என்றுமே சந்தேகக் கண்டு கொண்டு தான் பார்க்கின்றனர். இந்தியாவிலிருந்து வந்த இந்து மதப் பின்னணி கொண்ட பௌத்த மதம் சிறந்த தத்துவங்களைக் கொண்ட மதமாக விளங்குகின்ற போதிலும் ஒரு சில பௌத்த பிக்குகளின் அரசியல் செயற்பாடுகள் காரணமாக தமிழர்கள் பௌத்த மதத்தினை பொருட்படுத்தாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இதனால் சிங்கள மொழியினையும் வெறுக்கும் மனோபாவத்தினை ஒரு சிலர் கொண்டிருப்பது தவிர்க்க முடியாததாகவுள்ளது"

என்று மனம்திறந்த சுனித்த தேரர் அண்மையில் நடந்த சம்பவம் பற்றி குறிப்பிட்டார்.

"வடபகுதியில் காங்கேசன்துறையில் 1945ல் நிர்மாணிக்கப்பட்ட விகாரை ஒன்று தொடர்பாக சிங்களவர்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் நிலை ஏற்பட்டது. யுத்தத்தில் முற்றாகத் தரைமட்டமாக்கப்பட்ட இந்த விகாரை அமைந்திருந்த காணியில் 5 தமிழ்க் குடும்பங்கள் தற்காலிகமாக குடியிருந்த நிலையில் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களுக்கு வேறு இடத்தில் சட்டபூர்வமான காணிகளை பெற்றுக் கொடுக்க உதவினேன். இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எனது மொழியாற்றலைப் பயன்படுத்தி இரண்டு தரப்பு களுக்கும் இடையில் சமரசத்தினை ஏற்படுத்தி எவருக்கும் பாதிப்பின்றி நியாயமான தீர்வை வழங்க முடிந்தது." என்கிறார்.

பௌத்த மதத்தில் கற்றுக் கொண்ட பொறுமை, அமைதி, பிரச்சினைகளைக் கையாளும் விதம் என்பன இன மத வேறுபாடற்ற கற்பித்தல் என்ற பொதுச் சேவைக்கு உதவி புரிவதாக சுனித்த தேரர் குறிப்பிடுகிறார். 'எனது எதிர்கால திட்டம் பௌத்த மத போதனைகளை தமிழில் எடுத்துரைப்பதாகும். அதன் ஒரு கட்டமாக கடந்த வெசாக் தினத்தில் களுத்துறை பயாகல இந்துக் கல்லூரி மாணவ மாணவியருக்கு வெசாக் பற்றி தமிழில் உரையாற்றினேன்." என்று அவர் கூறினார். 'ஒரு மொழியைக் கற்றுக் கொள்வது என்பது ஒரு இனத்தின் அடையாளம், கலாசாரம், பழக்கவழக்கங்களைக் கற்றுக் கொள்வதற்கு ஒப்பானதாகும். ஒரு இனத்தை பற்றி அறிந்து கொள்வதற்கு நீங்கள் அவர்களுடன் தொடர்பாடக் கூடிய மொழியைக் கற்றுக் கொள்வது தான் சிறந்தது. இதனை நான் நன்கு உணர்ந்திருக்கின்றேன் அதனை மற்றவர்களுக்கும் உணர செய்வதே எனது பணியாக உள்ளது." என்கிறார்.

எதிரொலி
Ethiroli

அம்பலம் பதிப்பகம்,
இல. 241, கைதடி - மானிப்பாய் வீதி,
உடுவில், யாழ்ப்பாணம்.
ethirolimedia@gmail.com, 0212243818

பொங்கலும் ஒரு போராட்டமே

"போராட்ட வடிவம் மாறலாம். ஆனால் எமது இலட்சியம் மாறாது" என்பது தலைவர் அடிக்கடி உச்சரிக்கும் வார்த்தை. போராட்ட வடிவம் ஒன்று தோற்கும் போது போராட்டத்துக் கான கருவை நீர்த்துப் போகவிடாது இன்னொரு வலிமை மிக்க, காலத்தால் போராட்டத்துக்கு வீரியமான, உறுதிப்பாடு டைய, மக்கள் பங்களிப்புடனான இன்னுமொரு போராட்ட வடிவத்தில் இயங்கிக்கொண்டிருப்பது மிக அவசியமானது.

இதற்கு தகுந்த உதாரணம் கட்டலோனியாவின் விடு தலைப் போராட்டம். பார்சிலோனா என்கிற உதைபந்தாட்டக் கழகத்தை ஆயுதமாக வைத்துக்கொண்டு அது இன்னமும் தனது சுதந்திரத்துக்காக தொடர்ந்தும் இயங்கிக்கொண்டி ருக்கிறது .

நம் தாயகத்திலும் அப்படியானதொரு மாற்றுப் போராட்ட வடிவம் ஒன்று எழுந்து வெற்றிகரமாக ஆரம்பித்திருப்பது மகிழ்சியாக இருக்கிறது.

செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளா கத்தில் அத்துமீறி அமைக்கப்பட்டுள்ள புத்தர் சிலை தொடர் பிலும், தொல்தமிழர் பூர்வீக நிலமான செம்மலையில் புத்தர் நிலையினூடாக நிகழ்ந்துகொண்டிருக்கும் சிங்கள ஆக்கிரமிப்புக்கு எதிராகவும் தமிழர் தரப்பில் பல்வேறுகட்ட போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இந்த நில ஆக்கிரமிப்பை தடுக்க சட்ட ரீதியானதும் , தார்மீக ரீதியானதுமான போராட்டங்கள் தோல்வியில் முடிந்த நிலையில், தொல்தமிழர் நிலமான செம்மலையை சிங்கள இதிகாசங்களுக்குள் சொருகி, பௌத்த சிங்கள பூமியாக சித்தரிக்க தொல்லியல் துறையின் ஆதரவோடு இலங்கை பௌத்தப் பேரினவாதம் முனைப்புக் காட்ட ஆரம்பித்திருந் தது. இதன்போது செம்மலையின் தமிழர் இருப்பதை உரத்துச் சொல்லக்கூடிய, அடுத்த சந்ததிக்கும் அந்த வர லாற்றைக் கடத்தவேண்டிய போராட்ட வடிவம் ஒன்று தமி ழர் தரப்புக்கு அவசியமானதொன்றாக இருந்தது.

அந்த வெற்றிடத்தை மிகச் சரியான போராட்டவடிவம் ஒன்றால் தமிழர் அமைப்புகளும் எம் இளைஞர்களும் நிரப்பியிருக்கிறார்கள்.

நீராவியடிப் பிள்ளையாருக்கு பொங்கிப் படையலிட்டு அதை "தமிழர் கொண்டாட்ட நாளாக" அறிவித்து அங்கே நூற் றுக் கணக்கில் திரண்டு பொங்கிப் படையலிட்டு கொண் டாடியிருக்கிறார்கள்.

மறுக்கப்படும் நீதி ஒன்றை வழக்கிலிருக்கிற போராட்ட வடிவங்களால் பெற முடியாதவிடத்தும், காலப்போக்கில் அந்த நீதி இருட்டடிப்புச் செய்யக்கூடிய அபாயமும் இருக்கி றவிடத்தில் போராட்டத்துக்கான கருவை, அது சார்ந்த சமூகமொன்றுக்கான கொண்டாட்ட வடிவமொன்றாக மாற்றி விடுகிற பொழுது காலத்துக்கும் போராட்டம் நீர்த்து விடாதபடிக்கு அடுத்தடுத்த சந்ததிகளிடமும் உயிர்ப்போடு இருக்கும்.

காரணம் இயல்பிலேயே மனிதன் கொண்டாட்ட விரும்பி. அவனிடம் கையளிக்கப்படுகிற கொண்டாட்டங்களை என் றைக்குமாக நீடிப்பதில் நாட்டம் கொண்டவன்.

அப்படியான மனித இயல்போடு, வென்றெடுக்க வேண் டிய உரிமை ஒன்றுக்கான தேவையும் ஊட்டப்படுகிற போது அந்தக் கொண்டாட்டங்களின் வாயிலாக தனது போராட்டம் என்றைக்கும் உயிரோடு இருப்பதற்கான ஏற்பாடுகளை அவன் இன்னமும் அதிகமாகப் பார்த்துக்கொள்வான்.

இந்த அங்குரார்ப்பணர்த்தின் மூலம் இனிமேலும் தொடரவிருக்கிற இந்த "தமிழர் திருநாள்"கொண்டாட் டங்கள், செம்மலை நிலம் தமிழர்களுடையது என்பதை உலகுக்கு எடுத்துச் சொல்லும்.

இந்த கொண்டாட்டங்கள் தம் மீது எத்தகைய பாரதூ ரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை இப்போதே பௌத்த பேரினவாதம் யோசித்திருக்கும். அடுத்தடுத்த ஆண் டுகளில் இதனை முடக்குவதற்கான முட்டுக்கட்டைகள் குறித்து இப்போதே திட்டங்களை வகுத்திருக்கும். அவற்றை தந்திரமாக எதிர்கொள்ள வேண்டிய கடப்பாடு சார்ந்த தோருக்கு உண்டு.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"



டருடை வழிபாடும்: ழந்த நிலமீட்பும்!

■ செந்தூரி

அசைய மறுத்த அடாத்தாக குடியிருக்கும் பௌத்த பிக்குவின் சட்டத்தரணியுடைய கார் - மத்தியான வெயிலில் அமர்ந்து பசியாறிய சிறு வர்கள் - அதிகாலை மூன்று மணிக்கு ஆரம்பித்த பண்டமெடுக்கும் நிகழ்வு - அதே நாளில் பிரித் ஓதும் வைபவத்துக்கு ஏற்பாடு செய்த பிக்குகள் - அழைத்து வரப்பட்டு பின்னர் திருப்பியனுப்பட்ட சிங்கள மக்கள் - கறுப்புக் கண்ணாடிகளை அணிந்துகொண்டு காவலுக்கு நின்ற படையினர் - பௌத்த கொடிகளுக்கு நடுவில் கம்பீரமாக பறந்த நந்திக்கொடிகள் - வீதியின் இருபுறமும் பொங்கலிடப்பட்ட 108 பானைகள் - தொன்தமிழ் வழிபாட்டு முறையில் ஆராதிக்கப்பட்ட பழைய செம்மலை நீராவியடிப்பிள்ளையார் - என்று சர்ச்சைகளும் சுவாரசியமுமாக, மாபெரும் இனவெழுச் சியுடன் நிறைவடைந்திருக்கிறது, தமிழர் திருவிழா.

நிறைவடைந்திருக்கின்றது - என்பதை விட, தமிழ ருக்கான அரசியல் சக்திகள் என்று அரசும் - ஏனைய வர்களும் நம்புகின்ற மக்கள் பிரதிநிதிகளுடைய தலை யீடில்லாமல், உணர்வெழுச்சியுடன் திருப்பியடிக்கத் தயங்காத தன்னார்வத் தமிழ் இளைஞர்களோடு - பௌத்த சிங்களப் பேரினவாதத்தின் நிலஅபகரிப்புச் சதித்திட்டத்தை முகவர்களின் முட்டுப்பாடு தொடங் கியிருக்கிறது என்பதே சாலப்பொருத்தம்.

நல்லாட்சி அரசின் வரவுசெலவுத்திட்டமொன்றில் முன்மொழியப்பட்ட வடக்கில் 1000 பௌத்த விகரை களை அமைக்கும் திட்டம் உயிர்ப்புடன் மீதமிருக்க, இந்த நல்லாட்சி அரசை தாங்கி நிற்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கூட 108 பானைப்பொங்கலுக்கு அரிசி போட்டிருப் பது, பெருந்திருவருளின் விளையாடல்களில் முதன் மையானதாயிருந்தது. ஏற்கனவே நாமனைவரும் தெரிந்து கொண்டதன் படி, செம்மலை முல்லைத் தீவின் கடலோர கீழை எல்லைக்கிராமம்.

இந்திய அமைதிப்படையின் காலத்தில் தமது நிலங் களை விட்டு இடம்பெயர்ந்த கொக்கிளாய், கொக்குத் தொடுவாய் ஆகிய செம்மலையின் அயற்கிராம மக்கள் தத்தமது கிராமங்களில் மீளக்குடியமர்ந்தது 2010 இன் பின்னரே.

இக்கிராமங்களின் மீள்குடியேற்றம் 2014 வரை நடைபெற்றது. கொக்கிளாய் மீன்பிடி துறைமுகத்தில் ஏற்கனவே தொழிலை சாட்டி குடியமர்ந்த சிங்கள மக்களும் - அவர்களை காரணம் காட்டி பௌத்த விகாரையொன்றை கட்டி குடியேறியிருக்கும் இன் னொரு பிக்குவும் வேறொரு தலையிடிக்குரியவர்கள்.

கொக்கிளாய் விகாரை அமைக்கப்பட்டு வரும் காணி, தமிழர் நிலம் என்பதைக் குறிப்பிட்ட வழக்கும் இன்னமும் தீர்வையில்லாமல் முல்லைத்தீவு நீதி மன்றில் தவணையை வாங்கிக்கொண்டிருக்க, ஒருபுற மாக விகாரையின் கட்டுமானங்கள் வளர்ந்து கொண்டி ருக்கும் நல்லாட்சியின் இனநல்லிணக்கத்துக்கு நடு வில், செம்மலைப் பிள்ளையாரின் தமிழர் திருவிழா நிச்சயமான தொடக்கமே என்பதில் மறுப்பில்லை?

வடக்கும் கிழக்கும் இணையும் புள்ளி : தென்

> **நல்லாட்சி அரசின் வரவுசெலவுத்திட்டமொன்றில் முன்மொழியப்பட்ட வடக்கில் 1000 பௌத்த விகாரைகளை அமைக்கும் திட்டம் உயிர்ப்புடன் மீதமிருக்க, இந்த நல்லாட்சி அரசை தாங்கி நிற்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கூட 108 பானைப்பொங்கலுக்கு அரிசி போட்டிருப்பது, பெருந்திருவருளின் விளையாடல்களில் முதன் மையானதாயிருந்தது.**

னவன்மரவாடியிலிருந்து நகர்ந்து செம்மலைக்கு வந்தி ருப்பது தமிழர் நிலங்களுக்கு ஆரோக்கியமானதல்ல? ஏற்கனவே முழுமையாக சிங்கள ஆக்கிரமிப்புக்குள் ளாகிய வெலிஓயா ஆகிய மணலாறு, மருந்துக்கு கூட தமிழ்மக்களின் நிலைத்திருப்பின் அடையாளங்கள் இல்லாமல் துடைத்தழிக்கப்பட்டுக் கொண்டிருக் கின்றது.

கடந்த இருவாரங்களுக்கு முன்னரும் முல்லைத்தீவு மாவட்டத்தின் சமுர்த்திப் பயனாளர்களுக்கு ஆரம்ப அட்டை வழங்க வந்த அதிமேதகு ஜனாதிபதியவர்கள், மணலாறு பிரதேச செயலக பிரிவின் கீழடங்கும் புனரமைக்கப்பட்ட "கிரிஇப்பன்வேவ" குளத்தை தனது திருக்கரத்தால் திறந்து வைத்தே திரும்பியிருந்தார்.

பாலாமைக்குளம் - தமிழர்களின் பயன்பாட்டி லிருந்த பழமையான நீர்ப்பாசனக்குளத்தை நேரடியாக மொழியாக்கம் செய்து உரிமை கொண்டாடி, அபி விருத்தியும் செய்து மகிழ்கின்றது சிங்களம். (பால் ஸ்ரீ கிரி, ஆமை ஸ்ரீ இப்பன், குளம் ஸ்ரீ வேவ)

வடக்கு கிழக்கின் எல்லைக்கிராமங்களில் நடக்கும் சகல விதமான அபிவிருத்திப்பணிகளுக்கும் பின்னால், கண்ணீர் நிரம்பிய தமிழர் பாரம்பரிய நிலத்தின் மீதான நிலப்பறிப்பு நிச்சயமாக இருக்கும். தமிழ் மக்களின் பிரதிநிதிகள், மாலை சூடிக்களித்து திறந்து வைக்கும் "கம்பெரலிய" எனப்படும் கிராமஎழுச்சிகள், எல்லாம் இன்னொரு நிலப்பறிப்பின் மேலெழுப் பப்பட்ட சமாதிகள் என்பதை தமிழர் தரப்புக்கள் விரைந்துணர வேண்டியிருக்கிறது.

(19 ஆம் பக்கம் பார்க்க)

மஹிந்த பக்கம் கூட்டமைப்பு சாயாது!

அண்மையில் தொலைக்காட்சி விவாதம் ஒன்றில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்த கருத்துக்கள், அவற்றின் அவசியம் கருதி நேர்காணல் வடிவில் தரப்படுகின்றது.

கேள்வி: கல்முனைத் தமிழ்ப் பிரதேச செயலகம் தரமுயர்த்தப்பட வேண்டும் என்ற நீண்ட காலக் கோரிக்கையை முன்வைத்து அண்மையில் உண்ணா விரதப் போராட்டம் நடைபெற்றது. இதன் போது அங்கு சென்ற உங்களுக்கு எதிர்ப்பும் தெரிவிக்கப்பட்டது. இந்தப் பிரச்சினையையும், உங்கள் மீதான எதிர்ப்பையும் எப்படிப் பார்க்கிறீர்கள்?

சுமந்திரன்: கல்முனைத் தமிழ்ப் பிர தேச செயலகம் என்ற விடயம் 1989 ஆம் ஆண்டே ஆரம்பிக்கப்பட்ட விடயம். கேடபிள்யூ. தேவநாயகம் அவர்கள் அமைச் சராக இருந்த காலத்திலே அமைச்சர வைப் பத்திரமொன்றைச் சமர்ப்பித்து, 1993 இலே ஒரு தீர்மானம் எடுக்கப் பட்டிருந்தது. அங்குள்ள 58 கிராம சேவையாளர் பிரிவுகளை இரண்டாகப் பிரித்து, 29 கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கியதாக ஒரு பிரிவு தமிழ்ப் பிரதேச செயலகமாகவும், மிகுதி 29 கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடகிய இன்னொரு பகுதி, முஸ்லிம் பிரதேச செயலகமாகவும் இயங்க வேண்டு மெனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் தமிழ்ப் பிரதேச செயலகத்துக் குரிய உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட் டனர். அதற்குரிய கட்டடம் கட்டப்பட் டது. ஒரு காலத்தில் தமிழ்ப் பிரதேச செயலகத்துக்கெனத் தனியாக வங்கிக் கணக்குக் கூட இருந்தது. ஆனாலும் முழு அதிகாரங்களும் கொண்ட பிரதேச செயலகமாக அது இயங்கியிருக்க வில்லை.

இந்த நிலையில்தான் அதனை-உப செய லகமாக இருப்பதை முழுமையான பிர தேச செயலகமாக- தரமுயர்த்த வேண் டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட் டிருந்தது. ஆனால் இதனை நாங்கள் ஆராய்ந்த போது, கல்முனைத் தமிழ்ப் பிரதேச செயலகம் ஏற்கனவே இலங்கை யில் உள்ள பிரதேச செயலகங்களில் ஒன்றாகக் கணிக்கப்பட்டுள்ளது. ஆனால் நிதியதிகாரத்தையும், காணி அதிகாரத்தை யும் முழுமையாகச் செயற்படுத்த முடி யாத நிலையில் இயங்கி வருகின்றது.

அந்த அதிகாரங்கள் கல்முனை தமிழ், முஸ்லிம் ஆகிய இரு பிரதேச செயலகங் களுக்கும் பொதுவாகவே நடைமுறைப் படுத்தப்பட்டன. இதனாலேயே தனி யான பிரதேச செயலகமாக இயங்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்த போதும், முன்னர் இருந்த அரசாங்கங்களால் அது நடைமுறைக்கு கொண்டு வரப் படவில்லை. 2015 ஆம் ஆண்டு புதிய அரசு பதவிக்கு வந்தவுடன் ,அப்போது உள்நாட்டலுவல்கள் அமைச்சரிடம் இது தொடர்பில் பேச்சுவார்த்தையை நடத்தி இருந்தோம். அவரும் அதனைச் செய்து முடிப்பதாகச் சொல்லி இருந்தார். பின்னர் வஜிர அபேவர்த்தன, உள்நாட் டலுவல்கள் அமைச்சரானவுடன் அவரிட மும் இது குறித்துப் பேசினோம். அவரும் இணக்கம் தெரிவித்தார். இருப்பினும் இது குறித்து முஸ்லிம் அரசியல் தலை வர்களிடமும் பேசி இது தொடர்பான இணக்கப்பாட்டினைக் காணும் எண் ணத்தை அரசாங்கம் கொண்டிருந்தது.

கிட்டத்தட்ட ஒன்றரை வருடத்துக்கு முன்னதாக முஸ்லிம் அரசியல் தலைவர் களுடன் எனது வீட்டில் ஒரு சந்திப்பு நடந்தது. இதன்போது அவர்கள் எமது கோரிக்கையை ஏற்றுக் கொண்டிருந்த

"கல்முனைத் தமிழ்ப் பிரதேச செயல கத்தை முழுமையாக இயங்கச் செய்வ தில்எமக்கு எந்த ஆட்சேபனையும்இல்லை. ஆனாலும் கல்முனையில் ஒரு மேலதிக அரசாங்க அதிபர் ஒருவர் நியமிக்கப்பட வேண் டும், அப்படிச் செய்தால் இரு தரப்பும் வென்றதாக இருக்கும்" என்றார்கள். நாமும் அதற்குச் சம்மதித்தோம். இதற்கு அரசும் இணங்கியது. இதன் பின்னர் கல்முனைத் தமிழ்ப் பிரதேச செயலகம் என்பதை 'கல்முனை வடக்கு பிரதேச செயலகம்' எனப் பெயர் மாற்றம் செய்த தோடு, அதனை முழுமையான பிரதேச செயலகமாக முழுமையாகப் பிரகடனப் படுத்தும் அமைச்சரவைப் பத்திரமொன் றைச் சமர்ப்பிக்கவும் ஏற்பாடுகள் நடந் தன.

அப்போது நாங்கள், ஏற்கனவே அது பிரதேச செயலகமாக அமைச்சரவை யால் 1993இல் அங்கீகரிக்கப்பட்டு விட்ட தால், இன்னொரு அமைச்சரவைப் பத்தி ரம் அவசியமில்லை, எனவே அதனை முழுமையாக இயங்கச் செய்யுங்கள் என்று கூறினோம்.

இந்த நிலையில் கடந்தவருட இறுதி யில் ஆட்சிக் குழப்பம் ஏற்பட்டு, மீண் டும் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் அமைத்தபோது, கல்முனை விவகாரத்தை நாங்கள்வற்புறுத்திச்சொல்லியிருந்தோம். ஜனவரி மாதம் இது குறித்துப் பேசியி ருந்தோம். இதனையடுத்து ஏப்ரல் மாதத் தில் புதிய நடைமுறை ஒன்று கொண்டு வரப்பட்டது. அதாவது இரு செயலகங் ளுக்குமென தனித் தனியான கணக்கா ளர்கள் இருவர் அம்பாறை மாவட்ட செயலகத்தில் நியமிக்கப்பட்டு, நிதி தொடர் பான விடயங்களுக்காகச் செயற்படுவார் களெனச் சொல்லப்பட்டது.

ஆயினும் காணி சம்பந்தமாக ஒரு தேசியக் குழுவை அமைப்பதாகச் சொன் னார்கள்.

ஏனெனில் கல்முனை தமிழ்ப் பிரதேச செயலகத்துக்குள் உள்ளடங்கும் 29 கிராம சேவகர் பிரிவுகளும் நில ரீதியான தொடர்பைக் கொண்டவை. ஆனால் முஸ்லிம் பிரதேச செயலகத்துக்குள் வரும் 29 கிராம சேவகர் பிரிவுகளில், சில பிரிவுகள் நில ரீதியாகத் தொடர் பற்றவை. எனவே இது தொடர்பாக என்ன தீர்வை எட்டலாம் என்பதைத் தீர் மானிக்கவே இந்தத் தேசிய குழு அமைக் கப்படுவதாக அரசு கூறியது. இந்தத் தீர்வு தொடர்பில் நாம் ஒரு காலக்கெடுவைக் கோரினோம். இதனையடுத்து ஜூன் 30 ஆம் திகதிக்கு முன்னதாக, தேசியக் குழு வின் மூலம் காணி விவகாரத்துக்கு தீர்வி னைக் கண்டு, கல்முனைத் தமிழ்ப் பிர தேச செயலகத்தை முழுமையாக இயங்க வைப்பதாக அரசாங்கம் எமக்கு வாக்கு றுதியளித்தது.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் தான்- ஜூன் 30 வரை அரசு கால அவகாசம் கோரியிருந்த நிலையில் ஜூன் நடுப்பகுதி யில்- கல்முனை விவகாரம் தொடர்பான உண்ணாவிரதப் போர்ராட்டம் திடீரென ஆரம்பிக்கப்பட்டது. இந்தப் போராட் டம் ஆரம்பிக்கப்பட இருப்பது குறித்து எமக்கும் முதலில் தெரிந்திருக்கவில்லை. எனினும் போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட வுடன் அரசுடன் பேசினோம். அப்போது "கல்முனைத் தமிழ்ப் பிரதேச செயலகத் துக்கென கணக்காளர் ஒருவர் நியமிக்கப் பட்டு விட்டார். ஆயினும் காணி விட யத்தைத் தீர்ப்பதற்கு தேசியக்குழு அமைக் கப்பட்டிருந்தாலும், அது இன்னும் நடை முறைக்கு வரவில்லை. குறிப்பாக ஈஸ்டர் தாக்குதல்களால் நாட்டில் ஏற்பட்ட குழப் பங்களால் அதனைச் செயற்படுத்தமுடிய வில்லை. ஆயினும் அதனை இப்போது உடனடியாக ஆரம்பித்து 3 மாதங்க ளுக்குள் கல்முனைப் பிரதேச செயல கத்தை இயங்க வைப்போம்" என அரசுத் தரப்பில் எமக்குச் சொல்லப்பட்டது.

இந்தப் பிரச்சினையைத் தீர்க்க 3 மாதங் கள் தேவையில்லை எனவும், எழுத்து வடி விலான உத்தரவாதத்தை வழங்குமாறும் கோரினோம். அதற்கமைய எழுத்திலே 3 மாத கால அவகாசத்தையும் கேட்டு அர சால் உத்தரவாதம் வழங்கப்பட்டது.

இந்தச் சூழ்நிலையில் உண்ணாவிரத மிருப்பவர்களுக்கு இந்தச் செய்தியைச் சொல்ல வேண்டும் என்று அம்பாறை மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் எம்.பி கோடீஸ்வரன் என்னைக் கேட்டுக் கொண்டார். அமைச்சர் மனோ கணேசன், தயா கமகே ஆகியோர் அன்று உண்ணாவிரதிகளைச் சந்திக்கச் செல்ல இருப்பதால், அவர்களோடு சென்று, அரசு எமக்கு எழுத்தில் கொடுத்த வாக்குறு தியை அறிவிக்கும்படியும் கோரியிருந் தார்.

இதனையடுத்து உண்ணாவிரமிருந்தோ ரைச் சந்தித்து, அரசின் உறுதிமொழி யைச் சொன்னேன். அப்போது "அரசாங் கம் 3 மாத அவகாசம் கேட்டிருக்கிறது" என்று சொன்னதை, அங்கிருந்தவர்களால் அதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

" எங்களால் இதை ஏற்றுக் கொள்ள முடியாது. இதைச் சொல்லவா இங்கு வந்தீர்கள்?" எனக் கோபமாகச் சத்தமிட்டார் கள். எனக்குப் பின்னர் மனோ கணேசன் அவர்களோடு பேசிப் பார்த்தார். அது வும் சரிவரவில்லை. தயா கமகேயும் பேசிப்பார்த்தார். ஆனால் அங்கிருந்தவர்க ளின் கோபம் இன்னும் அதிகரித்ததே தவிர குறையவில்லை. அதன் பின்னரும் நாங்கள் அங்கு அதற்கு மேல் சொல்வ தற்கோ, செய்வதற்கோ எதுவுமிருக்கவில்லை. ஆகையால் அங்கிருந்து அகன்று, சென்ற போது, கூச்சலிட்டார்கள். தாக்க முற்பட் டார்கள். எனினும் எந்தப் பாதிப்புமில் லாமல் அனைவரும் பத்திரமாகத் திரும்பி னோம்.

இதற்கு அடுத்த நாள் பொதுபல சேனாவின் ஞானசார தேரர் அங்கு போயி ருந்தார். எமக்கு அமைச்சர் வஜிர அபே வர்த்தன கொடுத்த அதே கடிதத்தைத் தான் அவரும் கொண்டுபோய், அதைத் தான் அவரும் வாசித்துக் காட்டினார். ஆனால் அரசு 3 மாத அவகாசம் கேட் டுள்ள போதும், தான் ஒரு மாதத்தில் தீர்வைப் பெற்றுத் தருவதாகச் சொன்ன போது, அதை ஏற்றுக்கொண்டு உண்ணா விரதத்தைக் கைவிட்டிருக்கிறார்கள். இது தான் கல்முனையில் நடந்தது.

இந்த உண்ணாவிரதப் போராட்டத் தில் ஈடுபட்டவர்கள், குழப்பத்தில் ஈடு பட்டவர்கள் யாரென்பது குறித்தும், அவர் களின் பின்னணியில் இயங்குவது யாரென் றும் இப்போது எமக்குப் புதிய தகவல் கள் கிடைத்துள்ளன. தமிழ்-முஸ்லிம் மக்கள் இந்தப் பிரச்சினையைப் பேசித் தீர்க்க விடாமல், அதனை விரிசலாக்கி, பிரச்சனையை நீட்டிக்கவே இப்படியான குழப்பங்கள் உண்டுபண்ணப்பட்டன. இது ஒரு துரதிர்ஷ்டமான செயல்.

கேள்வி: விநாயகமூர்த்தி முரளிதரன்(கருணா), வியாழேந்திரன் ஆகியோ ருக்கு அந்தப் போராட்டத்தில் வரவேற்பு அளிக்கப்பட்டது, ஆனால் உங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது அப் படியாயின் இந்த விடயத்தில் இனவாதி கள் வெற்றி பெற்றுள்ளார்களா?

சுமந்திரன்: இனவாதிகளுக்கு வெற்றி கிடைத்ததாக நான் சொல்லமாட்டேன். ஆனால், இனவாதிகளால் நடத்தப்பட்ட ஓர் போராட்டம். இனவாதிகள் என்று சொல்கிறபோது, தமிழ் மக்களுக்கு எதிரா னவர்களும் முஸ்லிம் மக்களுக்கு எதிரான வர்களும் நடத்திய ஒரு போராட்டமாகத் தான் நான் அதைப் பார்க்கிறேன்.

ஏனென்றால், விரிசலை ஏற்படுத்தவேண்டும் என்பதற்காகவும் இரு தரப்பினரையும் ஏதாவதொரு வகையில் மோத வைக்க வேண்டுமென்பதற்காகவும் சதித்திட்டம் தீட்டப்பட்டு இது நடந்திருக்கிறது. துரதிர்ஷ்டவசமாக முஸ்லிம் எதிர்ப்பை வெளிப்படுத்துகின்ற தமிழ்த் தரப்புகள் இதில் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறார்கள். ஆகவே, இது வருத்தப்படக்கூடிய ஒரு விடயம். அரசியல் தலைவர்களாகிய நாங்கள் எங்களுக்குள் ஓர் இணக்கப்பாட்டை ஏற்படுத்தி ஓரளவு முன்னேறுகிறோம். நிலப் பரப்புத் தொடர்பான பிரச்சினைகளைப் பேசித் தீர்ப்பதற்கு அதற்கென ஒரு பொறிமுறையையும் நாம் ஏற்படுத்தியுள்ளோம். மிகுதி விடயங்களிலும் நாம் இணங்கியுள்ளோம். இது செய்யப்படவேண்டும் என்பதை முஸ்லிம் தரப்பும் சொல்லியிருக்கிறது.

கேள்வி: கல்முனையில் தமிழ்ப் பிரதேசம் உருவாக முஸ்லிம் காங்கிரஸ் தடையாக இருக்கவில்லையா?

சுமந்திரன்: தமிழ்ப் பிரதேச செயலகம் உருவாவதற்குத் தாங்கள் தடையாக இருக்கமாட்டோம் எனச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், நிலத்தொடர்பற்ற தங்களுடைய எல்லைப் பிரச்சினையைத் தீர்க்காமல் இதைச் செய்யக்கூடாது என்று சொல்கிறார்கள். அதை நாங்கள் பேசித் தீர்ப்போம் எனச் சொல்லியிருக்கிறோம். ஆகவே இது பொறுப்போடு இரு தரப்பினரும் வந்து பேசித்தீர்த்து முன்னேற வேண்டிய விடயம். இதை செய்ய வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இருக்கவில்லை. ஆனால், அப்படியாகத் தீர்ந்து விடுமோ என்று பயந்த அஞ்சிய சிலர் இடையிலே புகுந்து ஏற்படுத்திய குழப்பமாகத்தான் நான் இதைப் பார்க்கிறேன்.

ஆனால், இந்த சம்பவம் நடந்ததும் ஓரளவுக்கு நல்லது. இதன் பின்னணியில் யார் இருந்தார்கள்? எப்படியாக இது நடத்தப்பட்டது போன்ற விடயங்கள் எல்லாம் வெளியே வந்துள்ளன.

கேள்வி: நீங்கள் சொல்வதைப் பார்க்கும் போது, கல்முனை விவகாரத்தைக் குறுகிய காலத்துக்குள் தீர்த்திருக்க முடியும். ஆனால் அரசாங்கத்தோடு நீங்களும் சேர்ந்து சுமார் நான்கரை வருடங்களை இழுத்தடித்தமை மக்களின் கோபத்துக்கு காரணமாக இருக்கலாமல்லவா?

சுமந்திரன்: அதுவும் ஒரு காரணம் தான். அரசாங்கத்துக்கு இரு தரப்பையும் சமாதானமாகக் கொண்டு செல்ல வேண்டிய தேவை இருக்கிறது. அதில் நான் ஒரு விடயத்தைச் சொல்ல வேண்டும். தமிழ்த் தரப்பினர் அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எதிர்த்தரப்போடு (மஹிந்த அணியோடு) சேர்ந்து போகமாட்டார்கள் என்ற நம்பிக்கை ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்துக்கு இருக்கிறது போலத் தென்படுகிறது. ஆனால், முஸ்லிம் அரசியல் தலைமைகளைப் பொறுத்தவரையிலே அப்படியான நம்பிக்கை அவர்களிடத்தே இல்லை. ஏனென்றால் அவர்கள் மகிந்த ராஜபக்ஷ அணியிலும் முன்னர் இருந்திருக்கிறார்கள். அவர்களைக் கோபித்துக்கொண்டால் அவர்கள் உடனடியாக மஹிந்த பக்கம் போய்விடுவார்கள். ஆகவே எங்களுடன் கூடுதலாக முரண்பட்டாலும் நாங்கள் மஹிந்த அணிக்குப் போகிற ஆபத்தில்லை. ஆனால் முஸ்லிம் அரசியல்வாதிகளைக் கோபித்தால் அவர்கள் போய்விடுவார்கள் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப்பீடம் சிந்திக்கிறது போலத் தென்படுகிறது.

கேள்வி: இந்த நான்கரை வருடத்தில், இந்தச் சிறிய விடயத்தைக் கூட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் ஏன் நிறைவேற்ற முடியவில்லை?

சுமந்திரன்: சிறிய விடயம் என்றாலும், 93ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இன்னமும் நிறைவேற்றப்படாமல் இருப்பதற்கு ஒவ்வொரு காரணங்கள் இருக்க வேண்டும். ஆகவே, இப்போதுதான் அதனைத் தீர்ப்பதற்கான வழிமுறைக்கு நாங்கள் இணங்கியிருக்கிறோம். எங்களைப் பொறுத்தவரையில் முஸ்லிம் மக்களோடு இருக்கின்ற இப்படியான பிரச்சினைகள் எந்த வகையானதாக இருந்தாலும் பேசித் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினை - எங்களுக்குள்ளே இணங்கித் தீர்க்கப்படவேண்டிய பிரச்சினை. விட்டுக்கொடுப்புகளுடன் கூடிய அணுகுமுறையைத்தான் நாங்கள் கையாள வேண்டும். அது அத்தியாவசியமானது. அதில் நாங்கள் தவறுவோமாக இருந்தால், அது எங்களுக்கும் கேடாக இருக்கும். முஸ்லிம் மக்களுக்கும் கேடாக இருக்கும்.

ஏனென்றால் நாட்டிலே அந்தப் பெரிய தரப்பை நாங்கள் மறந்துவிடக்கூடாது. 70 அல்லது 75 வீதம் பெரும்பான்மையாக இருக்கின்ற தரப்பு, மிகுதியாக இருக்கின்றவர்கள் இரண்டாகப் பிரிந்திருப்பதை எப்பொழுதுமே விரும்புவார்கள். ஆகவே, அதற்கு நாங்கள் இடம் கொடுத்துக்கொண்டிருப்போமாக இருந்தால் அல்லது எங்களின் விடயத்தைச் சாதிக்க வேண்டுமென்பதற்காக அந்தப் பெரிய தரப்போடு சேர்ந்து மற்றவர்களை நாங்கள் அடக்க நினைப்போமாக இருந்தால், அது எங்களையும் அடுத்த தடவை தாக்கும். ஆகவே, இரண்டு தரப்பினரும் இதை மிகவும் திட்டவட்டமாக அறிந்து, எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பெரும்பான்மை சமூகத்துக்கு அப்படியான ஒரு பிடியைக் கொடுக்காத வகையிலே எங்களுக்குள்ளே பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள முழுமையான முயற்சியை எடுக்கவேண்டும். எப்போதும் அது அப்படி நடப்பதில்லை. அவசரப்படுகிறார்கள், உணர்ச்சிவசப்படுகிறார்கள். குறைபடுகிறார்கள்.

எனினும், குறைகளைச் சொல்லலாம். இரு தரப்பிலும் நிறையக் குறைகள் இருக்கின்றன. ஆனால், அந்த பெரிய தரப்பை நாங்கள் மறந்துவிடுவோமாக இருந்தால், எங்களுக்கு நாங்களே கேடு விளைவிப்பதாக அமைந்துவிடும்.

கேள்வி: முஸ்லிம் தரப்பு மீது அரசுக்குப் பயமிருக்கிறது. ஆனால் உங்களைப் பற்றி அரசுக்கு அச்சமில்லை என்கிறீர்கள்.அப்படியான நிலைக்கு உங்களின் விட்டுக் கொடுக்கும் போக்கு காரணமா?

சுமந்திரன்: அது எங்களுடைய கொள்கை நிலைப்பாடு. எனினும், நாங்கள் அரசாங்கத்தில் ஓர் அங்கமாகவும் இல்லை. அவர்கள் நாங்கள் போவோம் என்று சொல்வதற்கும் ஒன்றும் இல்லை. இன்னும் எதிர்க்கட்சியில்தான் இருக்கிறோம். ஆனால், அரசாங்கம் இன்று ஆட்சியிலே இருப்பதற்கு நாங்கள்தான் காரணம். எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு ஆட்சியிலே குழப்பம் ஏற்பட்டபோது அதைத் தீர்க்கமுக்கியமாக பங்களித்தவர்கள் நாங்கள். ஜே.வி.பி. கூட அரசாங்கத்துக்கு ஆதரவு கொடுக்கவில்லை. அதெல்லாம் அப்படி இருக்கத் தக்கதாகவும், எங்களுடைய அப்படியான ஆதரவு தங்களை விட்டுப் போய்விடாது என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருப்பதைப்போலத் தென்படுகிறது. ஆகவே அரசாங்கத்தோடு நாங்கள் இந்த விடயம் குறித்துப் பேசியிருக்கின்றோம். இது தொடர்ந்து இருக்குமென்று நீங்கள் எதிர் பார்க்கக்கூடாது என்று சொல்லியிருக்கின்றோம். ஏனென்றால் எங்களுடைய மக்களின் மனநிலை மாறத்தொடங்கியிருக்கிறது. நாங்கள் கொடுங்கோலாட்சி என்று சொல்லி, ஒரு பகுதியை ஆட்சியிலிருந்து அகற்றினோம். ஆனாலும் இதிலேயிருந்தும் எங்களுக்கு ஒன்றுமே கிடைக்கவில்லை என்று சொன்னால், நாங்கள் அப்படிச் செய்ததில் என்ன பிரயோசனம் எனப் பலரும் நினைக்கத் தொடங்கியுள்ளார்கள். நான் அதற்கு இணங்கவில்லை. ஆனாலும், பலர் அப்படியாக நினைக்கிறார்கள். அந்த விடயத்தை நாங்கள் அரசாங்கத்துக்குச் சுட்டியிருக்கின்றோம். நானே நேரடியாக பிரதமரிடம் கடந்த வாரம் கூறியுள்ளேன். "இது இப்படியே போகுமானால் நீங்கள் நினைப்பதுபோல நாங்களும் செயற்படமாட்டோம். நிலைமை மாறும் "என்பதை அவர்களுக்குச் சொல்லியிருக்கிறோம்.

ஆகவே கல்முனை விவகாரம் ஒரு சிறிய விவகாரம் என்று நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன். ஓரளவுக்கு அது சிறிய விவகாரமாக இருந்தாலும், தமிழ் - முஸ்லிம் உறவைப் பார்க்கும்போது அது மிகவும் கவனமாகக் கையாளப்பட வேண்டிய விடயம். அப்படித்தான் நாங்கள் கையாண்டிருக்கிறோம். எடுத்தோம் கவிழ்த்தோம் என்று அவர்கள் மீது நாம் வசைபாடவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் இதைச் செய்ய முடியாமல் போய்விட்டதே என்ற ஆதங்கத்தில் ஏதேனும் பேசியிருக்கக்கூடும். ஆனால் நீங்கள் தலைமைத்துவத்தைப் பார்ப்பீர்களாக இருந்தால், இந்த விடயத்தைக் கையாளுகின்றபோதுகூட முஸ்லிம் தரப்பைக் குறைகண்டுபிடித்து, ஆக்ரோஷமாகச் செயற்படவில்லை.

கேள்வி: இதே விட்டுக் கொடுப்பு அணுகுமுறை முஸ்லிம் அரசியல்வாதிகளிடமும் உண்டா?

சுமந்திரன்: முஸ்லிம் அரசியல்வாதிகள், தாங்கள் தேர்தல்களில் வெல்ல வேண்டும். அதற்கு மாறாக எதையும் செய்வதற்கு அவர்கள் தயாராகவில்லை. விட்டுக்கொடுப்பு என்று வரும்போது எங்களிடம் விட்டுக்கொடுப்பை எதிர்பார்க்கிறார்கள். அவர்கள் பக்கத்திலிருந்து விட்டுக்கொடுப்பு என்பதற்கு எதுவும் கிடையாது.

ஆயினும் கல்முனை விடயத்தில் நியாயம் இருப்பதால், இது செய்யப்படவேண்டிய விடயம் என்பதை தனிப்பட்ட ரீதியில் எங்களுடன் இணங்குகிறார்கள். ஆனால், பகிரங்கமாக இதுவரை அதனைச் சொன்னது கிடையாது. எங்களுடன் இணங்கியுள்ளதை நான் இப்போது பகிரங்கமாகச் சொல்ல ஆரம்பித்துள்ளேன். ஏனென்றால் அதுதான் உண்மை. என்னுடைய வீட்டில் வைத்து ஹரிஸ் எம்.பி., நீங்கள் கேட்கிறது நியாயமானதுதான், இதை நாங்கள் தடுக்கக் கூடாது என்றெல்லாம் சொன்னார்.

கேள்வி: உண்ணாவிரதப் போராட்டத்துக்குப் பின்னரும், தமிழருக்கு கிடைக்கும் அதிகாரத்தைப் பறிக்க மாட்டோம் என்று முஸ்லிம் அரசியல்வாதிகள் சொல்லியிருக்கிறார்களே?

சுமந்திரன்: நாடாளுமன்றத்தில்லே ஹரிஸ் எம்.பிக்கும் சிறிதரன் எம்.பிக்கு மிடையில் நடந்த உரையாடலிலே இருவரும் பகிரங்கமாக குறித்த விடயங்களைப் பேசியிருந்தார்கள். அது வரவேற்கத் தக்கது. ஏனென்றால் முரண்பாடுகள் இல்லாமல் இருக்கும் என நாங்கள் எதிர்பார்க்க முடியாது. தீர்த்துக்கொள்ளும் அணுகுமுறைகளில்தான் அனைத்துமே தங்கியிருக்கின்றன.

கேள்வி: கல்முனை விவகாரத்தில் பௌத்த பிக்குகளோடு இணைந்து தமிழ்த் தரப்புகள் போராடுவதற்கு இது உகந்த காலமா?

சுமந்திரன்: அதை தமிழ்த் தரப்பு என நீங்கள் சொன்னாலும், அது தமிழர்களாலே ஏற்றுக்கொள்ளப்பட்ட தரப்பு அல்ல. அது தொடர்ச்சியாக தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்ட - தமிழ் மக்களுக்குக் கேடு விளைவிக்கின்ற தமிழர்கள்தான் அப்படியான சில அணுகுமுறைகளைக் கையாண்டிருக்கிறார்கள்.

கேள்வி: அப்படியான தரப்புக்களில் உங்கள் கட்சியின் எம்.பி கோடீஸ்வரனும் உள்ளடங்குகிறாரா?

சுமந்திரன்: கோடீஸ்வரனுக்கு உண்ணாவிரதத்தை நடத்துவதிலோ, கலந்துகொள்வதிலோ ஈடுபாடு இருக்கவில்லை. அந்த மாவட்டத்தின், நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையிலே இப்படியான ஒரு போராட்டம்நடைபெறுகின்றபோது,

அவர் அங்கு போயிருக்கக்கூடும்.

கேள்வி: இது குறித்து அவர் உங்களோடு பேசித் தெளிவு பெறவில்லையா?

சுமந்திரன்: அவருக்கு அதற்கான விளக்கம் தெளிவாக உள்ளது. நான் அன்று அங்கு சென்றதற்கும் பிரதானமான காரணம் அவர்தான். என்னை முதலிலே மனோ கணேசன் கேட்டபோது, நான் வரவில்லை என்றுதான் கூறினேன். நீங்கள் அமைச்சர் என்ற ரீதியிலே அங்கு சென்று அரசாங்கம் கொடுத்த வாக்குறுதியை அங்கு சென்று எடுத்துக்கூறுங்கள் என்றுதான் கூறியிருந்தேன். அதற்குப் பிறகு கோடீஸ்வரன் என்னுடன் பேசினார்.

(06ஆம் பக்கம் பார்க்க)



மஹிந்த பக்கம் கூட்டமைப்பு சாயாது!

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

நீங்கள் தயவுசெய்து இங்கு வாருங்கள் எனக் கேட்டார். நான் தனியத்தான் இங்கே நிற்கிறேன் என்றார். அவருடன் கூட அங்கு வேறு எந்த நாடாளுமன்ற உறுப்பினரும் சென்றிருக்கவில்லை. அதனால், அவருக்கு அங்கே ஒரு இக்கட்டான நிலை இருந்தது. அதனால்தான் நான் அங்கு போக வேண்டி ஏற்பட்டது.

அவர் அதனைச் செய்து முடிக்க வேண்டிய கடமையில் உள்ளார். குறித்த மாவட்ட மக்கள் அவரிடம் அதை எதிர் பார்க்கிறார்கள். ஆகவே அவர் அங்கு ஆக்ரோஷமாகப் பேசுவதை எங்களால் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால், தவறான வழியிலே - இனவாதக் கருத்துள்ள சிங்களத் தரப்புடன் சேர்ந்து இதைச் செய்வதற்கு அவருக்கு இணக்கப்பாடு கிடையாது.

கேள்வி: இந்தப் போராட்டத்தில் பங்கு பற்றாவிட்டால் அடுத்த தேர்தலில் தோற்று விடுவோம் என்று கோடீஸ்வரன் எண்ணியிருக்கலாமே?

சுமந்திரன்: அப்படியல்ல... இந்த விடயத்தைச் செய்து முடிப்பது நியாயமானது. அதைச் செய்து முடிக்கவேண்டிய பொறுப்புத் தனக்கு இருப்பதை உணர்ந்திருக்கிறார். அவர் அதைச் செய்ய வேண்டும். அதுதான் அவருடைய நோக்கமும்.

கேள்வி: உண்ணாவிரதம் நடைபெறும் இடத்துக்குச் சென்றதன் மூலம் அதற்கு அவர் ஆதரவு தெரிவித்ததாகத் தானே அர்த்தம்?

சுமந்திரன்: அவர் அந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தாரா என்பது எனக்குத் தெரியாது. ஆனால், வியாழேந்திரனைப்போல அங்கு போய் அமர்ந்திருந்து, அவர் அந்த உண்ணாவிரதத்தில் ஈடுபடவில்லை. அது நடந்த இடத்தில் அவர் போய் நின்றார். அவ்வளவுதான்.

கேள்வி: இது கட்சிக்குத் தெரியுமா? இது தவறென்று கட்சி கருதவில்லையா?

சுமந்திரன்: அது தவறு என்று நான் கூறவில்லை. ஆனால், அந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் அவர் ஈடுபடவில்லை. அதேவேளை, உண்ணாவிரதப் போராட்டத்தைக் கண்டுகொள்ளாமல் தூரத்தில் இருக்கவும் இல்லை. இதைக் கூட்டமைப்பும் அனுமதித்திருந்தது. குறித்த போராட்டத்தின் கோரிக்கை நியாயமானது. ஆனால் அணுகுமுறைதான் தவறாக இருந்தது. அந்த இரு முறைமைகளுக்கும் அகப்பட்டவராகத்தான் அவர் காணப்பட்டார்.

கேள்வி: முன்னாள் ஜனாதிபதிகளான பிரேமதாஸ, டி.பி. விஜயதுங்க, சந்திரிகா மகிந்த போன்றவர்களால் தீர்க்க முடியாதளவு பிரச்சினையாக கல்முனைப் பிரதேச செயலக விவகாரம் ஏன் இழுபட்டது?

சுமந்திரன்: ஏன் அவ்வளவு காலம் அது தீர்க்க முடியாமல் இருந்தது என எனக்குத் தெரியாது. ஆனால், அந்தப் பிரதேச செயலகம் இயங்கி இருக்கிறது. சில அதிகாரங்கள் முழுமையாக செயற்படுத்தப்படவில்லை என்றாலும் மக்களின் உடனடித் தேவைகள் பலவற்றைக் கவனித்த பிரதேச செயலகம் அது. ஆயினும் அங்கு முழுமையான அதிகாரங்களைப் பயன்படுத்தவில்லை என்ற ஓர் ஆதங்கம் மக்களிடத்திலே இருந்திருந்தாலும் அதன் மூலமாகப் பல நன்மைகள் மக்களுக்குத் தொடர்ச்சியாகவந்துகொண்டுதான் இருந்தன. ஆகவே அது செய்ய வேண்டும் என்ற நிலைப்பாடு இருந்தாலும், அதை ஒரு பெரிய போராட்டமாக அவர்கள் முன்னெடுத்திருக்கவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐ.தே.கவுக்கு ஆதரவாக, அரசாங்கம் அமைப்பதற்கு உதவியாக இருக்கிற இந்த வேளையிலாவது அவர்கள் எங்களுடைய நியாயமான கோரிக்கையை நியாயமான முறையில் தீர்த்து வைத்தால் என்ன என்ற நிலைப்பாட்டுக்கு மக்கள் வந்திருந்தார்கள். அது நியாயமான ஓர் எதிர்பார்ப்பு.

கேள்வி: இந்தப் பிரதேச செயலகத்தை எப்படி அழைப்பது என்ற பிரச்சினை இருக்கிறது. கல்முனை வடக்கு பிரதேச செயலகமா? கல்முனை தமிழ்ப் பிரதேச செயலகமா? இதற்கு கல்முனை மாநகரசபை, நகரம் என்பன வருகின்றன. இவை வருவதால் தான் முஸ்லிம்கள் இந்தக் கோரிக்கையை எதிர்க்கிறார்களா?

சுமந்திரன்: இல்லை. இதில்எல்லைகளைக் குறித்துப் பிரச்சினை கிடையாது. ஏனென்றால் தற்போது இயங்குகின்ற 2 பிரதேச செயலகங்களும் தலா 29 கிராம சேவையாளர் பிரிவுகளைக் கொண்டு இயங்குகின்றன. ஆகவே அதில் ஒரு பிரச்சினையும் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் கல்முனை தெற்கு அல்லது முஸ்லிம் பிரதேசமாக இருப்பவைகள் நிலத் தொடர்பற்று இருக்கின்றன. அவர்கள் அதை ஒரு காரணமாகச் சொல்கிறார்கள். இன்னொன்று கல்முனை நகரம். அது தமிழ்ப் பிரதேசமாக இருந்தாலும் அங்கே கூடுதலாக முஸ்லிம் மக்கள் வாழ்கின்றனர். அவர்களின் வியாபார ஸ்தலங்கள் இருக்கின்றன. ஆகவே இதனை நாங்கள் சரியான வழியிலே நிர்வகிக்க தொடங்கும்போது அதிலே மாற்றங்கள் ஏற்பட வேண்டும் என்ற கோரிக்கை இருக்கிறது. நாங்கள் அதனை மறுக்கவில்லை. அந்த விடயங்கள் சம்பந்தமாகத்தான் நாங்கள் அந்தத் தேசிய குழுவிலே பேசி முடிவெடுக்கலாம் என்று சொல்லியிருக்கிறோம். நிலத்தொடர்பு ஏற்படுத்த வேண்டுமாக இருந்தால் அதை ஏதாவது ஒரு விதத்திலே செய்ய முடியுமா என ஆராயலாம் என்று நாங்கள் சொல்லியிருக்கிறோம். ஆனால் நிலத் தொடர்பு இல்லை என்ற ஒரு காரணத்துக்காக இதை எதிர்க்க வேண்டிய தேவையில்லை. ஏனென்றால் நிலத் தொடர்பு இல்லாத பல பிரதேச செயலகங்கள் பல இடங்களில் இருக்கின்றன. முஸ்லிம் பிரதேச செயலகங்களும் இருக்கின்றன. ஆகையினாலே நிலத் தொடர்பு கட்டாயமாக இருக்க வேண்டும் என்ற தேவைப்பாடு கிடையாது. ஆனால் கல்முனை நகரம் அல்லது பட்டினம் போன்ற சில விடயங்கள் சம்பந்தமாக சில மாற்றங்களை செய்வதற்கு நாங்களும் இணங்கியிருக்கிறோம். ஆனால் அவை என்ன மாதிரியான மாற்றங்கள்? எப்படி செய்ய வேண்டும்? எங்கே வரைபை செய்ய வேண்டும் என்பதை அமர்ந்திருந்து தீர்மானித்து முடிக்க வேண்டும்.

கேள்வி: கல்முனைக்குத் தனியான கணக்காளர் ஒருவர் நியமிக்கப்படுவதாக வாக்குறுதி அளிக்கப்பட்டது. அது நடைமுறைக்கு வந்துள்ளதா?

சுமந்திரன்: நியமிக்கப்பட்டிருக்கிறார் என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது.

கேள்வி: நியமிக்கப்பட்டிருக்கிறாரா? தேடிப் பார்த்தீர்களா?

சுமந்திரன்: அப்படி ஒருவர் இருப்பதாக எங்களுக்குத் தெரியாது. வாக்குறுதியை அரசு எழுத்தில் தருகிறபோது கோடீஸ்வரன் சொன்னார் "அண்ணை நான் போய் தேடிப் பார்த்தேன். கணக்காளர் ஒருவரும் இல்லை" என்று. அவருக்கு நான் சொன்னேன் "பரவாயில்லை. அவர் (அமைச்சர்) எழுதித் தாறார். அவர் எழுதித் தரட்டும் முதலில். பிறகு ஆள் எங்கே என்று கேட்போம்" என்று சொன்னேன். அப்படித்தான் அதை வாங்கி வந்தோம். அமைச்சர் சொல்கிறார் "கணக்காளர் அம்பாறை மாவட்ட செயலகத்தில் இருக்கிறார்" என்று. நான் சொன்னேன் "அவர் அம்பாறையில் இருந்து என்ன பிரயோசனம்? அவர் இங்கே வந்து செயற்பட வேண்டும்" என்று. "சரி அடுத்த கிழமை அனுப்புறோம்" என்று சொன்னார்கள் ஆனால் இன்னமும் ஆள் வரவில்லை.

(14ஆம் பக்கம் பார்க்க)



பொய்யில் எழும் டிரம்பின் பிம்பம்

2016இல் ட்ரம்ப் தன்னை வித்தியாசமான தொரு குடியரசுக் கட்சிக்காரராகக் காட்டிக்கொண்டார். ஆனால், நடைமுறையில் அவரது பொருளாதாரச் செயல்பாடு என்பது ஜி.ஓ.பி. அடிப்படையிலானது: பெருநிறுவனங்களுக்குப் பெருமளவிலான வரிக்குறைப்பு, அதே நேரத்தில் சமூகப் பாதுகாப்பு வலைப்பின்னலைச் சிதைப்பது. இதுதான் ட்ரம்ப்பிஸம்! இந்தக் கொள்கைகள் இன்று அளவுக்கதிகமாக கிராமப்புற அமெரிக்காவைத்தான் பாதித்துக் கொண்டிருக்கின்றன. ட்ரம்பின் வரிக்குறைப்பு விவசாயிகளைப் பெரிதும் கண்டுகொள்ளவில்லை. ஏனெனில், அவர்கள் பெருநிறுவனத்தினர் இல்லை,

அமெரிக்க வேளாண் துறையின் பொருளாதார ஆய்வு சேவையிலிருந்து, பொருளாதார நிபுணர்கள் விலகி ஓடிக்கொண்டிருப்பதாக 'பொலிட்டிக்கோ' இதழ் தெரிவிக்கிறது. சில வாரங்களுக்கு முன் ஒரே நாளில் ஆறு பேர் பதவிகளை ராஜிநாமா செய்திருக்கிறார்கள். காரணம்? ட்ரம்ப் பின் கொள்கைகளைத் துதிபாடாத அறிக்கைகளை வெளியிட்டதால் தாங்கள் தண்டிக்கப்படுவதாக அவர்கள் உணர்ந்ததால்தான் இந்நிலை. ஆனால், அந்த அறிக்கைகள் எல்லாம் உண்மையைப் பிரதிபலிக்கின்றனவே தவிர வேறெதுவும் இல்லை.

கிராமப்புற அமெரிக்கா என்பது ட்ரம்ப்பின் பிரதான அடித்தளம். இன்னும் சொல்லப்போனால், கிராமப்புறங்கள்தான் ட்ரம்ப் மொத்த நேர்மறை ஆதரவு மதிப்பை அமெரிக்க அளவில் பெற்றிருக்கும் இடங்கள். ஆனால், ட்ரம்ப்பின் கொள்கை முடிவுகளால் அதிக சேதங்களை எதிர்கொள்ளும் பகுதிகளும் அவையே.

2016- இல் ட்ரம்ப் தன்னை வித்தியாசமான தொரு குடியரசுக் கட்சிக்காரராகக் காட்டிக் கொண்டார். ஆனால், நடைமுறையில் அவரது பொருளாதாரச் செயல்பாடு என்பது ஜி.ஓ.பி. அடிப்படையிலானது: பெருநிறுவனங்களுக்குப் பெருமளவிலான வரிக்குறைப்பு, அதே நேரத்தில் சமூகப் பாதுகாப்பு வலைப்பின்னலைச் சிதைப்பது. இதுதான் ட்ரம்ப்பிஸம்! இந்தக் கொள்கைகள் இன்று அளவுக்கதிகமாக கிராமப்புற அமெரிக்காவைத் தான் பாதித்துக்கொண்டிருக்கின்றன. ட்ரம்பின் வரிக்குறைப்பு விவசாயிகளைப் பெரிதும் கண்டு கொள்ளவில்லை. ஏனெனில், அவர்கள் பெருநிறுவனத்தினர் இல்லை, அவர்களில் பணக்காரர்கள் மிகக் குறைவு.

ட்ரம்ப் தரப்பு கோபத்தைத் தூண்டிவிட்ட வேளாண்துறை பொருளாதார நிபுணர்கள் வெளியிட்ட ஆய்வறிக்கைகளுள் ஒன்று, விவசாயிகளுக்கு வரிச்சலுகை கொடுக்கப்பட்டாலும்கூட அதன் பலன்கள் பெருமளவுக்கு 10% பணக்காரர்களுக்கே போய்ச்சேர்கின்றது என்றும் ஏழை விவசாயிகளுக்கு ஏற்கனவே உள்ளதைக் காட்டிலும் சற்று வரி உயர்ந்திருக்கிறது என்றும் சுட்டிக்காட்டுவது இங்கே குறிப்பிடப்பட வேண்டியது. ஆக, பாதுகாப்பு வலைப்பின்னல் மீதான தாக்குதல் என்பது

பாதுகாப்புத் திட்டங்களை வெகுவாகச் சார்ந்திருக்கும் கிராமப்புற அமெரிக்கர்வுக்குப் பெருமளவுக்குத் தீமை விளைவிப்பதாக மாறியிருக்கிறது. மலிவுவிலை உணவு அட்டைகளை அதிக அளவில் பெறக்கூடிய மக்கள்தொகையைக் கொண்டிருக்கும் 100 கவுன்ட்டிகளில் 85 கவுன்ட்டிகள் கிராமப்புறங்களில் இருக்கின்றன. மீதமுள்ளவை சிறிய நகர்ப் புறங்களில் இருக்கின்றன. ட்ரம்ப் நசுக்க நினைக்கும் 'மெடிக்எய்ட்' என்ற மருத்துவ உதவித் திட்டத்தால் கிராமப்புறங்களில் பெரும் பலன் இருந்ததும் குறிப்பிடப்பட வேண்டிய விஷயம்.

சரிந்த சந்தை

கிராமப்புற அமெரிக்கர்கள் தனிப்பட்ட முறையில் அரசு உதவியைப் பெறவில்லை என்றாலும், இந்தத் திட்டங்களெல்லாம் அவர்களுக்கு மிகவும் முக்கியமானவை. பாதுகாப்பு-வலைப்பின்னல் திட்டங்கள் அதிகாரத்தைக் கொண்டுவருகின்றன. இதனால், கிராமப்புறங்களில் வேலைவாய்ப்புகளை உருவாக்க ஏதுவாகிறது. 'மெடிக்எய்ட்' என்பது கிராமப்புற மருத்துவமனைகள் உயிர்த்திருப்பதற்கு முக்கியமான காரணி அது இல்லையென்றால் கிராமப்புற அமெரிக்கர்களுக்கான மருத்துவ உதவிகள் பெரிதும் தடைப்பட்டுவிடும்.

உள்நாட்டுத் தொழில்களுக்கான பாதுகாப்புக் கவசத்தை எப்படிப் பார்ப்பது? அமெரிக்க விவசாயத் துறை பெரிதும் வெளிநாட்டுச் சந்தைத் தொடர்பையே சார்ந்திருக்கிறது, அமெரிக்க சோயா பீன்ஸ் உற்பத்தியாளர்கள், தங்கள் உற்பத்தியில் 50% ஏற்றுமதி செய்கிறார்கள் கோதுமை விவசாயிகள் தங்கள் உற்பத்தியில் 46% ஏற்றுமதி செய்கிறார்கள். அமெரிக்க விவசாயப் பொருட்களுக்கான முக்கியமான சந்தையாக சீனா உருவெடுத்திருக்கிறது. அதனால்தான் வணிகம் தொடர்பாக ட்ரம்ப் சமீபத்தில் கோபமாக இட்ட ட்விட்டர் பதிவினால் - விரிவான வணிகப் போருக்கான சாத்தியத்தைத்

தோற்றுவித்ததாகக் கருதப்படும் அந்தப் பதிவினால் - தானியச் சந்தையானது 42 ஆண்டுகளில் இல்லாத அளவுக்குக் குறைந்த அளவு வணிகத்தைக் கண்டிருக்கிறது.

விவசாயிகள் மீதான அச்சுறுத்தல் என்பது ட்ரம்ப் விதித்திருக்கும் ஏற்றுமதி / இறக்குமதி வரிகளுக்கு வெளிநாட்டினர் மேற்கொள்ளக்கூடிய பழிவாங்கல் நடவடிக்கை தொடர்பானது மட்டுமல்ல என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். சர்வதேசப் பொருளாதாரத்தைப் பொறுத்தவரை இறக்குமதி வரி என்பது போகப்போக ஏற்றுமதிகள் மீதான வரியாகவும் ஆகிவிடும். ஏனெனில், அவற்றால் டாலரின் மதிப்பு உயர்கிறதல்லவா! ஆக, உலகம் வணிகப் போரில் இறங்கினால் அமெரிக்க இறக்கு மதிகளும் சரி, ஏற்றுமதிகளும் சரி சுருங்கிப் போய்விடும் - இதில் விவசாயிகள்தான், அதாவது அமெரிக்காவின் மிக முக்கியமான ஏற்றுமதியாளர்கள், பெருமளவில் இழப்புக்குள்ளாவார்கள்.

ட்ரம்ப்பும் சில பொய்களும்

சரி, இப்படியெல்லாம் இருந்தும் கிராமப் புறத்தினர் ட்ரம்ப்பை ஏன் ஆதரிக்கிறார்கள்? இதில் கலாசாரம் தொடர்பான காரணங்கள் நிறைய உண்டு. குறிப்பாக, அகதிகள் மீது நகர்ப்புற வாக்காளர்களுக்கு இருக்கும் வெறுப்பைவிட, கிராமப் புற வாக்காளர்களுக்கு இருக்கும் வெறுப்பு அதிகம். அதிலும் குறைந்த அளவே அகதிகள் இருக்கும் சூழலில் இந்த வெறுப்பு அதிகம். பரிச்சயமில்லாத நிலையே வெறுப்பை வளர்க்கிறது. கடற்கரை நகரங்களைச் சேர்ந்த மேல்தட்டினரால் தாங்கள் அவமதிக்கப்படுவதாகவும் கிராமப்புற வாக்காளர்கள் உணர்கிறார்கள். ட்ரம்ப் இந்தக் கோபத்தைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்கிறார்.

தங்கள் ஆதரவுத் தளத்தை அப்படியே தக்கவைக்க ட்ரம்ப் ஆதரவாளர்கள் செய்வது ஒன்றே ஒன்றைத்தான்: பொய்கள். உயிரற்ற பொய்களை மீண்டும் மீண்டும் சொல்வது. சமீபத்திய ஓர் உதாரணம், சொத்துவரி மீதான தனது வரிக் குறைப்பு நடவடிக்கைகள் விவசாயிகளுக்கு உதவியிருக்கின்றன என்று சில வாரங்களுக்கு முன்பு ஆர வாரமான ஒரு பேரணியில் ட்ரம்ப் தெரிவித்தார். இதுவும் முழுக்க முழுக்கப் பொய். 2017-இல் 80 பண்ணைகளும் சில தொழிலமைப்புகளுமே சொத்து வரி செலுத்தியிருக்கின்றன. பிரித்துக்கொண்ட குடும்பப் பண்ணைகள் சொத்துவரி செலுத்தியிருக்கின்றன என்பது முழுக்கக் கட்டுக்கதையே. இன்னொரு விடை என்பது உண்மையை ஒடுக்குவதில் இருக்கிறது. ஆகவேதான், தங்கள் வேலையைச் செய்ய முயன்ற வேளாண் துறை பொருளாதார நிபுணர்கள் தண்டிக்கப்பட்டார்கள்.

இதில் விஷயம் என்னவென்றால் உண்மை மீதான தாக்குதலால் ஏற்படும் பின்விளைவானது அரசியலைத் தாண்டியும் போகக் கூடியது. வேளாண் துறையின் பொருளாதார ஆய்வு என்பது யாரெல்லாம் அதிகாரத்தில் இருக்கிறார்களோ அவர்களுக்குத் துதிபாடுவதற்கானதல்ல. அந்தத் துறை தனது நோக்கங்களைப் பற்றிய குறிப்புகள் சொல்வதுபடி அதன் பணியானது "முடிவுகளை எடுப்பதில் பொதுமக்களுக்கும் தனியாருக்கும் உள்ளதிறனை மேம்படுத்தும் வகையில் உயர்தரமான, விருப்புவெறுப்பற்ற பொருளாதார ஆய்வுகளை மேற்கொள்வதே." தற்போது, அந்தச் சேவையின் திறன் வெகுவாகக் குறைக்கப்பட்டு விட்டது. ஏனெனில், உண்மையைச் சார்ந்த கொள்கை மீது ட்ரம்ப் பின் நிர்வாகத்துக்கு நம்பிக்கை இல்லை. அடிப்படையில் அதற்கு உண்மைத் தகவல்களின் மீது நம்பிக்கையே கிடையாது. அவ்வளவுதான். எல்லாமே அரசியல் ரீதியிலானது தான். இந்தத் தரக் குறைவுக்கு யார் விலை கொடுப்பது? கிராமப்புற அமெரிக்கர்கள்தான். ஆக, ட்ரம்ப்பின் மிகப் பெரிய ஆதரவாளர்கள்தான் அவரது மிகப் பெரிய பலிகடாக்கள்!

(நியூயோர்க் டைம்ஸ், தமிழில்: ஆசை)

உளறும் பேரும்...

வேதநாயகம் தபேந்திரன்

"நான் அவசர அலுவலாக வலிகாமத்துக்குப் போக வேண்டும். இந்தப் (f) போமை நிரப்பித் தாருங்கள் என்றார்.

அது ஒரு ஓய்வு நாள். வீட்டு வேலையில் பரபரப்பாக இருந்தேன். ஊரவர் ஒருவர் வந்து அவசரப்பட்டார்.

"பத்து நிமிசம் பொறுங்கள் என்றேன்." அவரது படிவத்தை வாங்கி விட்டுக் கேட்டேன்" வலி காமத்துக்குப் போவதாகக் கூறினீர்களே. அந்த வலிகாமம் எங்கே இருக்கிறது " எனக் கேட்டேன்.

"ஏன் மாஸ்ரர் வலிகாமம் எங்கே இருக்கிறதென நீங்களே கேட்டால் என்ன சொல்வது?" எனக் கேட்டுவிட்டு "மானிப்பாய்க்குப் போகப் போகிறேன்" என்றார். இவ்வாறான சொல்லாடல்கள் எமக்கு அண்மையில் தான் பழக்கப்பட்டவை.

யாழ்ப்பாணத்தில் 1990 ஆம் ஆண்டுக்கு முன்பாக பருத்தித்துறைக்குப் போகிறேன். வரணிக்குப் போகிறேன். உடையார்கட்டுக்குப் போகிறேன் எனத் தான் கூறுவார்கள்.

வடமராட்சிக்குப் போகிறேன் என்றோ தென்மராட்சிக்குப் போகிறேன் என்றோ வன்னிக்குப் போகிறேன் என்றோ சொல்லும் வழக்கம் இருந்ததில்லை.

1990 ஜூன் மாதத்துக்குப் பின்பாக விடுதலைப் புலிகள் பாஸ் எனப்பட்ட பயண அனுமதி முறைமையை நடைமுறைப்படுத்தினார்கள். அத்துடன் வடமராட்சி, தென்மராட்சி, தீவகம், வலிகாமம், பச்சிலைப்பள்ளி, வன்னி என நிலப்பரப்புகள் குறித்தான நிர்வாக நடைமுறையை ஏற்படுத்தினார்கள். அதனால் ஊர் குறித்துக் கதைக்கும் பண்பு நாளடைவில் குறைந்து வர நிலப் பரப்பு குறித்து அழைக்கும் புதுமரபு வந்தது. வன்னிப் பிரதேசத்திலுள்ளவர்கள் தமது பிரதேசத்தை வன்னியென வெளியாட்கள் குறிப்பாக யாழ்ப்பாண ஆள்கள் அழைத்தால் கோபப்பட்டு வாக்குவாதப்பட்ட காலமொன்றும் இருந்தது.

ஒல்லாந்தர் இலங்கையை ஆண்ட காலத்தில் இங்குள்ள இடங்களுக்கு தமது ஊர்களின் பெயர்களை இட்டார்கள். நெடுந்தீவுக்கு டெல்வ்ற் எனவும், ஊர்காவற்றுறைக்கு கைற்ஸ் எனவும் இட்டார்கள். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தமது வாயில் வராத உச்சரிப்புகளுக்கு தமது வாயில் வந்த பெயர்களை வைத்தார்கள்.யாழ்ப்பாணம் என்ற பெயர் வாயில் வராத போது ஜவ்னா (Jaffna) எனவும், மட்டக்களப்புக்கு பற்றிக்கலோ (Batticaloa) திருகோணமலைக்கு றிங்கோமலே (Trincomalee) எனவும் வைத்தார்கள்.

இந்தியாவில் அண்மைய ஆண்டுகளாக காலனித்துவ ஆட்சிக் காலத்தில் வெள்ளையர்கள் இட்ட பெயர்களை மாற்றிச் சுதேசியப் பெயர்களை வைத்து வருகின்றார்கள்.

மட்ராஸ் (Madras) சென்னையாக்கினார்கள். பம்பாயை மும்பாய் ஆக்கினார்கள். கல்கத்தா என்பதைக் கொல்கொத்தா என ஆக்கினார்கள். தமது பாரம்பரியம் கூறும் பெயர்களை மீளவும் நிலை நாட்டி உள்ளார்கள்.

யாழ்ப்பாணம் என்பதை ஜவ்னா (Jaffna) என எழுதாமல் ஆங்கிலத்திலும் "yazhpanam'' என எழுதும் மரபை நாம் உருவாக்க வேண்டும். யாழ்ப்பாணம் என்பது யாழ் எனும் இசைக்கருவியை வாசித்த பாணன் வாழ்ந்த இடம் என்ற கருத்தைத் தருகிறது. ஆகவே, பிறமொழி பேசும் ஒருவர் உங்கள் இடம் எதுவெனக் கேட்டால் நாம் யாழ்ப்பாணம் எனச் சொன்னால் அவர்கள் அதற்கு என்ன கருத்து எனக் கேட்டால் எமது பாரம்பரியம் குறித்த புரிதலுடன் பதில் சொல்வோம்.

அந்நியன் ஒருவனுக்கு வாயில் வராத உச்சரிப்பு என்பதற்காக நாமும் எமது ஊர்களின் பெயர்களை தமிழ் மறந்து உச்சரிப்பது தவறானது. எமது முன்னோர்கள் காரண காரியம் கருதித் தான் ஊர்களுக்குப் பெயர் இட்டார்கள். அவை வாழையடி வாழையாக நாம் வாழ்ந்த வரலாற்றின் சுவடுகள்.

அப் பெயர்கள் எமது மரபுகளைக் காக்கும்.

வவுனியா என்பதற்கு Vavuniya எனவும் காங்கேசன்துறை என்பதற்கு Kankesanthurai எனவும் கிளிநொச்சி என்பதற்கு Kilinochi எனவும் மன்னார் என்பதற்கு Mannar எனவும் தான் ஆங்கிலத்தில் அழைக்கின்றனர். இவற்றை ஆங்கிலத்தில் அதே உச்சரிப்பில் எழுதிய வெள்ளையர்களுக்கு யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற ஊர்கள் மட்டும் உச்சரிப்பு மாறி வந்தது வியப்பாக உள்ளது.

எமது ஊர்ப் பெயர்கள் குறித்த ஆய்வு ஒன்று காலத்தின் தேவையாக உள்ளது. முல்லைத்தீவில் ஆமையன்குளம் இப்போது சிங்களக் குடியேற்றத்தால் இப்பாவவ ஆகி விட்டது. மணலாறு வெலிஓயா ஆகியது பழைய கதையாகிப் போனது. நீராவியடிப் பிள்ளையார் கோயிலை பௌத்த மயமாக்கும் வேலைகள் சட்டத்தின் ஆட்சியை மதிக்காமல் பகிரங்கமாகவே நடக்கிறது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறை பேராசிரியராகக்கடமையாற்றிய பேராசிரியர். இ.பாலசுந்தரம் யாழ்ப்பாண இடப்பெயர் ஆய்வுகள் என்ற நூலை 1985 ஆம் ஆண்டில் எழுதி வெளியிட்டார். ஊர்களின் பெயர்கள் உருவாகிய காரணம் குறித்து அருமையான ஆவணமாக அது உள்ளது.

வல்லவன் எனும் குறுநில மன்னன் வெட்டிய துறை வல்வெட்டித்துறை எனவும், வெல்வெட்துணி ஏற்றுமதியாகிய துறை ஆதலால் வெல் வெட்துறை மருவி வல்வெட்டித்துறை ஆகிய தெனவும் அந்த நூலில் உள்ளது.

இது போல வடக்கு கிழக்கு அதற்கு வெளியேயான தமிழ் பிரதேசங்களின் பெயர்கள் குறித்தான ஆவண நூல்கள் உருவாக்கப்படல் வேண்டும்.

சிங்களமயமாதல் தான் பிரச்சினை என இருந்தோம். இன்று முஸ்லீம் மயமாதல் எனும் பிரச்சினைக்கும் முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

அதனால் எமது ஊர்களின் பெயர்கள் குறித்த ஆய்வும் ஆவணப்படுத்தலும் காலத்தின் அவசர அவசிய தேவையாகும். ஊர்ப் பெயர்களின் பாரம் பரியப் பெயர்களை மாற்றிப் புதுப்பெயரிடல் ஆங்காங்கே நடக்கிறது.

சுதுமலை, கல்வியங்காடு, ஊரிக்காடு, நெடியகாடு எனத் தமது ஊர்ப் பெயர்களைப் பரம்பரை பரம்பரையாக அழைத்து வருகின்றனர். சில இடங்களில் தமது பாரம்பரியக் கிராமியப் பெயரை அழித்து புதுப்பெயரிடும் போக்கு தொடர்கிறது.

தமது ஊர்களில் காடு, மலை என்ற சொற்கள் வருவதை தரக்குறைவாக நினைக்கின்றனர். காடு, மலை என்பவை எல்லாம் எமது பண்பாட்டுடன் ஊறிய பழந்தமிழ் சொற்கள். சோழ மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் துறையூர்,உறையூர் எனப் பல ஊர்கள் இருந்தன.

யாழ்ப்பாண நகரின் புறநகரான கரையூர் எனப்பட்ட கிராமம் பின்னாளில் குருநகர் எனப் பெயர் மாற்றம் பெற்றது. ஊர்களின் பாரம்பரியம் மறந்து புதுமை புனைதல் எனும் பெயரில் பெயர்களை அழித்தல் தவறானது. தவறான அர்த்தம் கொடுக்கும் பழைய பெயர்களை மாற்றுவது ஏற்கக் கூடியது. வரலாற்று ரீதியாக உள்ள இடங்களைக் குறிக்கும் சந்திகளின் பெயர்கள் காப்பாற்றப்படல் வேண்டும்.

ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் மானிப்பாயில் ஒரு சந்தி ரவிக்கைச் சந்தியென அழைக்கப்பட்டு வந்தது. அக் காலத்தில் சாறி பிளவுஸ் எனப்பட்ட ரவிக்கை அணியும் வழக்கம் பெண்களிடம் இருக்கவில்லை. நூல் சாறியை மார்புக்கு குறுக்காக குறுக்குக் கட்டு கட்டித் தான் பெண்கள் செல்வார்கள்.

ஒல்லாந்துச் சிப்பாய்கள் அப் பெண்களிடம் சேட்டை விடுவதனைக் கண்ட அவர்களது தளபதி ரவிக்கை எனப்பட்ட சாறி பிளவுசை தைக்கும் வழக்கத்தை ஏற்படுத்தினார். ரவிக்கை தைத்த சந்தி ரவிக்கைச் சந்தி எனப்பட்டது. பின்னாளில் ரவிக்கை எனப்பட்ட சாறிபிளவுஸ் உயர்சாதிப் பெண்கள் மட்டுமே அணியும் ஆடையென்ற பாகுபாடு உருவானது. தாழ்த்தப்பட்ட சாதிப் பெண்கள் மட்டுமே மார்புக்கு குறுக்குக் கட்டு அணிந்து சாறி உடுத்தும் பண்பாடு உருவானது. 1960 களில் ஏற்பட்ட சமூகப் புரட்சிகள் காரணமாகவும் போராட்ட இயக்கங்களின் வளர்ச்சி காரணமாகவும் குறுக்குக்கட்டு வேகமாக அற்றுப் போனது. யாழ் நகரிலுள்ள சத்திரத்துச்சந்தி பின்னாளில் பொன்னம்மா மில்கடைச்சந்தி ஆகியது. போராட்ட காலமும் புதுப்புது பெயர்களைத் தந்தது.

அக்காச்சி குடியிருப்பு, கேடில்ஸ் மைதானம், இப்படியாக பலப்பல பெயர்கள் ஊருக்கு ஊர் வந்தது. தாம் நேசித்த போராளிகளின் பெயர்களைத் தாங்கியதாக இப் பெயர்கள் இடப்பட்டது. அவையாவும் கால வெள்ளத்தில் காணாமல் போகின்றது. இவையும் எமது வாழ்வியலின் அடையாளங்கள் தான். போர் முடிந்து விட்டது. ஆனாலும் போரின் ஞாபகச் சின்னங்கள் அவை. தமிழர்களிடம் உள்ள தவறான மனப்பான்மை என்னவென்றால் பழைமைகளையும் பாரம்பரியங்களையும் அழகில்லாத அழுக்குகள் என நினைப்பது தான்.

பாரம்பரியத்தை சுமையாக நினைத்து அவற்றைக் கைவிடுதல் காரணமாக நாம் இழந்தவைகள் நிறைய. நீர்கொழும்பு, சிலாபம், புத்தளம் ஆகிய பிரதேசங்கள் முற்றாகத் தமிழ் மணந்த பிரதேசங்கள்.

இலங்கை சுதந்திரமடைந்த காலம் முதலே படிப்படியாகத் திட்டமிட்டு அவை சிங்களமயமாக்கப்பட்டன. தமிழ்ப் பாடசாலைகள் மெல்ல மெல்ல மூடப்பட்டு முற்றாகச் சிங்களமயமாகின. தெற்கேயிருந்து வடக்கு நோக்கிய ஊடுருவல் படிப்படியாக நடைபெறுகிறது. தமிழ்,தமிழர் வாழ பாரம்பரிய தமிழ் பெயர்களைப் பாதுகாப்பதும், பழைமைப் பெயர்களைத் தேடி ஆவணப்படுத்துவதுமே காலத்தின் தேவை.

■

கலாநிதி ஜயம்பதி விக்கிரமரத்ன

மைத்திரியைச் சுற்றப்போகும் ஆவிகள்

மரண தண்டனையை மீண்டும் அமுல்படுத்துவது தொடர்பாக ஜனாதிபதி சிறிசேன எடுத்திருக்கும் தீர்மானம் பரந்தளவிலான எதிர்ப்புக்களைச் சந்தித்துள்ளது. அரசாங்கத்திலும், எதிர்க் கட்சியிலும் இருக்கும் பிரதான கட்சிகள் அனைத்தும் - ஐக்கிய தேசிய முன்னணி, இலங்கை பொதுஜன பெரமுன, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் மக்கள் விடுதலை முன்னணி ஆகிய கட்சிகள் அனைத்தும் - அதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. பிரஜைகள் அமைப்புக்களும் அந்தத் தீர்மானத்தை கண்டித்துள்ளன. ஐக்கிய நாடுகள் அமைப்பு, ஐரோப்பிய யூனியன், போதைவஸ்துக்கள் மற்றும் குற்றச் செயல்கள் தொடர்பான ஐ.நா. அலுவலகம் (UNODC) என்பனவும், அதே போல பல நாடுகளும் ஜனாதிபதியின் இந்தத் தீர்மானம் திரும்ப விலக்கிக் கொள்ளப்பட வேண்டுமென வேண்டுகோள் விடுத்துள்ளன. மரண தண்டனையை அமுல் செய்வதானது, போதைவஸ்து கடத்தல் மற்றும் பயங்கரவாதம் என்பவற்றுக்கு எதிரான செயற்பாடுகளின் போது சர்வதேச ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வதற்கான ஒரு தடையாக இருந்துவர முடியும் என்ற விடயமும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மரண தண்டனையை அமுல் செய்து வரும் நாடுகளுடன் தகவல் பரிமாற்றத்தை மேற்கொள்வதற்கோ, குற்றவாளிகளைத் தமது சொந்த நாடுகளுக்கு திருப்பி அனுப்புவது தொடர்பான ஏற்பாடுகளைக் கொண்டிருப்பதற்கோ இடமளிக்காத விதத்தில் பல நாடுகள் சட்டங்களைக் கொண்டுள்ளன. இந்த எதிர்ப்பு அணியில் கடைசியாக சேர்ந்து கொண்டிருக்கும் அமைப்பு இலங்கை மருத்துவக் கழகமாகும். மரண தண்டனையை அமுல் படுத்தும் செயற்பாடுகளில் ஏதேனும் விதத்தில் சம்பந்தப்படுவதானது மருத்துவ ஒழுக்கநெறிகளுக்கு முரணானதாக இருந்து வரும் என்ற விடயத்தை இலங்கை மருத்துவக்கழகம் மருத்துவ ஆளணியினரின் கவனத்திற்கு எடுத்து வந்துள்ளது.

அரசியல் யாப்புக்கு முரண்

மரண தண்டனையை ஒழிக்கும் இறுதிக் குறிக்கோளை நோக்கிய ஒரு படிமுறை என்ற முறையில் மரண தண்டனைகள் தொடர்பாக தற்காலிக தடைகளை விதிப்பதற்கு ஆதரவளிக்கும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் பல்வேறு தீர்மானங்களுக்கு இலங்கை 2007ஆம் ஆண்டு தொடக்கம் மீண்டும் மீண்டும் சார்பாக வாக்களித்து வந்துள்ளது. அதன் பின்னர் பல தடவைகள் உறுதிப்படுத்தப்பட்ட 2007ஆம் ஆண்டின் தீர்மானம் பின்வருமாறு பிரகடனம் செய்திருந்தது, "மரண தண்டனையை அமுல்படுத்துவதானது மனித கண்ணியத்தை சீர்குலைக்கின்றது என்ற விடயமும், அது தொடர்பாக தற்காலிகத் தடை ஒன்றை விதிப்பதானது மனித உரிமைகளின் முன்னேற்றகரமான அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்கின்றது என்ற விடயமும் நிரூபிக்கப்பட்டுள்ளது. அத்துடன், மரண தண்டனை, குற்றங்களைத் தடுக்கக்கூடிய ஆற்றலை கொண்டிருக்கின்றது என்பதை நிரூபித்துக் காட்டுவதற்கு முடிவான நிரூபணங்களும் இருந்து வரவில்லை. மரண தண்டனையை அமுல்படுத்தும் விடயத்தில் நீதி தவறாக நிலைநாட்டப்பட்டால் அல்லது நீதி தோல்வியடைந்தால் அதனை மீண்டும் மாற்றியமைப்பதற்கு எவ்விதமான வாய்ப்பும் கிடைப்பதில்லை. அந்த இழப்பை ஒருபோதும் ஈடு செய்ய முடியாது." மிக அண்மையில் 2018 டிசெம்பர் மாதத்திலும் கூட இலங்கை இந்த இடைக்காலத் தடைக்கு ஆதரவாக மீண்டும் ஒரு முறை வாக்களித்திருந்தது.

ஐக்கிய நாடுகள் அமைப்பில் இலங்கை தொடர்ச்சியாக தெரிவித்து வந்திருக்கும் அதன் கடப்பாடு இது தொடர்பான அரசாங்கத்தின் தெளிவான கொள்கையை எடுத்துக் காட்டுகின்றது. இந்தப் பின்புலத்திலும் 1976ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கையில் மரண தண்டனை அமுல் செய்யப்படாதிருக்கும் பின்புலத்திலும் ஒரு சட்ட விவகாரம் என்ற விதத்தில் மரண தண்டனையை அமுல் செய்வது தொடர்பான ஜனாதிபதியின் செயற்பாடு அரசாங்கக் கொள்கையை மீறுவதாக இருந்து வருகின்றது என நான் வாதிடுகின்றேன். மேலும், அரசியல் யாப்பின் உறுப்பிரை 42(1) இன் பிரகாரம், இலங்கை குடியரசு அரசாங்கத்தின் நெறிப்படுத்தல் மற்றும் கட்டுப்பாடு என்பவற்றுக்கான பொறுப்பினை அமைச்சரவையே கொண்டுள்ளது. எனவே, ஜனாதிபதி அரசாங்கத்தின் கொள்கைக்கு எதிராக செயற்பட முடியாது என்ற வாதத்தையும் நான் இங்குமுன்வைக்கின்றேன். மேலும், நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவம் செய்யும் பிரதான கட்சிகள் மரண தண்டனையை மீண்டும் எடுத்து வருவதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. இந்தநிலையில், நாடாளுமன்றத்தின் கருத்துக்களை கேட்டு, அவற்றை தெரிந்து கொள்ள வேண்டிய கடமையை ஜனாதிபதி கொண்டுள்ளார். இத்தகைய சந்தர்ப்ப சூழ்நிலைகளில், மரண தண்டனையை மீண்டும் எடுத்து வருவது தொடர்பாக ஜனாதிபதி எடுத்திருக்கும் தீர்மானம் விவேகபூர்வமற்றதாகவும், நியாயமற்றதாகவும், தன்னிச்சையானதாகவும், அரசியல் யாப்பின் உறுப்புரை 12(1) மீறுவதாகவும் இருந்து வருகின்றது.

மீண்டும் ஒரு போதும் மாற்றியமைக்க முடியாதது

கலாநிதி கொல்வின் ஆர்.டி. சில்வா 1956ஆம் ஆண்டில் நாடாளுமன்றத்தில் இப்படிக் குறிப்பிட்டார்: "அரசு மனிதனிடமிருந்து அபகரித்துக் கொள்ளும் அனைத்துப் பொருட்களிலும் முக்கியமான ஒரு பொருள் இருக்கின்றது. அப்பொருளை நீங்கள் அபகரித்துக் கொண்டால் மீண்டும் ஒருபோதும் உங்களால் அதனைத் திருப்பியளிக்க முடியாது. அந்த நபருக்கு அது தொடர்பாக உங்களால் நட்டஈடு வழங்கவும் முடியாது. ஏனெனில், அது அவரின் உயிராகும்."

மரண தண்டனையுடன் சம்பந்தப்பட்ட விதத்தில் நீதித்துறை தீர்ப்புக்கள் தவறான விதத்தில் வழங்கப்பட்டிருக்கும் பெருந்தொகையான உதாரணங்களை வரலாறு கொண்டுள்ளது. இங்கு இரண்டு உதாரணங்களை எடுத்துக் காட்ட முடியும். ஒரு பெண்மணியை கொலை செய்த குற்றத்திற்காக திமோதி எவான்ஸ் என்பவர் 1950ஆம் ஆண்டு மார்ச் மாதம் 5ஆம் திகதி இங்கிலாந்தில் தூக்கிலிடப்பட்டார். மூன்று வருடங்களின் பின்னர் ஜோன் கிறிஸ்டி என்ற மற்றொரு நபர், எவான்ஸ் கொலை செய்ததாக கூறப்பட்ட பெண்மணியையும் உள்ளடக்கிய விதத்தில் ஆறு பெண்களை தான் கொலை செய்திருப்பதாக கூறி அதற்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டார். பெருமளவுக்கு கொந்தளிப்பை ஏற்படுத்தியிருந்த 52 பேரின் கொலைச் சம்பவங்கள் தொடர்பாக ரஷ்ய அதிகாரிகள் அண்ட்ரி சிக்காடிலோ என்ற தொடர் கொலைகாரனை 1994ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் தூக்கிலிட்டார்கள். 'இந்தக் கொலைகளை வெகு விரைவில் நிறுத்தும் நோக்கத்தில், 'அதற்கு முன்னர் இந்தக் கொலைகளில் ஒன்று தொடர்பாக அலெக்சாண்டர் கிராவ்சென்கோ என்ற தவறான நபரை' தாம் தூக்கிலிட்டிருந்த விடயத்தை அதிகாரிகள் ஏற்றுக் கொண்டார்கள்.

வாஷிங்டன்டி.சியைச்சேர்ந்தசு.வுளுவசயவபநைள என்ற நிறுவனம் ஐக்கிய அமெரிக்காவில் 500 பொலிஸ் அதிகாரிகளுக்கு மத்தியில் 2008ஆம் ஆண்டில் ஒரு கருத்துக் கணிப்பை நடத்தியது. அதில் "வன்முறையுடன் கூடிய குற்றச் செயல்களைத் தடுப்பதற்கான மிக முக்கியமான" வழிகளில் ஒன்றை குறிப்பிடுமாறு கேட்கப்பட்டிருந்தது. உயர் பொலிஸ் அதிகாரிகள் அதற்கான வழிகளை பட்டியலிடும் பொழுது, மரண தண்டனையை கடைசி இடத்திலேயே வரிசைப்படுத்தியிருந்தார்கள். பொலிஸ் அதிகாரிகளின் எண்ணிக்கையை அதிகரித்தல், போதைப்பொருள் பாவனையை குறைத்தல் மற்றும் சிறந்த பொருளாதாரம் ஒன்றை உருவாக்குதல் என்பன (குற்றச் செயல்களை தடுப்பதற்கான) அவர்கள் குறிப்பிட்ட உயர் முன்னுரிமைகளாக இருந்து வந்தன.

ஐக்கிய அமெரிக்காவில் மரண தண்டனையை அமுல் செய்துவரும் மாநிலங்களில் இடம்பெற்று வரும் கொலைகளின் எண்ணிக்கை, மரண தண்டனையை ஒழித்திருக்கும் மாநிலங்களில் இடம்பெற்று வரும் கொலைகளின் எண்ணிக்கையிலும் பார்க்க குறைவானதாக இருந்து வரவில்லை என்பது யாவருமறிந்த ஒரு விடயமாகும்.

கொலராடோ - போல்டர் பல்கலைக்கழகத்தின் சமூகவியல் பேராசிரியரான மைக்கல் எல். ரட்லொட், "தூக்குத் தண்டனைகள், படுகொலை விகிதங்களை குறைத்து வருகின்றனவா?: முன்னணி குற்றவியல் வல்லுனர்களின் கருத்துக்கள்" என்ற தலைப்பில் Journal of Criminal Law and Criminology என்ற சஞ்சிகையில் 2009ஆம் ஆண்டு எழுதிய கட்டுரையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

"மரண தண்டனை, கொலைகளை குறைக்க முடியும் என்ற அனுமானம் ஒரு மாயையாக இருந்து வருகின்றது என்ற விடயத்தை அனுபவ ரீதியான ஆராய்ச்சி எடுத்துக் காட்டியுள்ளது. இதனை உலகின் முதன்மை குற்றவியல் வல்லுனர்களில் பெரும்பாலானவர்கள் நம்புகின்றார்கள் என்பதனை எமது மதிப்பீட்டாய்வு சுட்டிக்காட்டுகின்றது. இந்தக் கருத்துக் கணிப்பில் பங்கேற்ற குற்றவியல் வல்லுநர்களில் 88.2% மரண தண்டனை குற்றங்களை தடுக்கும் ஒரு காரணியாக இருந்து வர முடியும் என்ற விடயத்தில் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை.

'மரண தண்டனை படுகொலைகளின் எண்ணிக்கையை கணிசமான அளவில் குறைக்கின்றது' என்ற கூற்றுக்கு 9.2% குற்றவியல் வல்லுநர்கள் மட்டும் 'சரியானது' என பதிலளித்திருந்தார்கள். எவ்வாறிருப்பினும், ஒட்டுமொத்தமாக வாக்களிப்பில் பங்கேற்ற நிபுணர்களில் 10% இற்கும் குறைவானவர்களே நீண்டகால சிறைத்தண்டனையிலும் பார்க்க, மரண தண்டனையின் குற்றத் தடுப்புக் காரணி குறித்து நம்பிக்கை வைத்திருந்தனர். நீண்டகால சிறைத்தண்டனையிலும் பார்க்க குற்றங்களை தடுக்கும் விடயத்தில் மரண தண்டனை எல்லை ரீதியான ஒரு தாக்கத்தையே கொண்டுள்ளது என்ற நிலைப்பாட்டைக் காட்டும் அண்மைக்கால பொருளியல் கணித ஆய்வுகள் வரையறுக்கப்பட்டவையாக அல்லது குறைபாடுகளை கொண்டவையாக இருந்து வருகின்றன. மேலும், அவை பொதுவான கருத்தொற்றுமையை உதாசீனம் செய்வதிலும் தோல்வி கண்டுள்ளன.

சுருக்கமாகச் சொல்வதானால், குற்றவியல் வல்லுநர்களுக்கு மத்தியில் பொதுவாக நிலவி வரும் கருத்தொற்றுமை, மரண தண்டனை, நீண்டகால சிறைத் தண்டனையிலும் பார்க்க குற்றங்களை தடுக்கும் விடயத்தில் எத்தகைய ஒரு கணிசமான தாக்கத்தையும் எடுத்து வரவில்லை என்பதாகும்." **(13 ஆம் பக்கம் பார்க்க)**

மரணதண்

திருத்த முடிய தீர்ப்

● ருக்கி பெர்னாண்டோ

(Death Penalty: License for Judicial Killings என்ற தலைப்பில் கிரவுண்விவ்ஸ் தளத்தில் வெளிவந்த கட்டுரையின் தமிழாக்கம்)

கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 02ஆம் திகதி ஈரான் செய்னப் செக்காண்வான்ட் என்ற பெண்ணைத் தூக்கிலிட்டது. அந்தப் பெண் இழைத்தாகக் கூறப்படும் குற்றம் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் அவள் ஒரு சிறுமியாக இருந்தாள். சர்வதேசச் சட்டத்தின் கீழ் அப்பெண்ணுக்கு தூக்குத் தண்டனையிலிருந்து விலக்களிக்கப்பட்டிருக்க வேண்டும். மேலும், சிறு வயதில் பல வந்தமாக மணப்பெண்களாக்கப்படும் ஏனைய பெருந்தொகையான சிறுமிகளைப் போலவே அவள் பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கும் உள்ளாக்கப்பட்டிருந்தாள். மிகவும் வறிய, பாரம்பரிய குடும்பமொன்றில் பிறந்த செய்னப் தனது 15ஆவது வயதில் திருமண வாழ்க்கைக்குள் தள்ளப்பட்டாள். அவளுடைய கணவன் கொடுமைக்காரனாகவும், வன்முறையில் ஈடுபடுபவனாகவும் இருந்து வந்தான். தனது கணவனிடமிருந்தும், கணவனின் சகோதரனிடமிருந்தும் தனக்குப் பாதுகாப்பு அளிக்குமாறு அந்தப்பெண், அதிகாரிகளிடமும், குடும்ப உறுப்பினர்களிடமும் மன்றாடிக் கேட்டுக் கொண்டிருந்தாள். தனது கணவனின் சகோதரன் பல தடவைகள் தன்னை வன்புணர்வு செய்துள்ளதாகவும் அவள் கூறியிருந்தாள். ஆனால், அவளுடைய மன்றாட்டங்கள் எவருடைய காதிலும் விழவில்லை. செய்னப்புக்கு 17 வயதாகும் பொழுது அவளுடைய கணவன் ஒரு நாள் இறந்து கிடந்தான். பொலிஸ் சித்திரவதையைத் தாங்க முடியாமல், அந்தக் கொலையை தான் நிகழ்த்தியதாக செய்னப் வாக்குமூலம் அளித்தாள். வழக்கு விசாரணையின் போது - இறுதியில் அவள் தனக்கென ஒரு வழக்கறிஞரை அமர்த்திக் கொண்ட பொழுது - முன்னர் வழங்கியிருந்த தனது வாக்குமூலத்தை அவள் நிராகரித்தாள். ஆனால், ஏற்கனவே அது தாமதமாகியிருந்தது. அதனால் நீதிமன்றம் அவளுக்கு மரண தண்டனை வழங்கியது.

தனது குடிகாரக் கணவனிடமிருந்து தன்னையும், தனது வயது முதிர்ந்த தாயாரையும் பாதுகாத்துக் கொள்வதற்கு முயற்சித்த சந்தர்ப்பத்தில், தனது கணவனை கொலை செய்த குற்றத்துக்காக அலிஸ் நுங்கு என்ற மலாவி நாட்டு பெண்மணிக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது. தண்டனை பெறுவதற்கு முன்னர், அலிஸ் பல வருட காலம் அனுபவித்து வந்த சொல்லொணாத் துன்பங்கள் குறித்த விவரங்களை கேட்டறிந்து கொண்ட ஒரு நீதிமன்றம் அந்தப்பெண்மணி உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் எனக் கட்டளையிட்டது. அப்பெண்மணி 12 வருட காலம் தூக்கு மேடையின் நிழலில், துன்பங்கள் சூழ்ந்த ஒரு வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்தாள். எச்.ஐ.வி. தொற்று அவளைத் தாக்கியிருந்ததுடன், சிறையில் மிக மோசமான நிலைமைகளில், உணவுப் பற்றாக்குறையுடன் நாட்களைக் கழித்திருந்தாள். சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட ஒரு சில வாரங்களின் பின்னர் தனது தாயார் அருகில் இருக்கும் நிலையில் அலிஸ் மரணமடைந்தாள்.

இலங்கையில் பல பெண்கள் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டவர்களாக இருந்து வந்தாலும் கூட, மரண தண்டனையை எதிர்நோக்கி காத்திருப் பவர்களின் பட்டியலின் ஆண் பெண் விபரங்கள் தொடர்பான தகவல்கள் கிடைக்கவில்லை. ஆனால், மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கும் பெண்கள் பன்முக வடிவங்களிலான பால்நிலை அடிப்படையிலான காழ்ப்புணர்ச்சியை எதிர்கொண்டு வருவதாக சர்வதேச ஆராய்ச்சி எடுத்துக் காட்டுகின்றது. சமூகத்தில் வேரூன்றியிருக்கும் பால்நிலை நடத்தை நெறிமுறைகளை மீறியதாகக் கருதப்படும் பெண்களே அநேகமாக மரண தண்டனையை எதிர்கொள்பவர்களாக இருந்து வருகின்றார்கள். அதிலும் அதிகமான பெண்கள் கொலைக் குற்றச்சாட்டுக்களின் விளைவாகவே அவ்விதம் மரண தண்டனையை எதிர் கொள்கின்றார்கள். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பால்நிலை அடிப்படையிலான வன்முறைச் சம்பவங்களின் பின் புலத்தில் குடும்ப உறுப்பினர்களைக் கொலை செய்த குற்றத்துக்காகவே அவர்கள் அவ்விதம் தண்டிக்கப்படுகின்றார்கள். உதாரணமாக, ஜோர்தானில் 16 பெண்கள் இப்பொழுது மரண தண்டனையை எதிர்நோக்கியுள்ளார்கள். அவர்களில் ஒருவரைத் தவிர, ஏனைய அனைவரும் பாரம்பரியமாக குடும்பத்தில் அதிகாரத்தை வைத்திருக்கும் நெருக்கமான குடும்ப உறுப்பினர் ஒருவரைக் கொலை செய்த குற்றத்துக்காகவே அவ்விதம் தண்டனையைப் பெற்றிருக்கின்றார்கள். அந்த அதிகாரத்தை வைத்திருக்கும் நபர் கணவன், தந்தை, மாமியார் போன்ற நபர்களாக இருந்து வருவதுடன், மற்றவர்களை கொடுமைப்படுத்தக் கூடிய ஆற்றலையும் கொண்டிருக்கின்றார்கள்.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் ஜூன் 16ஆம் திகதி ஐக்கிய அமெரிக்காவில் சார்ள்ஸ் ரே பின்ச் என்பவர் தன் மீது சாட்டப்பட்டிருந்த அனைத்து குற்றங்களிலிருந்தும் விடுவிக்கப்பட்டார். மரண தண்டனைக் கைதியாக 43 வருடங்களை சிறையில் கழித்த பின்னர் அவர் அவ்விதம் விடுதலை பெற்றுள்ளார். இவ்வாண்டு தொடக்கத்தில் அதுவும் ஐக்கிய அமெரிக்காவில் கிளிபர்ட் வில்லியம்ஸ் ஜூனியர் என்பவர் மரண தண்டனை விதிக்கப்பட்டு 42 வருடங்களின் பின்னர் விடுதலை செய்யப்பட்டார். 1973ஆம் ஆண்டின் பின்னர் 30 வருட காலப்பகுதியில் இவ்விதம் மரண தண்டனைக் கைதிகள் 10 பேர் விடுதலை செய்யப்பட்டிருந்தனர். அவர்கள் அனைவரும் கறுப்பு இனத்தவர்கள். வில்லியம்ஸ் மற்றும் பின்ச் ஆகியோர் ஐக்கிய அமெரிக்காவில் மரண தண்டனை வழங்கப்பட்டு 36 வருட காலப் பகுதியின் போது குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்கப்பட்ட முறையே 165ஆவது மற்றும் 166ஆவது நபர்கள் ஆவார்கள். ஆண்டொன்றுக்குச் சராசரியாக நான்கு பேர் அவ்விதம் விடுவிக்கப்படுகின்றார்கள். 166ஆவது விடுதலை 2019 ஜூன் 20ஆம் திகதி இடம்பெற்ற 1500ஆவது மரண தண்டனைக்கு சற்று முன்னர் நிகழ்ந்தது.

சட்டபூர்வக் கொலை உரிமம்

இலங்கையில் இறுதியாக மரண தண்டனை நிறைவேற்றம் 1976இல் இடம்பெற்றதுடன், அதன் பின்னர் மரண தண்டனையை அமுல்படுத்துவது தொடர்பாக ஒரு தற்காலிகத் தடை அமுலில் இருந்து வந்துள்ளது. மரண தண்டனை எமது சட்டங்களில் உள்ளடக்கப்பட்டிருக்கும் நிலையில், நீதிமன்றங்கள் அடிக்கடி மரண் தண்டனையை விதித்து வந்த போதிலும், ஒருவர் பின் ஒருவராக வந்த நாட்டின் ஜனாதிபதிகள் எவரும் மரண தண்டனைக்கான கட்டளைகளில் கையொப்பமிடவில்லை.

ஆனால், சித்திரவதையினால் பாதிக்கப்பட்டிருப்பவர்களுக்கு ஆதரவளிக்கும் சர்வதேச தினமான ஜூன் 26ஆம் திகதி ஜனாதிபதி சிறிசேன மரண தண்டனையை மீண்டும் ஒரு முறை எடுத்து வந்திருப்பதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. இது கொடூரமான, மனிதாபிமானமற்ற, இழிவுபடுத்தும் ஒரு தண்டனையாக இருந்து வருவதுடன், அனைத்து இலங்கை ஜனாதிபதிகளினாலும் முன்னெடுக்கப்பட்டு வந்த அந்த 43 வருட கால இடைநிறுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதாகவும் உள்ளது. கடந்த பல தசாப்த காலமாக உரிய சட்ட நடைமுறைகளுக்குப் புறம்பான விதத்தில் மரண தண்டனை வழங்கும் விடயத்தில் மிக மோசமான விதத்தில் பிரபல்யம் பெற்றிருந்த இலங்கை, இப்பொழுது சட்ட ரீதியான விதத்தில் மரண தண்டனைகளை நிறைவேற்றும் விடயம் தொடர்பாக பிரபல்யமடையப் போகின்றது. மரண தண்டனைக்கான உத்தரவு கைச்சாதிடப்பட்டிருக்கும் நான்கு கைதிகளினதும் பெயர்கள் இதுவரையில் அறிவிக்கப்படவில்லை. 1299 பேர் மரண தண்டனையை எதிர்பார்த்து காத்திருப்பதாக இந்த ஆண்டின் தொடக்கத்தில் அறிக்கையிடப்பட்டிருந்தது. அவ்விதம் மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கும் அனைவரும், அவர்களுடைய குடும்பத்தினர்களும் முதலில் தூக்கில் இடப்படவிருக்கும் நான்கு பேரில் தாம் அல்லது தமது அன்புக்குரியவர்கள் எவரேனும் இருப்பார்களா என்ற விடயம் தெரியாத நிலையில் அல்லது தங்களுடைய முறை எப்பொழுது வரும் என்ற விடயம் தெரியாத நிலையில் கடும் துன்பத்திலும், மன அதிர்ச்சியிலும் இருந்து வருகின்றார்கள். பெரும்பாலான மரண தண்டனைக் கைதிகள் கடும் மன அழுத்தத்தை எதிர்கொண்டிருப்பதாகவும், உணவு உட்கொள்வதைத் தவிர்த்து வருவதாகவும், ஓரளவுக்கு மன மயக்க நிலையிலிருந்து வருவதாகவும் சிறை அதிகாரிகள் தெரிவித்ததாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மரண தண்டனை வேண்டாம்

மரண தண்டனை என்பது மீண்டும் ஒருபோதும் மாற்றியமைக்க முடியாத ஒரு தண்டனை வடிவமாக இருந்து வருவதுடன், நபர் ஒருவருக்கு எதிராக குற்றத்தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னர் புதிதாக தோன்றக் கூடிய சாட்சியங்களை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளக்கூடிய வெளியையும் அது இல்லாமல் செய்கின்றது. உதாரணமாக, முன்னர் தவறாக குற்றத்தீர்ப்பு வழங்கப்பட்ட நபர் ஒருவர் புதிய தொழில்நுட்பத்துக்கு ஊடாக நிரபராதியாக்கப்பட முடியும். மேலே குறிப்பிடப்பட்டவாறு, தவறான விதத்தில் குற்றத்தீர்ப்பு வழங்கப்பட்டு, மரண தண்டனை விதிக்கப்பட்ட பல நபர்கள், அவர்கள் மீது தவறான விதத்தில் குற்றத்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்பதனை எடுத்துக்காட்டும் புதிய சாட்சியங்கள் முன்வைக்கப் பட்டிருக்கும் நிலையில் பல தசாப்தங்கள் சிறையில் அடைக்கப்பட்டிருந்த பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார்கள். ஐக்கிய அமெரிக்கா, கனடா, ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளில் தவறான விதத்தில் குற்றத்தீர்ப்பு வழங்கப்பட்டு, மரண தண்டனைக் கைதிகளாக அல்லது சிறைக் கைதிகளாக சிறையில் அடைக்கப்பட்டிருந்த பல நபர்கள் பின்னர் விடுவிக்கப்பட்டிருந்தார்கள் என்ற விடயத்தை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. ஐக்கிய அமெரிக்காவில் பல குற்றச் சாட்டுக்கள் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டு 23 வருடங்கள் சிறையில் அடைக்கப்பட்டிருந்த நபர் ஒருவர் 23 வருடங்களின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார் என்ற விடயத்தையும் அது சுட்டிக்காட்டியுள்ளது. அந்த நபர் தொடர்பான குற்றத் தீர்ப்பு தவறான விதத்தில் நீதி நிலைநிறுத்தப்பட்ட ஒரு சம்பவமாக இருந்து வருகின்றது என்ற விடயத்தை முதன்மை வழக்குத் தொடுநரும், நீதிபதியும் பின்னர் ஏற்றுக்கொண்டிருந்தார்கள்.

மேலும், இலங்கையில் நிரபராதிகள் மீது குற்றத் தீர்ப்பு வழங்கப்படும் நிலைமையை எடுத்து வரக் கூடிய விதத்தில் வழக்குத்தொடுநர்கள் மோசமான விதத்தில் நடந்து கொள்கின்றனர் என்று கூறப்படுவதாகவும் மனித உரிமைகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. உல

...ண்டனை:

...த்தப்பட ...டியாத ...ர்ப்பு

...ளது. ...ற்றச் ...சாட்

...கில் ஏனைய நாடுகளைப் போலவே இலங்கையிலும் நபர்கள் தவறான விதத்தில் குற்றத் தீர்ப்புக்களின்பேரில் சிறையில் அடைக்கப்படக் கூடிய சாத்தியப்பாடு இருந்து வருகின்றது. வழக்கின் போதும், மேன்முறையீட்டின் போதும் - குறிப்பாக, வறியவர்களைப் பொறுத்தவரையில் தரமான சட்ட உதவியை எளிதில் பெற்றுக்கொள்ள முடியாத நிலை இருந்து வருவதனையும் உள்ளடக்கிய விதத்தில் - குற்றவியல் நீதிச் செயன்முறையில் காணப்படும் பாரதூரமான பல குறைபாடுகளின் பின்னணியில் இது இடம்பெறக் கூடிய வாய்ப்பு நிலவி வருகின்றது. எனவே, வறியவர்களே பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தவறான குற்றத் தீர்ப்புக்களை எதிர்கொள்ளக் கூடியவர்களாக இருந்து வருகின்றார்கள்.

மரண தண்டனை, குற்றச் செயல்களை தடுத்து நிறுத்தியிருக்கின்றது அல்லது குறைத்திருக்கின்றது என்பதனை நிரூபிப்பதற்கான சாட்சியங்கள் இலங்கையில் இருந்தோ அல்லது உலகின் வேறு எந்த இடங்களிலும் இருந்தோ பெற்றுக் கொள்ள முடியவில்லை.

மரண தண்டனைக்கு எதிர்ப்புத் தெரிவிப்பது சாத்தியமானதாக இருந்து வருவதுடன், அத்தகைய எதிர்ப்பு அவசியமானதாகவும் உள்ளது. போதைப் பொருள் சம்பந்தப்பட்ட குற்றச் செயல்களையும் உள்ளடக்கிய விதத்தில் குற்றச் செயல்களை கையாள்வதற்கான ஆக்கபூர்வமான வழிமுறைகளுக்கு ஆதரவளிக்க வேண்டியும் உள்ளது. அனைத்து மனித உரிமைகளையும் உத்தரவாதப்படுத்துவதன் மூலம் - அதாவது, சிவில் மற்றும் அரசியல் உரிமைகள், பொருளாதார மற்றும் கலாசார உரிமைகள் என்பவற்றை உத்தரவாதப்படுத்துவதன் மூலம் - குற்றச் செயல்களைத் தடுப்பது தொடர்பாக செயற்படுவது மிகவும் நிர்ணயகரமான ஒரு விடயமாக இருந்து வருகின்றது. ஒரு சில சிறைக்கைதிகள் சிறைக்குள் இருந்து கொண்டே போதைப் பொருள் சம்பந்தப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபட்டு வரும் நிலை காணப்பட்டால், புதிய தொழில் நுட்பத்தை பயன்படுத்துவதையும் உள்ளடக்கிய விதத்தில் சிறைச்சாலைகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்படுதல் வேண்டும். மேலும், சிறைச்சாலைகளுக்குள் அவ்விதம் போதை வஸ்துக்களை எடுத்து வருவதற்கு இடமளித்தால் அதற்கு சிறை அதிகாரிகள் பொறுப்புக்கூற வைக்கப்படுதலும் வேண்டும்.

சர்வதேச ரீதியான கடப்பாடுகள்

மரண தண்டனை மீதான தற்காலிகத் தடையைக் கோரும் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் தீர்மானத்துக்கு கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 121 நாடுகள் ஆதரவளித்திருந்ததுடன், இலங்கையும் அதில் ஒன்றாக இருந்து வந்தது. இதுவரையில் ஐ.நா. தீர்மானம் ஒன்றுக்கு ஆகக்கூடிய நாடுகள் ஆதரவளித்திருந்தமை இதுவே முதல் தடவையாகும். மரண தண்டனையை அமுல் செய்யும் பொழுது நீதி ஏதேனும் விதத்தில் பிழைத்தால் அதனை ஒரு போதும் திரும்பப் பெற முடியாது என்ற விடயத்தையும், மீண்டும் ஈடு செய்ய முடியாது என்ற விடயத்தையும் ஏற்றுக்கொள்வதில் 120 நாடுகளுடன் இலங்கையும் இணைந்திருந்தது. மரண தண்டனை குற்றச் செயல்களைத் தடுக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளது என்பதனை நிரூபித்துக் காட்டுவதற்கான முடிவான சான்றுகளும் இருந்து வரவில்லை. தொடர்ச்சியாக மரண தண்டனையை அமுல் செய்து வருவது குறித்த ஆழமான கவலையை உலகளாவிய ரீதியில் கூட்டாக வெளிப்படுத்தியிருந்த நாடுகளில் இலங்கையும் ஒன்றாக இணைந்திருந்தது. மரண தண்டனை தொடர்பான தற்காலிகத்தடைகளை கொண்டிருக்கும் நாடுகள் அவற்றைத் தொடர்ந்து பராமரித்து வர வேண்டும் என்றும் ஊக்குவிக்கப்பட்டிருந்தன. இப்பொழுது இந்தத் தீர்மானத்தின் ஆறு மாதங்களின் பின்னர், மரண தண்டனை தொடர்பாக மிக நீண்டகாலமாக நாட்டில் நிலவி வந்த தற்காலிகத் தடை முடிவுக்கு வருவது போல் தெரிகின்றது. மரண தண்டனையை ஒழிக்கும் விடயத்தில் முன்னேற்றம் காட்டுவதிலும் பார்க்க, இந்தத் திசையில் நாடு இப்பொழுது சென்று கொண்டிருக்கின்றது. போதைப் பொருட்களுடன் சம்பந்தப்பட்ட குற்றங்களுக்கான மரண தண்டனையும் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயத்தின் உறுப்புரை 6 இனை மீறுகின்றது. இலங்கையும் இந்த சமவாயத்துக்கு ஒரு தரப்பாக இருந்து வருவதுடன், சர்வதேசச் சட்டத்தின் கீழ் அத்தகைய மரண தண்டனைகள் சட்ட விரோதமான கொலைகள் எனக் கருதப்படுகின்றன.

சர்வதேச மன்னிப்புச் சபையின் தரவுகளின் பிரகாரம் சட்ட ரீதியான மரண தண்டனையை நிறைவேற்றும் நாடுகளின் எண்ணிக்கையும், அதே போல மரண தண்டனை தொடர்பான தீர்ப்புக்களை வழங்கி வரும் நாடுகளின் எண்ணிக்கையும் இப்பொழுது வீழ்ச்சியடைந்து வருகின்றன. 2018 ஆம் ஆண்டில் 20 நாடுகளில் ஆகக் குறைந்தது 690 மரண தண்டனைகள் நிறைவேற்றப்பட்டிருப்பதாகவும், இது 2017 ஆம் ஆண்டு தரவுகளுடன் (ஆகக் குறைந்தது 993 மரண தண்டனைகள்) ஒப்பிடும் பொழுது 31% வீழ்ச்சியைக் காட்டுகின்றது என்றும் தெரிவிக்கும் சர்வதேச மன்னிப்புச் சபை, கடந்த தசாப்தத்தின் போது அது பதிவு செய்திருக்கும் ஆகக்குறைந்த மரண தண்டனைகளின் எண்ணிக்கையாகவும் இது இருந்து வருகின்றது என்றும் குறிப்பிடுகின்றது. 2018ஆம் ஆண்டில் 54 நாடுகளில் 2531 மரண தண்டனை தீர்ப்புக்கள் வழங்கப்பட்டதாக சர்வதேச மன்னிப்புச் சபை பதிவு செய்துள்ளது. 2017ஆம் ஆண்டில் விதிக்கப்பட்ட 2591 மரண தண்டனைகளுடன் ஒப்பிடும் பொழுதும் இது ஒரு வீழ்ச்சியைக் காட்டுகின்றது. 2018ஆம் ஆண்டின் முடிவில் உலக அளவில் 19,336 பேர் மரண தண்டனையை எதிர்பார்த்துக் காத்திருந்தனர். 170 இற்கும் மேற்பட்ட நாடுகள் ஒன்றில் மரண தண்டனையை ஒழித்துள்ளன அல்லது சட்டத்தில், நடைமுறையில் ஒரு தற்காலிகத் தடையை அறிமுகம் செய்து வைப்பதன் மூலம் மரண தண்டனை நிறைவேற்றுதல்களை முடிவுக்கு கொண்டுவருவதற்கு சாதகமான ஒரு நிலைப்பாட்டை எடுத்துள்ளன. 40 இற்கும் குறைந்த நாடுகளே இப்பொழுது இந்த மரண தண்டனை வழக்கத்தை பின்பற்றி வருகின்றன. ஐக்கிய நாடுகள் அமைப்பின் தரவுகளின் பிரகாரம் 2019 மே 23 திகதி அன்றுள்ளவாறு, மரண தண்டனையை ஒழிக்கக் கோரும் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயத்தின் இரண்டாவது மேலதிக ஆவணத்தை 87 நாடுகள் அத்தாட்சிப்படுத்தியிருந்தன.

கொலைகளுக்கு எதிரான சமயப் போதனைகள்

ஒரு கத்தோலிக்கர் என்ற முறையில் நான் நம்பிக்கை வைத்திருக்கும் அடிப்படைக் கோட்பாடுகளில் ஒன்று "நீ கொலை செய்யாதிருப்பாயாக" என்பதாகும். மனித உயிர் புனிதமானது என்றும், மரண தண்டனை "அது எந்தவொரு வடிவத்தில் நிறைவேற்றப்பட்டு வந்தாலும் கூட, மனிதக் கண்ணியத்தை குலைக்கக் கூடிய, மனித நேயமற்ற ஒரு செயலாக இருந்து வருகின்றது" என்றும் ஒரே சீரான நிலைப்பாட்டை பாப்பாண்டவர் பிரான்சிஸ் எடுத்திருப்பதுடன், இது தொடர்பாக நேரடியாகத் தனது கருத்தை வெளிப்படுத்தியுள்ளார். அது "வேதாகமத்துக்கு எதிரானது" என்றும் அவர் கூறியுள்ளார். எனினும், கொழும்பு கத்தோலிக்க பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கடந்த ஆண்டு ஜூலை மாதம் வெளியிட்ட அறிக்கையில் ஒரு சில சம்பவங்கள் தொடர்பாக மரண தண்டனை நிறைவேற்றப்படுவதனைத் தான் ஆதரிப்பதாகக் குறிப்பிட்டிருந்தார். மிகக் கொடூரமான குற்றச் செயல்களை இழைத்திருக்கும் நபர்கள் வாழ்வதற்கான தமது சொந்த உரிமையை பறி கொடுத்திருக்கின்றார்கள் எனக் கருத முடியும் என்றும், அதனால் அவர்கள் தொடர்பாக நீதிமன்றங்கள் என்ன தண்டனையை வழங்குகின்றனவோ அதனை அமுல் செய்ய முடியும் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார். கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் அறிக்கை வெளியிடப்பட்டு இரு வாரங்களுக்கும் குறைந்த காலப் பகுதியில் ஓகஸ்ட் 01ஆம் திகதி வத்திக்கான், பேராயர்களுக்கு ஒரு கடிதத்தை அனுப்பி வைத்திருந்தது. அந்தக் கடிதத்தில் மரண தண்டனையை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும், அப்பாவி மக்களின் உயிரை பாதுகாப்பதற்கெனப் பயன்படுத்தப்படும் நிலையிலும் கூட அது தேவையற்றது என்றும் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. இலங்கைக் கத்தோலிக்க பேராயர் சபை 2018 ஓகஸ்ட் 09ஆம் திகதி வெளியிட்ட ஓர் அறிக்கையின் ஊடாக இந்த நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்டிருந்தது. அந்த அறிக்கை வத்திக்கான் கடிதத்திலிருந்து விரிவாக மேற்கோள்களை காட்டியிருந்ததுடன், தாம் நிபந்தனையற்ற விதத்தில் மரண தண்டனையை எதிர்ப்பதாகத் தெளிவாக குறிப்பிடப்பட்டிருந்தது. கர்தினால் றஞ்சித் ஆண்டகை அவர்கள் தனது முன்னைய நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு, அந்த அறிக்கையில் கைச்சாத்திட்டிருந்தார்.

பௌத்த மக்கள் பெரும்பான்மையினராக வாழும் இந்த நாட்டில் பௌத்த மதத்தின் முதலாவது கோட்பாடு கொல்வதிலிருந்து தவிர்த்து கொள்ள வேண்டும் என்பதாகும். ("பானதி பார்த்த வேரமணி சிக்காபதம் சமாதியாமி".)

மரண தண்டனை - அல்லது சட்ட ரீதியான கொலைகள் - இலங்கையின் சர்வதேச கடப்பாடுகள், சமய மற்றும் ஆன்மீக விழுமியங்கள் என்பவற்றுக்கு எதிரானதாகும். அந்த விழுமியங்கள் மனித வாழ்வின் புனிதத்துவத்தை மேலோங்கச் செய்கின்றன. நாங்கள் மரண தண்டனையை எதிர்க்க வேண்டும். குறுங்காலத்தில் அது தொடர்பான தற்காலிக தடையை பராமரித்து வர வேண்டும் என்று கேட்டுக்கொள்வதுடன், நீண்ட காலத்தில் உள்நாட்டு சட்டத்திலிருந்து மரண தண்டனையை ஒழிக்க வேண்டும் என்றும், மரண தண்டனை ஒழிக்கப்பட வேண்டும் என கேட்டுக்கொள்ளும் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயத்தின் இரண்டாவது மேலதிக ஆவணத்தை இலங்கை அத்தாட்சிப்படுத்த வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ள வேண்டும். ■

கதிர்காமம்: அறியாத சேதிகள்

■ அதிதன்

இலங்கையில் இந்துக்களும் பௌத்தர்களும் ஒரே வரிசையில் நின்று இறைவனை நெஞ்சாரப் பிரார்த்தித்து வரும் ஒரே இடம் எதுவென்றால் நாம் முதலில் கதிர்காமத்தைச் சொல்லி விடலாம். வள்ளியை முருகன் இங்கே தான் காதலித்துக் கரம் பிடித்தான் என இந்துக்கள் நம்புகின்றனர். ஒரு காலத்தில், வட இலங்கையை ஆண்டு வந்த எல்லாளனுடன் போர் புரியச் செல்ல முன், சிங்கள மன்னன், துட்டகைமுனு கதிர்காமத்துக்கு வந்து முருகனை வணங்கி, அதன் பின் அந்தப் போரில் வெற்றி அடைந்தான் என, சிங்களவர்களின் சரித்திரக் கதைகள் கூறுகின்றன. அதன் பின் துட்டகைமுனு மன்னனால் இந்தக் கோயிலுக்கு பல மானியங்கள் அளிக்கப்பட்டதாகவும் சொல்லப் படுகின்றது.

தமிழர்களுக்கோ தனிப் பெருங் கடவுள், முருகன்! தமிழ்மொழியை உலகுக்கு அளித்த வனென முருகன் போற்றப்படுகின்றான். தமிழர்களின் பழம்பெரும் வழிபாடாக வேல் வழிபாடு இருந்து வருகின்றது. முருகனின் மூல ஆயுதமான வேலை, அவனாகவே கண்டு தொழுதலே, வேல் வழிபாடாகும். இன்று தமிழ்நாட்டில் அருகிவிட்ட அந்த தனிப்பெரும் வழிபாடு இலங்கையின் பல இடங்களிலும் காணக் கிடைக்கின்றது. இலங்கை வாழ் தமிழர்களின் ஆன்மீகத்தில் முருகனுக்கே எப் போதும் முதன்மை இடமுண்டு. எனினும் காலப் போக்கில் சிங்கள மயப்படுத்தப்பட்டு, தமிழர்களிடமிருந்து கதிர்காமக் கந்தன் தூரச் சென்றுவிட்டார்.

கதிர்காமத்தில் வேல் வழிபாட்டை விடவும் இன்னும் சூட்சுமமான முருக வழிபாடு தொன்று தொட்டு நிலவி வருகின்றது. கதிர்காம முருகன் ஆலயத்தின் கருவறைக்குள்ளே அதி சக்தி வாய்ந்த சடாட்சர யந்திரம் இருப்பதாகவும், அது தமிழ்ச் சித்தர் மரபில் முதனிலையில் வைத்துப் போற்றப் படும் போகரால் உருவாக்கப்பட்டதெனவும் கூறப் படுகின்றது. அந்தக் கருவறையில் மந்திர பூசனை எதுவும் நிகழ்வதில்லை. கப்புறாளை என்று கூறப் படும் பூசகர் வாய் கட்டி மௌனப் பூஜை நிகழ்த்து கின்றார். கப்புறாளைகளைத் தவிர, வேறு எவரும் அந்தக் கருவறைக்குள் அனுமதிக்கப்படுவதில்லை.

15 ஆம் நூற்றாண்டளவில் தமிழகத்தில் வாழ்ந்து, அருந்தமிழ்க் கவி செய்த அருணகிரிநாதர் தனது திருப்புகழில் "வனமுறை வேடர் அருளிய பூஜை மகிழ் கதிர்காமம் உடையோனே" என்று, கதிர் காமத்தில் வாழும் முருகனைச் சொல்கின்றார். வேடர் களால் வனத்தில் அவர்களின் வழிபாட்டு முறை களின் படி நிகழ்த்தப்பட்ட பூஜைகளை ஏற்று மகிழ்ந் திருக்கின்றவன் முருகன் என்பது அதன் பொருள். இன்றைய கதிர்காமம் சில நூறு ஆண்டுகளுக்கு முன்னர்தான் நாகரிக மக்கள் வசம் வந்ததெனவும் அந்த வழிபாட்டுத் தலம் தோன்றிய காலப்பகுதியில் இருந்து வேடர்களாலேயே அது பரிபாலிக்கப்பட்டு வந்தது எனவும் கூறப்படுகின்றது.

கதிர்காமத்தின் திருவிழாக் காலத்தில் வெகு துரத் திலிருந்து பாத யாத்திரையாகவே கதிர்காமத்தை வந்தடைபவர்களின் அனுபவங்கள் தனியாக எழுதப் பட வேண்டியவை. அந்த அளவுக்கு அவர்களிடம் அற்புதக் கதைகள் கிடைக்கின்றன. யாழ்ப்பாணத்தில், இருந்து, திருகோணமலையில் இருந்து மட்டக்களப்பில் இருந்து என, கதிர்காமத்துக்கான பாதயாத்திரைக் குழுக்கள் தொடர்ந்து வந்த வண்ணமே இருக்கும். பள்ளம், மேடு தாண்டி, கற்கள் முட்களில் கீறுண்டும் கூட கதிர்காம முருகனைத் தேடி, கால்நடையாக வரும் இந்த பக்தர்களின் பயணங்கள், காடுகளின் ஊடாகவும் நடைபெறும். முருகனை மனதில் நினைந்து தோத்திரப் பாடல் களைப் பாடிய வண்ணம், அந்தப் பாத யாத்திரை அனைத்து இடர்களையும் தாண்டி தொடர்ந்து முன்னெடுக்கப் படுகின்றது.

கதிர்காம யாத்திரையூடாக கந்தனைத் தொழும் பணியை, அமெரிக்க பக்தரான பெட்ரிக் ஹரிகன் நெடுங்காலமாக நடத்தி வருகின்றார். அவர் இந்த பாத யாத்திரையை 1972இல் ஆரம்பித்ததாக கூறப் படுகின்றது. வெருகல் ஆலயத்திலிருந்தும் செல்வச் சந்நிதி ஆலயத்திலிருந்தும் வில்லூன்றி கந்தசுவாமி ஆலயத்திலிருந்தும் இப்பாதயாத்திரையை அவர் முன்னெடுத்திருந்தார். நாட்டின் போர் சூழ்நிலை காரணமாக கதிர்காமம் நோக்கிய இந்தப் பாத யாத்திரை சில காலம் தடைப்பட்டிருந்தது. எனினும் அது பின்னர் மீள ஆரம்பிக்கப் பட்டு நடை பெற்று வருகின்றது. கொடிய மிருகங்கள் சூழ்ந்த யால காட்டினூடாக ஆண்டு ஒன்றுக்கு, சரா சரியாக 40 ஆயிரம் முதல் 50 ஆயிரம் வரையான பக்தர்கள், கதிர்காமத்தைச் சென்றடைவதாகத் தெரிய வருகின்றது. பாதயாத்திரையை மேற்கொள் ளும் 90 சத வீதமான அடியவர்கள் உகந்தை மலை முருகன் ஆலயத்தில் இருந்துதான் காட்டினூடாக இந்தப் பாத யாத்திரையை மேற்கொள்கின்றனர். 10 சதவீதமானவர்கள் மட்டுமே, நகரங்களூடாகவும் பிரதான வீதிகளூடாகவும் கதிர்காமத்தை நோக் கிய தமது பாத யாத்திரையை முன்னெடுக்கின்றனர். வடக்கு, கிழக்கு, ஊவா ஆகிய மூன்று மாகா ணங்களில் இருந்தும் முருக பக்தர்கள் இந்தப் பாத யாத்திரையில் பங்கேற்கின்றனர். முருகக் கடவுளின் அருளை நாடி, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல் லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம் பாறை, மொனராகலை ஆகிய ஏழு மாவட்டங்களில் இருந்து பெரும்பாலான பக்தர்கள் வருவதன் காரண மாக, இது இலங்கையின் மிகப் பெரிய பாத யாத் திரை நிகழ்வாக கருதப்படுகின்றது.

கதிர்காமத்தின் பெரிய தேவாலயம் என்று கூறப்படும் முருகன் சந்நிதிக்கு அருகே, பிள்ளையார் சந்நிதி ஒன்று உண்டு. இங்கு கப்புறாளைகள் பூசை யில் ஈடுபடுவதில்லை. அதே போல், அதற்கு சற்றுத் தூரத்தில், தெய்வானை அம்மன் கோயில் உள்ளது. இது தமிழர்களாலேயே பெரும்பாலும் வணங்கப் பட்டு வருவதோடு இதன் நிர்வாகவும் இந்துக்கள் வசமே உள்ளது. முருகனுடைய முதல் மனைவியும் தேவர் இனத்தைச் சார்ந்தவளாகவும் கூறப்படுகின் றவள் தெய்வானை. பிள்ளைப் பேற்றுக்கும் குழந் தைகளின் நலத்திற்குமாக இவரை முதன்மையாக வணங்குவர்.

இது தவிர, பல்வேறு பௌத்த சந்நிதிகளும் விகாரைகளும் முருகனின் சந்நிதியைச் சுற்றிக் கட் டப்பட்டுள்ளன. இதே நிலையே, கதிர்காம பிர தேசத்தில் உள்ள கதிரை மலை அல்லது ஏழுமலை என்ற குன்றின் மேலும் உள்ளது. ஆண்டின் எல்லாக் காலப் பகுதியிலும் பக்தர்களால் நிரம்பிக் காணப்படும் கதிர்காமத்தில் பயணியர் விடுதிகளே அதிகமாக காணப்படுகின்றன. அங்குள்ள மக்கள் அங்குவரும் யாத்திரிகர்களையே தமது வருமானத் துக்கு நம்பியிருக்கின்றனர். பக்தர்களுக்கான பல பொருட்கள் அங்கு அன்றாடம் விற்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. கிடைப்பதற்கு அரிய நாட்டு மருந்துகளும், நல்ல தேனும் அங்கு பெறக்கூடிய அரிய வகைப் பொருட்கள் ஆகும்.

1918 ஆம் ஆண்டு காலப் பகுதியில், அரச அனுமதியின்றி யாத்திரிகர்கள் கதிர்காமத்துக்கு போவது தடை செய்யப்பட்டது. அந்தக்காலத்தில் இலங்கையை ஆண்ட ஆங்கிலேயர்களால் இந்தத் தடை உத்தரவு கொண்டுவரப்பட்டது. இதனை மீறி அங்கு செல்பவர்களுக்கு ஆயிரம் ரூபா அப ராதம் அல்லது ஓராண்டுக்கு மேற்படாத சிறைத் தண்டனை வழங்கப்பட்டதாக சொல்லப்படு கின்றது. ஆயிரம் ரூபா என்பது தற்போதைய பண மதிப்பில் அல்ல. 1918 ஆம் ஆண்டு காலத்தைய ஆயிரம் ரூபா என்பது தற்போது பல லட்சங்களுக்கு ஈடாக இருக்கலாம். இந்த தடை உத்தரவைக் கண்டித்து, அப்போதைய சட்டசபையில் சேர். பொன்னம்பலம் இராமநாதன் காரசாரமான உரை நிகழ்த்தியதை அடுத்தே, அந்தத் தடை உத்தரவு இரத்துச் செய்யபட்டது.

ஒரு காலத்தில் காடாக இருந்த கதிர்காமம் இன்று அரசினால் புனிதப் பிரதேசமாக பிரகடனப் படுத்தப்பட்டு உள்ளது என்றாலும் கூட, வேட்டுவ மக்களின் வழிபாடு இன்றும் தொடர்கின்றது. முருகனின் இரண்டாவது மனைவியான வள்ளி தமது குலத்திலிருந்து வந்தவள் என்ற உரிமையுடன், அவர்கள் இன்றும் அங்கு சென்று தமது வேட்டுவ மரபு சார்ந்த வழிபாடுகளைச் செய்து வருகின்றனர்.

பூத்து விரிந்த தாமரை மலர்களும் நீலோற் பலங்களும் கதிர்காம முருகனின் சூழலை அழகாக் குகின்றன. அலையடித்து ஓடாது அமைதியாக நகரும் மாணிக்க கங்கையில், நீராடிய வண்ணம் பக் தர்கள் தங்களின் வழிபாட்டுக்கு தயாராகிக் கொண்டு இருக்கின்றனர். கப்புறாளைகளின் மௌனப் பூசை யில் முருகக் கடவுளின் சாந்நித்யம் தொடர்ந்தும் உணரப்பட்டுக் கொண்டே இருக்கின்றது. ■

பிக்பாஸின் ஆதிக்கதை

■அவந்திகா

"பிக் பாஸ் தமிழ் -3" இதுதான் தற்போதைய தமிழ் குடும்பங்களின் அல்டிமேட் பொழுதுபோக்கு. இரவானாலே ஒரு பரபரப்பு தொற்றிக் கொள்கிறது. காரணம் பிக் பாஸ் ஒளிபரப்பாகின்ற நேரம் என்பதால். இந்த உணர்வு ஒருசிலருக்கு இருந்தாலும், அதில் அப்படி என்னதான் இருக்கிறது பார்ப்பதற்கு என்று சொல்பவர்களும் உண்டு... அதில் உண்மையும் இருக்கத்தான் செய்கிறது. அடுத்தவர் வீட்டை எட்டிப்பார்த்தால் எப்படியிருக்கும்? அப்படித்தான் பிக் பாஸும் இருக்கிறது என்பதுதான் பலரது விமர்சனம்.

கடந்த சில வாரங்களாக இலங்கையிலும் திரும்பிய இடமெல்லாம் இந்த பிக் பாஸை பற்றிய பேச்சுகளும், சமூக வலைளத்தளங்களில் மீம்ஸ்களும் ஆளாளுக்கு அவர்களுக்கு ஏற்றாற்போலான விமர்சனங்களையும் கடக்காமல் நாம் எவரும் இருந்திருக்க முடியாது.ரியாலிட்டி நிகழ்ச்சிகளுக்கு பெயர்பெற்ற தமிழ்நாட்டின் விஜய் டிவி இம்முறையும் மூன்றாவது முறையாக இந்த பிக்பாஸை நடத்துகிறது. முதல் இரு சீசன்களை போலவே இம்முறையும் நடிகரும் அரசியல்வாதியுமான கமல்ஹாசன் அவர்கள் நிகழ்ச்சியை முன்நின்று நடத்துகிறார். இதில் இரண்டு இலங்கையர்களும் இருக்கிறார் என்பதில்தான் இங்கு நம் மத்தியில் இந்த நிகழ்ச்சி எடுபடுவதற்கு மிக முக்கியமான காரணமாக அமைந்திருக்கிறது.

அதிலும் தென்னிந்திய பிரபலங்களை மிஞ்சும் அளவுக்கு இலங்கையின் 'லொஸ்லியா' இருந்துவருகிறார். முதலாவது பிக்பாஸ் ஒவியாவுக்கு எப்படியோ இம்முறை லொஸ்லியாவுக்கு. அட இலங்கையிலிருந்து வந்த இன்னொரு பையனின் நிலை எப்படி என்றால்... அவரும் இருக்கிறார் என்று கடந்து போய்விடுகிறார்கள்.

இவையெல்லாம் இப்படியே கடந்துபோக இந்த பிக் பாஸ் நிழ்ச்சியில் உண்மை இருக்கிறதா? அல்லது ஸ்கிரிப்டில் எழுதிகொடுத்தபடி நடக்கிறது வெறும் வர்த்தக நோக்கம் மட்டும்தானா இதில் இருக்கிறது என்ற பலதரப்பட்ட கேள்விகள் நமக்குள் எழும். அந்த கேள்விகளுக்கான பதிலை இதன் மூலத்தை அறிந்தால்தான் நம்மாள் விளங்கிக் கொள்ள முடியும். ஆகவே நடைபெற்றுக் கொண்டிருக்க பிக்பாஸின் விமர்சனமோ விளக்கவுரையோ எழுதாமல்... இதன் வரலாற்றை கொஞ்சம் பார்ப்போம்.

யார் முன்னோடி?

முதன்முதலில் எண்டமால் என்னும் நிறுவனம் 'பிக் பிரதர்' (டீபை டீசழவாநச) என்ற ஒரு ரியாலிட்டி நிகழ்ச்சியை நெதர்லாந்து நாட்டில் 1999ஆம் வருடம் அறிமுகம் செய்தது. ஜோடி டி மொல் என்பவர்தான் இதன் உருவாக்கி. இவர் வெறும் திரைப்படங்கள், சீரியல் மட்டுமே அறிந்திருந்த காலத்தில் புதுமையான நிகழ்ச்சி ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பிக் பிரதர் எனும் இந்த நிகழ்ச்சிக்கான கருத்துருவாக்கத்தை முன்வைத்தார்.அதன்படி அறிமுகப்படுத்தப்பட்ட பிக் பிரதர் நிகழ்ச்சியானது நெதர்லாந்து நாட்டில் அமோக வரவேற்பைப் பெற்றது. அதன் தொடர்ச்சியாக இங்கிலாந்து அமெரிக்கா போன்ற மேலைத்தேய நாடுகளில் இந்த நிகழ்ச்சி அறிமுகமானது. இந்த நிகழ்ச்சி இதுவரை 54 நாடுகளில் 387 சீசன்களை கடந்து வெற்றிநடைபோட்டு வருகிறது. இந்த நிகழ்வு அந்தந்த நாட்டின் கலை, கலாசாரம், வெகுஜன ரசனை சார்ந்து சிற்சில மாற்றங்களுடன் வெளியாகிறது.

இந்த பிக் பிரதர்தான் தற்போது பிக் பாஸாக தமிழில் நாம் பார்த்துக்கொண்டிருப்பது.போட்டி எப்படி நடக்கும்? நூற்றுக்கணக்கான கெமராக்களின் கண்காணிப்பின் கீழ், ஒரு தனிமையான வீட்டில் எவ்விதப் புறத்தொடர்புமின்றி ஒன்றாக வாழ்ந்து வருகின்ற குழுவினரே போட்டியாளர்கள். இந்தக் குழுவினரில் யார் கடைசிவரை அந்த வீட்டில் தாக்குப்பிடிக்கின்றாரோ அவரே வெற்றியாளர். இது அறிமுகமான புதிதில் பார்வையாளர்களிடையே இந்நிகழ்ச்சி குறித்த ஆர்வம் தீயாகப் பரவியது. புகழ்பெற்ற பத்திரிகைகளிலும் வாராந்திர நிகழ்ச்சிகளிலும் யார் வெற்றி பெறுவார்கள் என்று ஒவ்வொரு வாரமும் காரசாரமாக விவாதித்தார்கள்.

குறிப்பிட்ட போட்டியாளர்கள் பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட ஒரு வீட்டில் தங்க வைக்கப்படுவார்கள். நிகழ்ச்சி தொடங்கிய அன்று அந்த வீட்டுக்குள் அனுமதிக்கப்படுபவர்கள், வெளியேற்றப்பட்டலோ அல்லது நிகழ்ச்சி முடிந்தாலோதான் அந்த வீட்டில் இருந்து வெளியேற அனுமதிக்கப்படுவார்கள். அந்த வீட்டில் தொலைக்காட்சி, தொலைபேசி, கையடக்கத் தொலைபேசி, இணையம், கடிகாரம், பேனா, பென்சில், பேப்பர்... எந்தத் தொலைத் தொடர்பு சாதனத்துக்கும் அனுமதி கிடையாது.

போட்டியாளர்கள் வெளிஉலகத் தொடர்பிலிருந்து முற்றிலும் விலக்கி வைக்கப்படுவார்கள்.' கழிவறை, குளியலறை தவிர அந்த வீட்டின் அனைத்து இடங்களிலும் கேமரா பொருத்தப்பட்டு போட்டியாளர்களின் செயல்பாடுகள் 24 மணிநேரமும் கண்காணிக்கப்படும். அவர்களுக்குள் போட்டிகள் நடத்தப்படும். இவர்களின் செயற்பாடுகளைப் பொறுத்து பொதுமக்கள் அவர்களுக்கு வாக்களிப்பார்கள். குறைவான வாக்குகளைப் பெறுபவர்கள் வாரம் ஒருவராக போட்டியிலிருந்து வெளியேற்றப்படுவார்கள். இறுதி வாரத்தில் மூன்று போட்டியாளர்கள் மட்டுமே மிஞ்சுவார்கள். அவர்களில் வெற்றியாளர் யார் என்று அறிவிக்கப்பட்டு அவருக்கு பரிசு வழங்கப்படும்.இதுதான் இந்த நிகழ்ச்சி....

விதை யார் போட்டது?

இதன் மூலம் நெதர்லாந்துக்காரர் என்றும் சொன்னோம்... ஆனால் அது அவர் மட்டுமல்ல அவருக்கு முன்மே ஒரு நாவலாசிரியர் இந்தக் கருத்துருவாக்கத்தை கொடுத்திருக்கிறார். ஆனால் அவர் அதை இரத்தமும் சதையுமாகச் சொன்னார். இவர்களோ கேளிக்கை களியாட்டமாக அதை மாற்றிவிட்டனர். உலகப் புகழ்பெற்ற எழுத்தாளரான ஜோர்ஜ் ஆர்வெல் என்பவரால், ரஷ்யாவில் நிகழ்ந்த ஸ்டாலின் ஆட்சியின் போதான ஏகாதிபத்தியத்தையும் கண்காணிப்பின் அரசியலையும் பகடி செய்து எழுதப்பட்ட '1984' என்னும் நாவலின் மையக் கருத்திலிருந்துதான் 'பிக் பிரதர்' நிகழ்ச்சிக்கான உள்ளடக்கம் உரவாக்கப்பட்டிருக்கிறது. நாவலில் அனைவரையும் கண்காணிக்கின்ற 'பிக் பிரதர்' என்னும் கதாபாத்திரமும் அதன் அச்சமூட்டும் கண்காணிப்பும்தான் அந்த நிகழ்வின் மையம்.

1984 நாவலில் சகமனிதர்களைத் துரோகிகளாகச் சித்திரித்து பிக் பிரதரிடம் காட்டிக்கொடுக்கும் தன்மையின் ஆட்டமாகவும், அந்த ஆட்டவிதிகள் வரலாற்றில் நாஜி அதிகாரிகளிடம் சக புரட்சியாளர்களைக் காட்டிக் கொடுக்கும் சக கலைஞர்களின் கைக்கிளையாகவும் மாறி மாறிச் சுழலும் காலச்சுழற்சியின் பல்வேறு பரிமாணங்கள் தற்போது புகழ்பெற்ற நிகழ்ச்சியாக மாறிப்போனது.ஒற்றைக்கண் கொண்ட கண்ணாடிச் சட்டகத்தின் வடிவம். இந்த வடிவம் இன்று வரை பெரும் பாராட்டுதல்களையும் சமூக நெருக்கடிகளிலிருந்து தப்பிக்க முடியாத கண்காணிப்பின் குறியீடாகவும் உலகம் முழுக்க விளங்குகிறது. உலகையே தன்வசப்படுத்தி வைத்திருக்கும்... எந்த ஒரு சம்பவத்திற்கும் எந்த ஒரு பொருளுக்கும் இவர்கள்தான் காரணம் என்று ஒரு குடும்பத்தை சொல்லும் இலுமினாட்டிகளின் குறியீடும் ஒற்றைக் கண்தான்.

இந்த ஒற்றைக்கண் கொண்ட குறியீடு, நீங்கள் கண்காணிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் எந்தப்புறம் திரும்பினாலும் அந்த ஒற்றைக்கண் 'ஒற்றைத் தன்மையுடன் மட்டுமே' முன்வைக்கும்.இந்த ஒற்றைக் கண்ணாடியின் சட்டகத்தை '1984' நாவலின் ஒவ்வொரு பக்கமும் அணிந்திருக்கிறது. உலகளவிலான வெகுஜனக் கலையியலாளர்கள், தங்களது கலை இலக்கியச் செயல்பாடுகளை அடுத்த கட்டத்தை நோக்கி நகர்த்தும் போது, இதுபோன்ற செவ்வியல் கலை வடிவங்களையே தற்கால பாபுலர் சூழலுக்கேற்ப உருமாற்றுகிறார்கள். "இது ஒரு வகையான பின்நவீனத்துவக் கலைச்செயல்பாடு' என்கிறார் கலை விமர்சகர் ரிச்சர்ட் ஹோகார்த். 1984இல் ரத்தமும் சதையுமாக நிகழ்ந்த வாழ்வியல் அவலத்தை வாழ்வியல் அபத்தமாக ஆட்டக் காட்சியாக உருமாற்றியிருக்கிறது வெகுஜன கலை ஊடக வெளி என்ற விமர்சனமும் இந்த பிக் பிரதர் மீது வைக்கப்படுகின்றது.

யார் இந்த ஜோர்ஜ் ஆர்வெல்?

இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சி நடந்த போது, பிஹாரில் 1903 ஆம் ஆண்டு பிறந்தார் ஜோர்ஜ் ஆர்வல். தந்தை இந்திய சிவில் பாதுகாப்புப் பிரிவில் பணி புரிந்தவர். இயற்பெயர் எரிக் ஆர்தர் பிளேயர். ஒரு வயது குழந்தையாக இருந்தபோது, அம்மா இவரை இங்கிலாந்துக்கு அழைத்துச் சென்றார். இங்கிலாந்தில் அம்மாவுடனும் சகோதரிகளுடனும் வாழ்ந்து வந்தார். தந்தையைப் பார்ப்பதற்காக எப்போதாவது இந்தியாவுக்கு வந்து செல்வார்கள். முதல் உலகப்போருக்குப் பிறகு, ஷிப்லேக் என்ற இடத்தில் குடியேறினர்.பர்மாவில் பிரிட்டிஷ் இம்பீரியல் பொலிஸில் சேர்ந்து 1927 வரை பணி புரிந்தார். இதையடுத்து ஐரோப்பா முழுவதும் பயணம் மேற்கொண்டார். அரசு, அதிகார வர்க்கத்தில் இருந்து முழுவதுமாக விலகி ஒரு எழுத்தாளராகவே இருந்துவிடுவது என அப்போதுதான் தீர்மானித்தார்.

எழுத்துப் பணிக்கு தடங்கல் ஏற்படாதவாறு பல்வேறு வேலைகள் செய்தார். 1935இல் 'ஜோர்ஜ் ஆர்வெல்' என்ற புனைப்பெயரில் நாவல்கள் எழுதினார். பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதினார். பத்திரிகைகளிலும் பணியாற்றினார். 1937இல் ஸ்பானிய உள்நாட்டுப் போரில் கலந்துகொண்டார். போர் அனுபவங்களை 'அனிமல் பார்ம்' என்ற நாவலாக வடித்தார். இது 'விலங்குப் பண்ணை' என்ற பெயரில் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது. 1948இல் எழுதி முடித்த நாவலுக்கு அதன் கடைசி இரு இலக்கங்களை திருப்பிப் போட்டு 'நைன்டீன் எய்ட்டி போர்' என்று தலைப்பிட்டார்.உன்னதமான நோக்கங்களோடு தொடங்கும் எல்லா புரட்சியும் காலப்போக்கில் அதிகார போதையால் அழிந்து போகும் அவலத்தை இந்த 2 படைப்புகளும் துல்லியமாகப் படம் பிடித்துக் காட்டின. இவை உலகப் புகழ்பெற்றன.

இதுதவிர, பல நாவல்களை எழுதினார். ஏராளமான கவிதைகளையும் படைத்தார். இவை பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. ஆங்கில இலக்கியப் படைப்பாளிகளில் முக்கியமானவராகப் போற்றப்படும் ஜோர்ஜ் ஆர்வெல், காசநோயின் பிடியில் சிக்கி 47ஆவது வயதில் காலமானார். ■

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முன்னைய ஜனாதிபதிகள் எவரும் மரண தண்டனைக்கு அனுமதி வழங்கியிருக்கவில்லை

மரண தண்டனை எமது சட்டப் புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், அது காகிதத்தில் மட்டுமே இதுவரை காலமும் இருந்து வந்துள்ளது. தற்போதைய அரசியல் யாப்பின் கீழ் இதுவரையும் எந்தவொரு ஜனாதிபதியும் அதனை அமுல் செய்திருக்கவில்லை.

உயர் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டிய கொலைச் சம்பவத்தில் குற்றம் சாட்டப்பட்டிருந்த நபர்கள் மீது 2005ஆம் ஆண்டில் குற்றத் தீர்ப்பு வழங்கப்பட்ட பொழுது, மரண தண்டனை மீண்டும் எடுத்து வரப்பட வேண்டும் என முனைப்பான விதத்தில் குரல்கள் எழுப்பப்பட்டன. ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க இந்த வேண்டுகோள்களுக்கு செவிமடுக்க முடியும் என்ற அச்சத்தில் அவருடன் இந்த விடயம் குறித்து கலந்துரையாடுமாறு பல நபர்கள் என்னிடம் கேட்டுக் கொண்டார்கள். அம்பேபிட்டிய சட்டக் கல்லூரியில் வகுப்புத் தோழராக இருந்து வந்த போதிலும், நான் உலக அளவிலான பல விவரங்கள் மற்றும் புள்ளிவிபரங்கள் என்பவற்றுடன் நல்ல ஆயத்த நிலையில் ஜனாதிபதி குமாரதுங்கவை சந்திப்பதற்குச் சென்றேன். நான் எனது முதலாவது வார்த்தையை முடிப்பதற்கு முன்னர், அவர் என்னுடைய பேச்சை இடைநிறுத்தி, இப்படிச் சொன்னார்: "யார் என்ன தான் சொன்னாலும் மரண தண்டனை உத்தரவில் நான்தான் கைச்சாத்திட வேண்டும். அதனை நான் ஒரு போதும் செய்யமாட்டேன்." சந்திரிக்கா குமாரதுங்கவுடன் நான் நடத்திய மிகச் சுருக்கமான சம்பாஷணை அதுவாகும். தனது தந்தை மற்றும் கணவர் ஆகிய இருவரும் படுகொலை செய்யப்பட்டிருந்த ஒருவரிடமிருந்து-கொலை

மைத்திரியைச் சுற்றப்போகும் ஆவிகள்

முயற்சியிலிருந்து மயிரிழையில் உயிர் தப்பி, ஒரு கண்ணை இழந்திருந்த ஒருவரிடமிருந்து- இந்த வார்த்தைகள்வந்ததுகுறித்து நான்பெருமளவுக்குமகிழ்ச்சிடைந்தேன்.

அம்பேபிட்டிய கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருந்த நபர்களின் மேன்முறையீடுகள் 2006ஆம் ஆண்டில் தள்ளுபடி செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில், ஆகக் குறைந்தது பிரதான குற்றவாளியையாவது தூக்கிலிட வேண்டும் என்ற விதத்தில் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தன. எவ்வாறிருப்பினும், சரத் அம்பேபிட்டியவின் மற்றொரு வகுப்புத் தோழராக இருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அந்த வேண்டுகோளை ஏற்க மறுத்தார். மரண தண்டனைக்கான தனது எதிர்ப்பை கடந்த வாரத்தில் அவர் மீண்டும் வலியுறுத்திக் கூறியதை பார்த்த பொழுது நான் மகிழ்ச்சிடைந்தேன்.

ஜனாதிபதி சிறிசேன மரண தண்டனையை நிறைவேற்றும் விடயத்தைத் தொடர்ந்து முன்னெத்துச் சென்றால் ஒரு பௌத்தர் என்ற முறையில் அவர் ஒருபோதும் நிம்மதியாக தூங்க முடியாதிருக்கும். குற்றம் சாட்டப்பட்டிருக்கும் இந்த நான்கு நபர்களினதும் ஆவிகள் என்றென்றைக்கும் அவரை சுற்றிக் கொண்டிருக்கும். ஜனாதிபதி சிறிசேன பல தடவைகள் தனது முன்னைய வாக்குறுதிகள் மற்றும் தனது கடப்பாடுகள் என்பவற்றை மீறி வந்திருக்கின்றார். அது தொடர்பான மிகப் பிந்திய உதாரணம் தானே முனைப்புடன் முன்னெடுத்த 19ஆவது திருத்தத்திற்கு எதிராக அவர் இப்பொழுது கடுமையாக குரல் கொடுத்து வருவதாகும். இப்பொழுது அதனை ஒரு சாபக்கேடாக அவர் குறிப்பிட்டுள்ளார். அவர் இந்த மரண தண்டனைகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச் சென்று, சில வருடங்களின் பின்னர் தான் இது தொடர்பாக தவறிழைத்திருப்பதாக கூறினாலும் கூட நான் ஆச்சரியப்படமாட்டேன்.

தென்னாபிரிக்க அரசியலமைப்பு நீதிமன்றத்தின் வரலாற்று சிறப்பு மிக்க முன்னணித் தீர்ப்பொன்றை மேற்கோள் காட்டி, இந்தச் சிறு குறிப்பை முடிவுக்கு கொண்டு வருவது பொருத்தமாக இருக்கும் என நினைக்கின்றேன். மிகப் பிரபல்யமான Makwanyane வழக்கில் மரண தண்டனை வாழ்வதற்கான உரிமையை மீறுகின்றது என அந்நீதிமன்றம் ஏகமனதாக தீர்மானித்தது. "குற்றச் செயல்களைத் தடுப்பதற்கான மிகச் சிறந்த தடுப்புக் காரணி, குற்றவாளிகள் பிடிக்கப்பட்டு, அவர்களுக்கு எதிராக குற்றத்தீர்ப்பு வழங்கப்பட்டு, தண்டிக்கப்படுவார்கள் என்ற சாத்தியப்பாடாகும். ஆனால், இதுவே தற்போதைய நீதிமுறையில் காண முடியாத ஒரு விடயமாக இருந்து வருகின்றது [1995] (3) SA 391, [122] (CC). ஜனாதிபதி சிறிசேன தனது தூக்கத்திலிருந்து எழுந்து, இலங்கையின் நீதித்துறையிலும் கூட இல்லாமல் இருக்கும் ஒரு விடயமாக இதுவே காணப்படுகின்றது என்ற விடயத்தை புரிந்து கொள்வது நல்லது.

("On resuming implementation of death penalty" **என்ற தலைப் பில் தி ஐலன்ட் பத்திரிகையில் வெளியான கட்டுரையின் தமிழாக்கம்)**

இந்த வாரம் உங்களுக்கு...

மேடம்

இந்த வாரத்தில் குழப்பமின்றி செய்ற்படு வீர்கள். சிரமமான பணிகளைக் கண்டு மலைத்துப் போகாமல் நம்மால் செய்ய முடி யும் என்ற மனோ தைரியத்தைப் பெற்றிருப் பீர்கள். தெளிவான பேச்சு உங்கள் தைரியத் தைப் பறைசாற்றும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். எதிர்பார்த்த பண உதவி சரியான நேரத்தில் கிடைக்கும். தகவல் தொடர்பு சாத னங்கள் பகல் நேரத்தில் செயலிழந்து வீண் சிரமத்தைத் தரக்கூடும். வீட்டுக்குத் தேவை யான பொருட்கள் வாங்க நேரம் சாதகமாக அமையும்.

கடகம்

நினைத்த காரியத்தை ஏதேனும் ஒரு வழி யில் சாதித்துக் கொள்வீர்கள். எதிர்பார்க்கும் உதவிகள் விரைவில் கிடைக்கும். குடும்பத்தில் அவ்வப்போது லேசான சலசலப்புகள் தோன்றி மறையும். எதிர்பார்க்கும் பண வரவில் தாம தம் உண்டாகும். சொன்ன வாக்கை நிறை வேற்ற இயலாமல் சிரமப்படுவீர்கள். பண விவ காரங்களைக் கையாளும்போது அதிக கவ னம் தேவை. உறவினர்கள் வழியில் உண் டாகும் கலகங்கள் நன்மையில் முடியும். வாக னங்களை இயக்கும்போது எச்சரிக்கை அவ சியம்.

துலாம்

இந்த வாரத்தில் காரியம் பெரிதா, வீரி யம் பெரிதா என்பதைப் புரிந்துகொள்ளுங் கள். எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் சற்றே நிதானம் தேவை. குடும்பத்தில் அவ் வப்போது சிறுசிறு சலசலப்புகள் தோன்றி மறையும். வரவைவிட இந்த வாரத்தில் செலவு அதிகரிக்கலாம். கொடுத்த வாக்கை நிறை வேற்றுவதில் தாமதம் உண்டாகும். உடன் பிறந்தோருடன் இருந்த மனஸ்தாபம் நீங் கும். பிள்ளைகள் தங்கள் தேவைகளுக்கு உங் களைப் பெரிதும் சார்ந்திருப்பர். தம்பதியருக் குள் கருத்து வேறுபாடு தோன்றக்கூடும்.

மகரம்

தனித்துச் செயற்பட நினைக்கும் உங் களுக்கு இந்த வாரத்தில் ஒரு சில இடைஞ் சல்கள் தோன்றும். உங்களுக்கு எதிராகச் செயற்படுபவர்களை அடையாளம் காண் பீர்கள். வீண் வம்பு வந்து சேரும் நேரம் என்பதால் எந்த ஒரு சூழலிலும் பொறுமை இழக்காது நிதானத்தோடு செயற்பட வேண் டியது அவசியம். கடன் பிரச்சினைகள் சற்றே தலையெடுக்கக் கூடும். ஓயாமல் உழைத்து வரும் நீங்கள் உடல் ஆரோக்கியத்தில் கவ னம் செலுத்த வேண்டியது அவசியம். பிள்ளை களின் செயல்கள் பெருமையைத் தரும்.

இடபம்

சாமர்த்தியமான பேச்சுக்களின் மூலம் இந்த வாரத்தில் காரியத்தைச் சாதித்துக் கொள் வீர்கள். ராசிநாதன் சுக்கிரனின் ஆட்சி பலம் மன மகிழ்ச்சியைத் தரும். சொன்னதைச் செய்து முடிப்பதைக் கௌரவமாக எண்ணுவீர்கள். எப் போதும் மலர்ந்த முகத்துடன் காரியமாற்று வீர்கள். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடை பெறும். உறவினர்களின் வருகையால் கல கலப்பு கூடும். உங்களது பேச்சில் அடுத்தவர்க ளுக்கு ஆலோசனை சொல்லும்படியான கருத் துக்கள் அதிகமாக இடம்பிடிக்கும்.

சிம்மம்

இந்த வாரத்தில் உங்கள் பணிகளை விரைவாக செய்து முடிப்பீர்கள். வேகத்தை விட விவேகமே சிறந்தது என்பதை அனுப வ பூர்வமாக உணர்வீர்கள். தகுதியான நபர்க ளைத் தேர்ந்தெடுத்து வேலை வாங்கி உங்கள் காரியத்தை சாதித்துக் கொள்வீர்கள். சாமர்த் தியமாக செயற்பட்டு நெடுநாட்களாக நிலுவை யில் இருந்துவரும் குடும்பப் பிரச்சினை ஒன் றுக்கு தீர்வு காண்பீர்கள். குடும்பத்தில் சுபசெல வுகள் உண்டாகும். தனாதிபதியின் சாதகமான அமர்வு சிறப்பான பொருள் வரவைத் தரும்.

விருச்சிகம்

எதிர்பாராத தடங்கல்களைச் சந்தித்து வருகிறீர்கள். ஆயினும் இயற்கையில் மன உறுதி படைத்தவர் என்பதால் கவலை இல்லை. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். வரவை விட செலவுகள் கூடுவதை உணர் வீர்கள். கௌரவம் கருதி செய்ய வேண்டிய செலவை தவிர்க்க இயலாது. உங்களது வார்த் தைகள் மற்றவர்களால் தவறாகப் பொருள் கொள்ளப்பட்டு வீண் மனஸ்தாபம் உருவாகும். பிரச்சினைக்குரிய நேரத்தில் அதிகம் பேசாது அமைதி காக்க வேண்டியது அவசியம்.

கும்பம்

எந்த ஒரு காரியத்தையும் உடனுக்குடன் செய்ய நினைப்பீர்கள். எதையும் முன்கூட் டியே திட்டமிடாமல் மனதில் பட்டவுடன் செயற் படுத்த எண்ணுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். மனதில் இருக்கும் சந்தோஷம் வார்த்தைகளில் வெளிப்படும். இழுபறியில் இருந்த காரியம் ஒன்று இந்த வாரத்தில் முடி வுக்கு வரும். நெருங்கிய உறவினர் ஒருவ ருக்கு உதவி செய்யப்போய் சங்கடத்துக்கு ஆளா வீர்கள். பொது அறிவை வளர்த்துக் கொள் வதில் மிகுந்த ஈடுபாடு கொள்வீர்கள்.

மிதுனம்

ஜென்ம ராசியில் இணைவு பெறும் வலி மையான கிரகங்கள் உங்கள் திறமையை வெகுவாக ஊக்குவிக்கும். இதுநாள் வரை துச் சமாக எண்ணியவர்கள் உங்கள் திறமை யைக் கண்டு அதிசயிப்பர். இக்கட்டான பிரச்சி னைகளையும் அசாதாரணமாக சமாளிக்கும் திறன், உங்கள் கௌரவத்தை வெகுவாக உயர்த்தும். சுற்றியுள்ளவர்கள் தங்கள் பிரச்சி னைக்குத் தீர்வு காண உங்கள் உதவியை நாடி வருவர்.

கன்னி

இந்த வாரத்தில் சற்று அலைச்சல் கூடும். இதுநாள் வரை கண்ட தடைகள் விலகி நினைத்த காரியங்கள் நிதானமாக நடைபெறக் காண்பீர்கள். பரபரப்பாக செயற்படுவதை விடுத்து நிதானமாக செயற்படுவது நல்லது. குடும்பத்தில் நிலவும் சலசலப்புகளைப் போக்கி மகிழ்ச்சியான சூழலை உருவாக்க முயற்சிப் பீர்கள். சேமிப்பு உயர்வடையும் நேரம் இது. நீண்ட நாட்களாக நிலுவையில் இருந்து வரும் கடன் பிரச்சினை ஒன்று இந்த வாரத் தில் முடிவுக்கு வரும்.

தனுசு

கருமையான மனக்குழப்பத்துக்கு ஆளா வீர்கள். தவறான மனிதர்களை அடையா ளம் கண்டும் ஒதுங்க இயலாமல் தவிப்பீர் கள். நல்ல மனிதர்களின் சந்திப்பு உங் களை மேலும் பக்குவப்படுத்தும். குடும் பத்தில் அமைதி நிலவும். பண வரவு சீராக இருந்து வரும். ஆடம்பரச் செலவுகள் சற்று அதிகரிக்கும். புதிய சொத்து வாங்கும் முயற்சி தடைப்படும். உடன்பிறந்தோர் உதவி நாடி வருவர்.

மீனம்

மனதில் இருந்த கவலைகள் குறைந் திருப்பதாக உணர்வீர்கள். உற்சாகத் தோடு செயற்படுவீர்கள். எதைச் செய்தாலும் அதைச் சரியாக செய்து முடிக்க வேண்டும் என்பதில் கவனம் செலுத்துவீர்கள். யாருக் காகவும், எதற்காகவும் தன் நிலையை மாற் றிக் கொள்ளாது திடமாக செயற்படுங்கள். ஆதாயத்துக்காக பொய் சொல்வோரை அடை யாளம் கண்டு ஒதுங்குவீர்கள். செலவுகளைச் சமாளிக்கும் வகையில் பணவரவு தொடரும்.

மஹிந்த பக்கம்....

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

கேள்வி: ஏன் இப்படி ஏமாற்றுத்தன மாக நடந்து கொள்கிறது அரசாங்கம் ?

சுமந்திரன்: ஆம் .இந்த விடயத்தில், ஏதோ ஒரு விதமான அழுத்தத்துக்கு அர சாங்கம் உட்பட்டிருப்பது தென்படுகி றது. விசேடமாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன எங்க ளோடு இணங்குகிறார். ஆனால் அதை நடைமுறையிலே கொண்டுவர முடியா மல் இருக்கிறார். ஏதோ ஒரு தரப்பி னுடைய அழுத்தம் அவருக்கு இருப்பது தெரிகிறது. பிரதமருக்கும் அதை நாங் கள் சொல்லியிருக்கிறோம். ஆகையி னாலே இனியும் நாங்கள் இழுத்தடிப்புச் செய்ய முடியாது. அடுத்ததடுத்த வாரத் திலே அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக் கையில்லாப் பிரேரணையும் வருகிறது. ஆகவே அதற்கு முன் நாங்கள் முடிவு கட்டியே ஆக வேண்டும்.

கேள்வி: அழுத்தம் எங்கிருந்து வருகிறது. அதை நீங்கள் ஊகிக்கவில்லையா?

சுமந்திரன்: அதைத் திட்டவட்டமா கக் கூறமுடியாது. மனதில் சந்தேகமாக இருப்பதைப் பகிரங்கமாகக் கூற விரும்ப வில்லை.

கேள்வி: இந்தப் பிரச்சினையை தீர்க்க அரசாங்கத்துடன் பேசி நீங்கள் 3 மாத கால அவகாசம் கோரியிருக்கிறீர் கள். ஞானசார தேரர் ஒரு மாதத்தில் தீர்ப் பேன் என்கிறார் இது சாத்தியமா?

சுமந்திரன்: தேசியக் குழு அமைக்கப் பட்டிருக்கிறது. நிலப் பிரச்சினையை முதலில் தீர்க்க வேண்டும். அவர்கள் அதை ஒரு வாரத்தில்கூட செய்து முடிக் கலாம். இணக்கத்தை எட்டுவதுதான் அதன் ஒரேயொரு நோக்கம். நாங்களும் விட்டுக் கொடுப்புகள் செய்வதற்குத் தயா ராகத்தான் இருக்கிறோம். ஆனபடி யால், அன்றைக்கு அவர்கள் 3 மாதம் தேவை என்று சொன்னபோது அதை நாங்கள் எதிர்த்தோம். ஆனால் அவர்கள் எழுத்திலே கொடுத்ததில் அப்படி இருக் கிறது. உறுதிமொழியைநான் வாசிக்கிற போது அதை விட்டுவிட்டு வாசிக்க முடியாது. அரசாங்கம் கொடுத்ததை அவர்கள் இப்படித்தான் சொல்லியிருக் கிறார்கள் என்று சொன்னேன். 3 மாதம் தேவையில்லை என்பதுதான் எமது நிலைப்பாடும். 30 வருடமாக இருக்கும் பிரச்சினையை 3 மாதத்தில் தீர்ப்பது என்று சொல்வதுகூட இழுத்தடிப்புப் போலத்தான் தெரிகிறது. இந்த இழுத் தடிப்புக்கு இனிமேல் நாங்கள் இடம் கொடுக்க முடியாது. இரண்டில் ஒன்று தீர்மானிக்கப்பட வேண்டும்.

கேள்வி: இவ்வாறு தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமைச்சரவை யில் இல்லாததை ஒரு குறையாகப் பார்க்கலாமா?

சுமந்திரன்: இருக்கலாம். ஆனால், நான் முன்னரே சொன்னதுபோல எங்க ளுக்கு இருக்கிற தெரிவு ஒரு மட்டுப் படுத்தப்பட்ட தெரிவு என்பது அரசாங் கத்துக்கு தெரியுமாக இருந்தால் எங்க ளின் பேரம் பேசும் சக்தி குறைவாகத் தான் இருக்கப் போகிறது. அந்த விட

யங்களைக் குறித்து - நாங்கள் சரியா னதை செய்யுங்கள் என்றுதான் சொன் னோம். சரியானது என்னவென்று அரசாங் கத்துக்கும் தெரியும், முஸ்லிம் தரப்புக் கும் தெரியும். ஆனால் வேறு அரசியல் காரணங்களுக்காக அவர்கள் அதைச் செய்யாமல் இருக்கிறார்கள். நாங்கள் கொடுக்கக்கூடிய அழுத்தம் என்ன? இவ்வளவுதான் செய்யலாம். இப்போது அரசாங்கத்துககு எதிரான நம்பிக்கை யில்லாப் பிரேரணையில் கூட நாங்கள் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதுபோல் செயற் பட்டாலும்கூட யாரை அது பாதிக்கும் என்ற கேள்வி எழப் போகிறது. ஆகவே இந்தச் சூழ்நிலையிலே எங்களுடைய மக்களிடத்தில் இருக்கக்கூடிய ஆதங்கம், நாங்களாக ஆதரவு கொடுக்கிற அரசாங் கத்திடம் இருந்து மக்களுக்கு உரியதை பெற்றுக் கொடுக்கவில்லை என்பதே. அதை நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன். நிறைய விடயங்கள் பெற்றிருக்கிறோம். அதைப் பற்றி வேண்டுமானால் பேச லாம். ஆனால் பல விடயங்கள் இன்ன மும் செய்யப்படாமல் இருக்கிறன்றன.

கேள்வி:தொடர்ந்தும் மகிந்த எதிர்ப்பு, யுத்த வெற்றி எதிர்ப்பு என்ற மனநிலை யில் நீங்கள் இருப்பதால் தான் அரசாங் கம் உங்களைப் பலவீனமாக எண்ணுகி றது. எதிரணியினர் ஆட்சிக்கு வருவதற்கு எதையும் செய்யத் தயாராக இருக்கிறார் கள். தமிழ் மக்களின் கோரிக்கையை அவர்களிடம் முன்வைத்துப் பேச்சு நடத் தினால் அது பிழையாக அமையுமா?

சுமந்திரன்: அவர்களுடன் நாங்கள் பேச்சு நடத்தியிருக்கிறோம். நடத்தா மல் நாங்கள் இருந்ததில்லை. அவர்கள் ஆட்சியில் இருந்தபோது 2011 ஆம் ஆண்டு18 சுற்றுப் பேச்சு நடத்தினோம். புதிய அரசியலமைப்பு பற்றி பேசியிருக் கிறோம். பிறகும் பேசியிருக்கிறோம். தேர்தலுக்கு முன்பாகக்கூட நாங்கள் ஒரு தரப்புடன் மட்டும் பேசவில்லை. அவர்களுடனும் பேசியிருக்கிறோம். இப் போதும் பேச வேண்டும் என்பதுதான் என்னுடைய நிலைப்பாடு. இப்போது அவர்களுக்கும் பிரச்சினை இருக்கிறது. தமிழ் மக்களின் ஆதரவு இல்லாமல் தேர்தலில் வெல்வது என்பது முடியாது. இப்போது ஏப்ரல் 21 ஆம் திகதிக்குப் பின்னர் - ஈஸ்டர் தாக்குதலுக்குப் பின் னர்- மகிந்த தரப்புக்கு முஸ்லிம் தரப்பின் ஆதரவு கிடைக்காது என்பது உறுதி யாகிவிட்டது. இந்நிலையில் முஸ்லிம்க ளின் ஆதரவும் இல்லாமல் தமிழ் மக்க ளின் ஆதரவும் இல்லாமல் தேர்தலில் வெல்வது என்பது கஷ்டமான ஒரு விட யம். ஆகவே அவர்களுக்கும் தேவை இருக்கிறது. அதை நாங்கள் உபயோகிக் கலாம். ■

பட்டு மீதான பற்றால் உயர்ந்தவள்

(கடந்தவாரத் தொடர்ச்சி)

ஆண்கள் தமக்கு மனைவியாக வருபவள் ஒரு நல்ல குடும்பத் தலைவியாக இருந்தால் போது மென்று நினைக்கிறார்களே தவிர, அவளிடம் இருக்கும் திறமைக ளைப் பார்ப்பதுமில்லை. சில வேளைகளில் அவளாகவே தனக் குள் ஒளிந்து கிடந்த திறமை களை வெளிக்கொணர்ந்து சுய முயற்சியில் முன்னேற முயற்சிக் கும்போது அதை வரவேற்பது மில்லை. திருமணம் முடித்து ஒன் பது வருடங்கள் வீட்டு வேலை, சமையல் என்று வீட்டுக்குள் ளேயே சுற்றி வந்தது கொஞ்சம் சலிப்புத் தட்டியது. தொடர்ந்து இதையே செய்வதில் என்ன சுவா ரஷ்யம் இருக்கிறது? இவ்வளவு தான் வாழ்க்கையா? பெண் ணுக்கு அடுத்த கட்டம் என்று ஒன்று இல்லையா? கற்றுத் தெரிந்துகொண்டதற்கெல்லாம் என்னதான் பயன்? பத்தோ டொன்று பதினொன்றாக வாழ் வதில் கிடைத்திடுமா பெருமைப் படும் மகிழ்ச்சி? திருப்திதான் கிடைத்திடுமா? இல்லை, நான் எதையாவது செய்யவேண்டும். என் ஆசைக்காக என் ஆத்ம திருப்திக்காக நான் செய்யத்தான் போகிறேன் என்று முடிவெடுத் தாள் வந்தனா.

தன் வீட்டுக்குப் பக்கத்தி லேயே ஒரு சிறிய பியூட்டி மற் றும் பிட்னஸ் சென்டரை ஆரம் பித்தாள். அதைப் பார்த்ததும் அவளது கணவருக்குக் கோபம் வந்தது. கூடவே நகைப்பும் தோன் றியது. "நீ பிஸ்னஸ் பண்ணியது மில்லை முன் அனுபவமும் இல்லை நீ ஒரு பெண். உனக்கு இது சரி வராது. ஆனானப்பட்டவர்களே வியாபாரம் பண்ணப்போய் கவிழ்ந்து போயிருக்கிறார்கள். இதப்பண்ணப்போய் நீயும் அசிங் கப்படப்போறாய். மிஞ்சி மிஞ் சிப் போனா ஆறு மாசம்தான். இதை நீ இழுத்து மூடப்போறாய்" என்று தொடங்கிய பிஸ்ன ஸுக்கு ஆசிர்வாதம் வழங்கினார். "கரட்டை வெட்டி கண்ணில வைக்கிறதுக்குப் பதிலாக கூட்டு செய்தால் வாய்க்கு ருசியா சாப் பிடலாம்" என்று கிண்டல் வேறு செய்தார். வந்தனாவின் மாம னாரோ ஒரு படி மேலே போய் "என் மருமகள் மத்தவங்களுக்கு முடிவெட்டுவதா? அதைப் பண்ணத்தான் பாபர் இருக்கிறாரே. பாக்கிறவங்க நம் குடும்பத்தைப் பற்றி என்ன சொல்லு வார்கள். இதைக் கொஞ்சம் கூட என்னால் ஏற்றுக்கொள்ள முடி யாது" என்று கொஞ்சம் சத்தமா கவே சொன்னார். இப்படி எத்த னையோ கருத்துகள். இவை அத்தனையும் தாண்டி தன் கனவு களை நிஜமாக்க போராடி ஜெயித் துக் காட்டினாள் வந்தனா.

1989ஆம் ஆண்டு அவள் ஆரம் பித்த வி.எல்.சி.சி. (V.L.C.C.) ஹெல்த் கேர் என்ற பியூட்டி மற்றும் பிட்னஸ் நிறுவனம் மூலம் இன்று 1000 கோடி (இந்திய) ரூபா அளவுக்கு பிஸ்னஸ் செய் கிறாள் இந்திய பிட்னஸ் ராணி வந்தனா.

அனுபவம் மிக்க மருத்துவர் கள், திறமையான நியூட்ரினிஸ்டு கள், ஹெல் மற்றும் பியூட்டி நிபு ணர்கள் என்று தேர்ந்தெடுத்த 'நம்பர் வன்' ஆட்களே இவளது நிறுவனத்தில் பணிபுரிகிறார்கள். இந்தியா முழுக்க 100க்கும் மேற் பட்ட நகரங்களில் 200க்கும் மேற் பட்ட இடங்களில் பிஸினஸ். இது தவிர வெளிநாடுகளிலும் பிஸினஸ் ஒபரேசன் என்று தனது பிட்னஸ் சாம்ராஜ்யத்தை சூப்பர் லெவலில் நிறுவி டொப் கியரில் சென்று கொண்டிருக் கிறாள் இந்த டெல்லியைச் சேர்ந்த 60 வயது ஆரோக்கிய அழகுராணி.

இந்தியாவின் புதுடில்லியில் 1959ஆம் ஆண்டு பிறந்தாள் வந் தனா. நடுத்தரக் குடும்பம். அப்பா மெக்கானிக்கல் என்ஜினியர். தாய் யோகா வகுப்புக்களை நடத்தி வந்தார். குடும்பத்தில் யாருக்கும் பிஸினஸ் செய்து பழக்கமில்லை. டில்லி யூனிவர்சிட்டியில் டுகிரி முடித்த பின் வந்தனாவை வெளி நாட்டுக்கு அனுப்பி படிக்க வைக்க தந்தை விரும்பினார். ஆனால் வந்தனாவுக்கோ அழகுக் கலை மீதுதான் மோகம் இருந் தது. சிறுமியாக இருக்கும்போது தன் அம்மாவுக்கு மேக்கப் போட்டு விடுவது, அம்மாவின் தலை முடியை சீவி விட்டு நுனியில் கொஞ்சம் தாறுமாறாக இருக் கும் முடியை ஹேர்கட் பண்ணு வது என்று தன் அம்மாவை அழகுபடுத்திக்கொள்வதில் அவ ளுக்கு ரொம்பவே பிரியம். அப் பாவின் ஆசையைத் தெரிந்து கொண்டவள் அவரிடம் "அப்பா நான் வெளிநாட்டுக்குப் போய்ப் படிக்கிறன். ஆனால், பியூட்டி சம்பந்தமான கோர்ஸ்களைத்தான் படிப்பேன்" என்று சொன்ன போது தந்தைக்கு அதிர்ச்சியாக இருந்தாலும் அவளது பிடிவா தம் காரணமாக இறுதியில் சம் மதம் தெரிவித்தார்.

அழகு சம்பந்தப்பட்ட பிட் னஸ் துறைப்படிப்புக்கள் இந்தியா வில் அவ்வளவாக இல்லாத காலம் அது. வந்தனா தன் தாகத்தைத் தீர்த்துக்கொள்ள லண்டன், ஜேர் மன், பரிஸ் என்று பல நாடுக ளுக்கும் சென்று அங்கு பிட் னஸ், கூந்தல் பராமரிப்பு, காஸ் மெட்டாலஜி போன்ற அழகு டன் கூடிய ஆரோக்கியமான வற்றை ஆசையோடு படித்து முடித்தாள். ஜிம்முக்குப் போவது, உடலை பிட்டாக வைத்துக்கொள் வதெல்லாம் ஆண்களுக்கு மட்டு மேயானது என்பதையும் அது பெண்களுக்கு அவசியமில்லா தது என்கிற இந்திய மக்களின் மனநிலையை மாற்றவேண்டுமென்ற வைராக்கியமும் அப்போதுதான் அவளுக்குள் உருவானது. ஆனா லும் குடும்பமும் சமூகமும் பெண் நினைப்பதைச் சாதிப்பதற்குச் சந்தர்ப்பத்தையும் சுதந்திரத்தை யும் அவ்வளவு இலகுவி வழங்கி விடுமா?

(தொடரும்)

கவிஞர் பிரேம்ராஜ்,
கொழும்பு

முகப்பரு தொல்லையா?

சருமத் துளைகளில் இறந்த செல்கள் அடைத்துக்கொள்வதே முகப்பரு ஏற்பட மூல காரணமாக இருக்கின் றது. இது வயிறு சுத்தமின்மை, மலச் சிக்கல், சுகாதாரமின்மை, மேக் அப் நீக்காமை, ஒத்துக்கொள்ளாத மேக் அப் பொடுகு, எண்ணெயில் பொரித்த உணவுகள், துரித உணவுகள், சீபம் சுரப்பு அதிகமாக இருப்பது, ஹோர் மோன் பிரச்சினை, பிசிஒடி, உடல் பருமன், கெட்ட கொழுப்பு உடலில் இருப்பது, தலையணை உறை, மலத் தைக் கழிக்காமல் அடக்குதல், உடல் சூடு, தண்ணீர் குடிக்காமல் இருத்தல், வெள்ளை படுதல் போன்றவற்றினா லேயே முகப்பரு உண்டாகிறது.

முகப்பருத் தொல்லையில் இருந்து விடுபட இவற்றைப் பின்பற்றுங்கள்...

- கடையில் ஈஸ்டை வாங்குங்கள். ரோஸ் தண்ணீரில் ஈஸ்ட் போட்டு 20 நிமி டம் ஊற வையுங்கள். பின்னர் இதை முகத்தில் பூசி அரை மணித்தியாலம் கழித்துக் கழுவுங்கள். 15 நாட்களுக்கு ஒருமுறை இதைச் செய்யுங்கள். முகப் பருத்தொல்லை நீங்கும்.
- நேரடியாக எக்காரணத்துக்கும் தனி யாக எலுமிச்சை சாறை முகத்தில் போட கூடாது. பிற பொருட்க ளோடு சேர்த்துதான் எலுமிச்சை சாறை போட வேண்டும். தனியாக எலுமிச்சை சாறு மட்டும் போட் டால் சருமத்தில் எரிச்சல் உண்டா கும். 2 கரண்டி தயிர். அதனுடன் 2 கரண்டி எலுமிச்சைச் சாறு, மாதுளை சாறு ஆகியவற்றைக்கலந்து முகத் தில் பேஸ் மாஸ்காகப் போடலாம். 30 நிமிடங்கள் கழித்து வெறும் நீரில் கழுவலாம்.
- மஞ்சளில் தேன் கலந்து குழைத்துக் கொள்ளவும். பரு உள்ள இடத்தில் மட்டும் தடவுங்கள். 15 நிமிடங்கள் கழித்துக் கழுவலாம். 2 மாதம் தொடர்ந்து செய்யலாம்.
- வேப்பிலைப் பொடியை ரோஸ் தண் ணீர் கலந்து குழைத்துக் கொள்ளுங் கள். இரவில் முகம் முழுவதும் பூசிய பிறகு, படுத்து உறங்கி மறுநாள் கழுவி விடலாம். சடுதியாக முகப்பரு குறைந்து இருப்பது தெரியும்.
- சந்தனத்தை ரோஸ் தண்ணீரில் குழைத்து, முகப்பரு உள்ள இடத்தில் மட்டும் பூசுங்கள்.

முதல் பெண்கள்

சிகரம் தொட்டவள்!

உத்தரகாண்டில் நகுரி என்ற கிராமத் தில், 1954 ஆம் ஆண்டு மே மாதம் 24 ஆம் திகதி அன்று பச்சேந்திரி பால் (Bachendri Pal) பிறந்தார். அப்பா கிஷன் சிங், அம்மா ஹன்ஸா தேவி. இந்தியாவில் இருந்து திபெத்துக்கு பலசரக்கு வியா-பாரம் செய்து வந்தார் கிஷன் சிங். அவர் களுடைய 7 குழந்தைகளில் பச்சேந்திரி பால் வித்தியாசமானவர். எப்பொழுதும் துறுதுறுவென்றும் புத்திசாலியாகவும் இருந்தார். படிப்பிலும் விளையாட்டிலும் மிகுந்த ஆர்வமும் திறமையும் பெற்றவ ராகத் திகழ்ந்தார். அதனால் பள்ளியில் ஆசிரியர்களும் சக மாணவர்களும் நேசிக் கக்கூடிய பெண்ணாக விளங்கினார்.

12 வயதில் நண்பர்களுடன் சேர்ந்து சுற்றுலா சென்றார். அப்போது எல்லோ ரும் சேர்ந்து மலையேற்றம் மேற்கொண் டனர். 13,123 அடி உயரம் ஏறி, முதல் மலையேற்ற அனுபவத்தைப் பெற்றார் பச்சேந்திரி பால். பள்ளி முதல்வரின் முயற்சியில் கல்லூரியில் படித்தார். துப் பாக்கிச் சுடும்போட்டியில் தங்கம் உட் பட பல பதக்கங்கள் பெற்றார். நகுரி கிரா மத்தில் பட்டம் பெற்ற முதல் பெண் என்ற பெருமையும் பச்சேந்திரி பாலுக்குக் கிடைத்தது. சமஸ்கிருதத்தில் எம்.ஏ. பட் டம் பெற்றதோடு, பி.எட். படிப்பையும் நிறைவு செய்தார்.

ஆனாலும், ஆசிரியர் பணியை விட, அவருக்கு சாகச விளையாட்டுகளில் அதிக ஆர்வம் இருந்தது.

நேரு பயிற்சியகத்தில் மலையேறும் கலையைப் பயின்றார். கங்கோத்திரி மலை யில் 21,900 அடிகளும் ருத்ரகரியா மலை யில் 19,091 அடிகளும் ஏறினார். பயிற்சி முடிந்ததும் நஷனல் அட்வென்ச்சர் ஃபவுண் டேஷனில் பெண்களுக்கான பயிற்றுந ராகச் சேர்ந்தார். அதைத் தொடர்ந்து எவரெஸ்ட் சிகரத்தில் ஏறும் வாய்ப்பு பச்சேந்திரி பாலுக்குக் கிடைத்தது. அவர் கள் சென்ற குழுவில் பலருக்கு காயம், நோய்த் தாக்குதல் போன்ற பிரச்சினைகள் ஏற்பட்டன. மன உறுதி கொண்ட பச்சேந் திரி பால் பயணத்தைத் தொடர்ந்தார். 1984 மே 23 மதியம் 1:07 மணி... இந் தியாவின் முதல் பெண்ணாக எவரெஸ்ட் மலையின் உச்சியைத் தொட்டார் பச் சேந்திரி பால். புகழ் பரவியது. விருதுகள் தேடி வந்தன. அதன் பின்னும் மலை யேறுதல், நீர் விளையாட்டுகள் என்று பலவற்றிலும் பங்கேற்று, வெற்றிக்கொடி நாட்டினார்.

கெனமனும் சுந்தரலிங்கமும்

அடங்கா தமிழன்

அடிமைத் தமிழன்

அடங்காத்தமிழன் என அழைக்கப்பட்ட பேராசிரியர் சுந்தரலிங்கம் இலங்கை சட்டசபையில் உறுப்பினராக இருந்து, இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் 1948 முதல் 1960 வரை நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்தவர். சுந்தரலிங்கத்தின் சாதனைகள் எங்குமே ஆவணப்படுத்தப்படவில்லை. அடங்காத் தமிழனின் சாதனைகளை எதிரொலி வாசகர்களுக்காக வாராந்தம் தருகிறார் அடிமைத்தமிழன்.

பீற்றர் கெனமன் இலங்கையின் முன்னணி இடதுசாரித் தலைவர்களுள் ஒருவர். 1970ஆம் ஆண்டு பதவியேற்ற சிறிமாவின் ஆட்சியில் அமைச்சராக இருந்தவர். 1981ஆம் ஆண்டு யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்ட அடுத்த நாள் நூலக வாசலில் வந்து நின்று கண்ணீர் விட்ட சிங்கள அரசியல்வாதி. அத்துடன் தன்னிடமிருந்த 10,000 நூல்களையும் யாழ்ப்பாண நூலகத்துக்கு அன்பளிப்பைச்செய்த பெருந்தன்மை மனம் படைத்தவர்.

பேராதனை பல்கலைக்கழகத்தில் சுந்தரலிங்கத்தின் கீழ் அவர் மாணவனாக இருந்தவர். அடியேன்சிறுவனாக இருந்த வேளை ஒரு நாள் சுந்தரலிங்கத்தின் வீட்டுக்குச் சென்றேன். அன்றையதினம் பத்திரிகையில் பீற்றர் கெனமன் பற்றி ஏதோ செய்தி வெளிவந்திருந்தது. சுந்தரலிங்கத்தின் மனைவி செய்தியை வாசித்துக்காட்டி ''உங்களுடைய பீற்றர் கெனமனைப்பற்றி ஏதோ செய்தி வந்திருக்கு'' என்றார்.

''உவன் கெனமன் நான் பேரதெனியாவிலை இருக்கேக்கை 'ராகிங்' பண்ணுறதிலை சரியான மோசம். ஒரு நாள் பெட்டையள் வந்து சொன்னாளவை கெனமன் ஓவராக ராகிங் பண்ணுகிறான் எண்டு நான் போய் மாடிப்படியிலை ஒளிச்சு நிண்டனான். கெனமன் ராகிங் பண்ணத் துவங்க திடீரெண்டு எழும்பி பூட்ஸ் காலாலை. உதைஞ்சு விட்டன். அவன் என்னை எதிர்பார்க்கேல்லை சேர் எண்டு சொல்லிக்கொண்டு அப்பிடியே படிகளில் உருண்டு விழுந்தான்'' என்றார்.

சிறிது காலத்தின் பின் கீரிமலையில் கம்யூனிஸ்ட் கட்சியின் கூட்டம் ஒன்று நடைபெற்றது. சுந்தரலிங்கத்தின் வீட்டின் முன்னாலுள்ள வெளியில் தான் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் பீற்றர் கெனமனும் உரையாற்றினார். உரையாற்றத்தொடங்கியதும் சுந்தரலிங்கம் வந்து கெனமனின் ஜீப்பின் மீது சாய்ந்தவாறு கெனமனின் பேச்சை கேட்டுக்கொண்டிருந்தார். சுந்தரலிங்கம் நிற்பதைக்கண்டதும் 'செல்வநாயகமும் சுந்தரலிங்கமும் தமிழர்களை ஏமாற்றுவதாக' ஒரு பிடி பிடித்தார் பீற்றர் கெனமன். கூட்டம் முடிந்து ஜீப்பில் ஏற வந்த பீற்றர் கெனமன் சுந்தரலிங்கத்தைக்கண்டதும் 'சேர்' என்றவாறு கைகளைப்பிசைந்து கொண்டு வந்தார். சுந்தரலிங்கம் முதுகில் தட்டி ''well done speech'' என்றார்.

ஆவாக் குறூப்பிட்டைத்தான் ஆயுதம் வேண்ட வேணும்

தமிழர்களுக்குத் தீர்வு கிடைக்காவிட்டால் ஆயுதம் ஏந்திப் போராடுவது பற்றி சிந்திக்க வேண்டி வரும். அதையும் செவ்வையாச் சொல்லேல்லை. அதிலையும் சம்பந்தர் கிறுதாவிட்டுத்தான் சொல்லி இருக்கிறார். அதென்ன "வேண்டி வரும்" எண்டு சொல்லுறது. "ஆயுதம் எடுத்துப் போராடப் போறம்" எண்டு அறுத்துறுத்துச் சொல்லுறதுதானே? அப்பிடிச் சொன்னால் என்ன நடக்கும் எண்டு சம்பந்தருக்கும் மாவைக்கும் சுமந்திரனுக்கும் வடிவாத் தெரியும். அவசரகாலச் சட்டத்துக்குள்ளை தங்களை மாட்டிப்போடுவங்கள் எண்டது தெரிஞ்சுதான் "வேண்டி வரும்" எண்ட தமிழை அழகாகப் பாவிச்சவை.

எப்படி இந்தப் பகிடிஇருக்குத் தெரியுமே? தமிழர்களுக்கு அரசாங்கம் ஒரு தீர்வைத் தராட்டி நாங்கள் தீக்குளிப்பம் எண்ட மாதிரிக் கிடக்கு. மதி கெட்ட ஜென்மங்கள். இதுவரைக்கும் நல்லா அனுபவிச்சுப் போட்டு, அரசாங்கத்திட்டை வாங்கி நக்கிப் போட்டு இப்ப தங்களுக்கு எண்டு ஒரு மாநாட்டை வைச்சுத் தேவை இல்லாத கதை. சனத்தைக் குழப்பிறமாதிரிக் கெட்ட கதை.

முள்ளிவாய்க்காலோடை கிடந்த ஆயதங்கள் சரி. இனி எங்களிட்டை வெங்காயம் அறுக்கிற சத்தகந்தான் வீட்டுக்கை கிடக்கு. இல்லாட்டி ஆவாக் குறூப்பிட்டைதான் வாளை இரவலா வாங்க வேணும். அப்பிடி அவையிட்டை இரவல் கேட்டாலும் அவையள் சொல்லுவினம் ஒண்டில் ஆமீட்டைக் கேக்க வேணும் இல்லாட்டிக் கவனரிட்டைக் கேக்க வேணும் எண்டு. ஏனெண்டால் அவைதான் இப்ப அவையளோடை இஷ்டமாம். "என்ன இருந்தாலும் விநாசி அண்ணை சம்பந்தருக்கு கடைசிக் காலகட்டதிலை உந்தக் கதை தேவை இல்லை" எண்டு முதலி சொல்லுறான். "பேய்க்காட்டுற தெண்டால் சம்பந்தரிட்டைக் கேட்டுத்தான்" எண்டும் அவன் சொன்னவன்.

சரி,ஆயுதம் ஏந்திப் போராட வேண்டி வரும் எண்டு பாத்து அது வந்திட்டுது எண்டு வைச்சுக் கொள்ளுவம். எங்கை கிடக்கு ஆயுதம் எண்டு கேக்கிறன்? எல்லாரிட்டையும் கிடக்கிற ஆயுதம் காணாது. அது பொறுத்த நேரத்திலை கைவிட்டிடும். இன்னும் தமிழரை வெறுவாய் சப்பியள் எண்டும், காதிலை பூவைச்சுக் கொண்டு திரியிற மடைச் சாமி எண்டும் நினைச்சுக் கொண்டுதான் கூட்டமைப்புக் காரர் கதைக்கினம் எண்டு நினைக்கிறன்.

உப்பிடி சம்பந்தர் கூட்டத்திலை பேசின மற்ற நாள் ஆரோ ஒருத்தர் தன்ரை முகநூலிலை ஒரு படத்தைப் போட்டிருந்தார். துவக்குகளோடை நிக்கிற ஆமி உடுப்பையும் போட்டுக் கொண்டு பொஸிஸன் எடுக்கிற மாதிரிப் படத்தை எடுத்து சம்பந்தர், மாவை, சுமந்திரன் மூண்டு பேற்றை தலையளையும் அதுக்கு மாத்தி (வெளி நாட்டுக்குப் போறவை பாஸ்போட்டுக்குத் தலை மாத்திப் போற மாதிரி). உப்பிடி ஒண்டு நடக்காதோ! எண்டு பாக்க ஆசையாக் கிடந்தது.

அப்பிடி ஆயுதம் ஏந்திப் போரட வேண்டி வந்தால் முதலிலை மாவை போகவேணும். அவராலை அவற்றை உடம்பைத் தூக்கிக் கொண்டு கொல்லைப் பக்கமும் போகேலாமல் கிடக்காம். அப்ப தன்ரை கையிலை எந்த நேரமும் 'கான்போனை' வைச்சுக் கொண்டு திரியிற தன்ரை பெடியை அனுப்பட்டும் பாப்பம். ஆயுதப் போராட்டத்தை உங்கடை உங்கடை குடும்பத்தை வைச்சுச் செய்யுங்கோ. தயவு செய்து பொது சனத்தைக் கூப்பிட்டுவிடாதையுங்கோ. அவை பாவம் பட்டது போதும்.

சம்பந்தர் உப்பிடிச் சொன்னவராம் எண்ட செய்தியை வாசிக்கக் கேட்டுக் கொண்டிருந்த சந்தையிலை காய் பிஞ்சு விக்கிற ஆச்சி என்ன சொன்னவா தெரியுமே? "ஐயா உவரிட்டைச் சொல்லுங்கோ. ஆச்சிபழையசெருப்புத்தான்போட்டிருக்கிறாவாம். அதுகும் பிய்ஞ்சு போச்சாம். அதாலை வேணுமோ எண்டு கேட்டனான்" எண்டு சொல்லுங்கோ.

அண்டைக்கு வீரசிங்கம் மண்டபத்திலை உவர் பேசினண்டு ஒராள் வெளியிலை நிண்டவர். உதைக் கேட்டிட்டு என்ன சொன்னவர் தெரியுமே? "ஆள் தின்னுறது இரண்டு முட்டையும், ஒரு துண்டு பாணும் எண்டுதான் கேள்வி. அதைத் திண்டிட்டு உந்தாள் உப்பிடிக் கதைச்சால், ஆட்டுக் கொத்து, மாட்டுக் கொத்து எண்டு நானா கடைச் சாப்பாட்டைச் சாப்பிட்டால் என்ன கதைக்குமெண்டு யோசிக்கிறன்" எண்டார்.

உந்தக் கூட்டமைப்புக் கோஷ்டிக்கு ஒரு புத்திமதி விநாசி சொல்லப் போறன். தயவு செய்து இனிமேல் அந்தக் காலத்திலை அமிர்தலிங்கத்தின்ரை மனுசி மேடையளிலை கதைச்சுக் கொண்டு திரிஞ்சமாதிரி உசுப்பேத்திற கதையள் வேண்டாம். சனத்தைக்கொண்டு போய்மாட்டிவிடாதையுங்கோ. உங்களுக்கு வாசியா, சனத்தை விலைக்கு வாங்க அரசாங்கம் கம்பிரெலியாவைத் தந்திருக்கு. அதை வைச்சு எத்தினை விளையாட்டைக் காட்டுங்கோ. போராட்டம் எண்டு புளுகு வேலை மட்டும் வேண்டாம்.

● வில்லங்கம் விநாசி

எது அழகு?

ராஜ பாளையம் காட்டில் எலி, முயல், குரங்கு, வெட்டுக் கிளி போன்ற விலங்குகள் வாழ்ந் தன. அவை ஒன்றுடன் ஒன்று நன்றாகப் பழகி நண்பர்களாக இருந்தன. ஆனாலும் அவைகளுக் குள் அழகு குறித்து அடிக்கடி விவாதங்கள் எழும். ஒவ்வொன் றும் தன் பெருமையைப் பறை சாற்றும் விதத்தில் பேசும். முயல் மட்டும் மௌனமாக இருக் கும்.

ஒரு நாள் "நம் நால்வரில் நான் தான் மிக அழகு. மனி தர்கள் கூட எங்கள் இனத்தில் இருந்துதான் தோன்றியதாகச் சொல்வார்கள் " எனக் குதித்துக் குதித்து நடனம் ஆடியபடி குரங்கு சொன்னது.

அப்போது அங்கிருந்த எலி "நாங்கள் மனிதர்களின் வீட்டுக் குள்ளே புத்திசாலித்தனமாக ஒளிந் தும் வாழ்கிறோம். எங்களிடம் அழகும் அறிவும் இருக்கிறது. எனவே நான்தான் அழகு" என் றது .

"மனிதர்கள் திட்டும் போது குரங்கு முகம், எலி முகம் என்று கூட உங்களைப் பற்றிக் கூறுவார் கள். நான் சிறிய உருவமாக இருந் தாலும் கிளியின் நிறத்தில் அதைப் போன்றே அழகாக இருக்கிறேன்" என பெருமிதம் பொங்கக் கூறி யது வெட்டுக்கிளி.

அப்போது "நான் இந்த அழ குப் போட்டிக்கே வரவில்லை!" என முயல் சொல்ல, மூன்றும் சேர்ந்து சிரித்தன. முயல் மெது வாக அவ்விடத்தை விட்டு அகன் றது.

"எண்ண இருந்தாலும் வெள்ளை வெளேரென்று முயல் ஓடி வரும் அழகே தனிதான்." எனக் குரங்கு சொல்லியது.

"ஆமாம்... ஆமாம்... " என்று ஒப்புக் கொண்டது வெட்டுக் கிளி.

"நிறமும் அழகும் மட்டும் இருந்தால் போதுமா? அறிவு, புத்தி சாலித்தனம் எல்லாம் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அழகு என்று ஏற்றுக் கொள்ள முடியும்" என்றது எலி.

அப்போது "எனக்கொரு யோசனை தோன்றுகிறது. நமக் குள்ளே ஓர் அழகிப் போட்டி நடத்தினால் என்ன?" என்று கேட் டது வெட்டுக்கிளி.

"போட்டி நடத்தலாம் ஆனால் நடுவர் யார்?" என்று சந்தேகம் எழுப்பியது எலி.

"நடுவராக நானிருக்கிறேன்!" திடீரென்று ஒரு சத்தம் கேட் டது. அனைத்தும் மேலே பார்க்க, மரத்தின் மீது ஒரு காகம் இருந் தது.

"நீங்கள் எப்படி?" என ஆச் சரியப்பட்டது குரங்கு.

"நீங்கள்மூவரும்பேசிக்கொண் டிருந்ததை நான் கேட்டேன். முய லையும் அழைத்துக் கொண்டு நாளை என் இருப்பிடம் தேடி வாருங்கள். ஆனால், நான் தேர்ந் தெடுப்பவரை அழகு ராணியாக அனைவரும் ஒருமனதாக ஏற் றுக் கொள்ள வேண்டும்!" என்று காகம் தன் முகவரி கூறியது.

"அப்படியே செய்கிறோம்!" என அனைத்தும் சேர்ந்து குரல் கொடுத்தன.

மறுநாள் அனைத்தும் அழகு ராணிக் கனவில் மிதந்து காகத் தைத் தேடிப் போய்க் கொண்டு இருந்தன.

அப்பொழுது குருவி ஒன்று வலியால் துடித்துக் கொண்டிருந் தது. அதன் கால்களில் காயப் பட்டிருந்தது.

"எனக்கு யாராவது ஒருவர் உதவி செய்யுங்களேன். ஒரு சிறு வன் கல்லெடுத்து எறிந்து காலில் காயப்படுத்தி விட்டான்!" என குருவி உதவி கேட்டது.

"நாங்கள் அழகிப் போட்டிக் குப் போய்க் கொண்டு இருக்கி றோம். அபசகுனமாகப் பேசாதே!" என கடுமையாகக் கூறியது குரங்கு. குருவியைப் பார்த்த எலியும், வெட்டுக்கிளியும் முகம் திருப்பிச் சென்று விட்டன. முயல், குருவி அருகே தயங்கி நின்றது. பின்னர் அவசர அவசரமாக மருந்து தேடிக் காலில் வைத்து விட்டு அழகிப்போட்டிக்குச் சென்றது.

அழகிப் போட்டி தொடங்கி யது. குறித்த நேரத்துக்கு முயல் மட்டும் செல்லவில்லை. மீதி மூன்றும் மனசுக்குள் மகிழத் தொடங்கின.

"அழகுக்கும் அறிவுக்கும் மதிப் பெண் போட்டு விட்டேன். இனி உங்கள் நல்ல குணம் பார்த்து மதிப்பெண்கள் கொடுப்பேன்! இதற்குத்தான் அதிக மதிப்பெண் கள் ஒதுக்கி இருக்கிறேன்!" என காகம் கூறியதும் குருவிக்கு உத வாத மூன்றும் ஒன்றையொன்று பார்த்துக் கொண்டன. அப்பொ ழுது அவசரமாக முயல் ஓடி வந் தது.

அப்போது காகம் தன் முடிவை அறிவிக்கப் போவதாகச் சொன் னது. அனைவரும் முடிவை ஆவ லோடு எதிர்பார்த்தன. "முயல் தான் அழகு ராணி! இதை அழகு ராணியாகத் தேர்வு செய்வதற் காக நான் பெருமைப் படுகி றேன். குருவி ,ஆபத்திலிருக்கும் போது முயல் தான் அதைக் காப் பாற்றியது. அப்பொழுது நீங்கள் மூவரும் உதவாமல் சென்றதை நான் பார்த்துக்கொண்டு தான் இருந்தேன். உதவும் நல்ல மனசு உள்ளவர்கள்தான் உண்மையில் அழகானவர்கள்!" என்று தன் முடிவை அறிவித்தது காகம் இதைக் கேட்டதும் எலி, வெட்டுக்கிளி, குரங்கு மூன்றின் முகங்களும் அஷ்ட கோணலாகின.

அறியலாம் வாங்கோ

1. காகிதம் முதன்முதலில் எந்த நாட்டினரால் கண்டுபிடிக் கப்பட்டது? சீனா
2. ஜீன்ஸ் துணி யாரால், எப்போது கண்டுபிடிக்கப் பட்டது? லீவைஸ்ட்ராஸ் (1848)
3. பால் பதனிடும் முறையைக் கண்டுப்பிடித்தவர் யார்? லூயி பாஸ்டர்
4. மயன் நாகரீகத்தின் சுவடுகள் எந்த நாட்டில் உள்ளன? மெக்சிகோ
5. அணு சக்தி மூலம் மின்சாரம் உற்பத்தி செய்வதில் முன் னணியில் உள்ள நாடு எது? அமெரிக்கா
6. அதிக அளவில் சர்வதேச நேரம் கொண்ட நாடு எது? ரஷ்யா
7. உலக வரலாற்றில் பழமையான மரமாக கருதப் படுவது? பேரீச்சை மரம்

மூளைக்கு வேலை

1		5				4		7
	4						2	
2		8		4		1		9
			3		5			
		2		9		6		
			4		2			
7		9		3		2		5
	5						9	
6		3				8		1

▲ ஒன்பது சிறு கட்டங்கள் அடங்கிய ஒவ்வொரு சதுர அறையிலும் 1 முதல் 9 வரையுள்ள எல்லா எண்களும் ஒரே ஒரு முறை மட்டுமே வருமாறு அமைக்க வேண்டும். இப்படியாக இதே விதி அமையுமாறு சட்டகத்திலே உள்ள எல்லா அறைகளும் (9 அறைகள்) அமைய வேண்டும்.

▲ உட்பிரிவு கட்டங்களில் ஒரே எண் மீண்டும் வரக்கூடாது.

▲ பக்கவாட்டிலோ, நெடுக்குவாட்டிலோ ஒரே வரிசையில், ஒரே மாதிரியான எண் வரக்கூடாது.

மெல்ல வந்து கிள்ளிப்போ!

எத்தனை முறை விளையாடினா லும் சலிப்பை ஏற்படுத்தாத விளையாட் டுத்தான் "மெல்ல வந்து கிள்ளிப் போ." ஊகிக்கும் திறனை மேம்படுத்துவதே இந்த விளையாட்டின் சிறப்பம்சம். இரண்டு அணிகள் விளையாடும் இவ் விளையாட்டில், ஒவ்வொரு அணியி லும் 5 இல் இருந்து 10 நபர்கள் வரை இருக்கலாம். உதாரணத்துக்கு மொத் தம் 14 பேர் இருக்கின்றனர் என்றால், தலா ஏழு, ஏழாக "ஏ" மற்றும்"பி" அணி எனப் பிரிந்து கொள்ள வேண் டும். இப்போது, "ஏ" அணிக்கு ஒருவ ரும், "பி" அணிக்கு இன்னொருவரும் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவர். "ஏ" அணித் தலைவர் தனது அணி யில் உள்ள 6 பேருக்கும் ரகசியப் பெய ரைச் சூட்ட வேண்டும். அவை, மலர்கள், பழங்கள், மரங்கள் என்று எந்த வகைப் பெயர்களாகவும் இருக்க லாம்.

உதாரணத்துக்கு மலரின் பெயர்க ளைச் சூட்ட முடிவு செய்தால், ரோஜாப்பூ, மல்லிகை, செம்பருத்தி, அல்லி, தாமரை மற்றும் சூரியகாந்தி என்று ஒவ்வொருவருக்கும் தனித்தனி யாகப் பெயர் சூட்ட வேண்டும். இதேபோல் எதிரணியும் தனது அணி யினருக்கு ரகசியப் பெயர்களைச் சூட்ட வேண்டும். ஆனால், யாருக்கு என்ன பெயர் சூட்டப்பட்டிருக்கிறது என்று எதிரணியினருக்குத் தெரியக்கூடாது. இப்போது விளையாட்டை ஆரம் பிக்கலாம். இரு அணியினரும், எதிர் எதிரே வரிசையாக அமர்ந்து கொள்ள வேண்டும். இரு அணிக்குமான இடை வெளி அதிகம் இருப்பது நல்லது. பூவா தலையா போட்டு, யாருடைய அணி முதலில் விளையாடப்போகி றது என்று முடிவு செய்து கொள்ள வேண்டும். எந்த அணி முதலில் விளையாடத் தேர்ந்தெடுக்கப்பட் டதோ அந்த அணி, (உதாரணத்துக்கு "ஏ" அணி முதலில் விளையாடத் தெரி வானால்) எதிர் அணியிலிருந்து ("பி") ஒருவரைத் தேர்வுசெய்து, அவரு டைய கண்ணை இறுகப் பொத்திக் கொள்ள வேண்டும். மற்றவர்கள் கீழே குனிந்து கொள்ள வேண்டும். இப் போது, கண்ணைப் பொத்தியிருப்ப வர் , "ரோஜாப்பூவே ரோஜாப்பூவே மெல்ல வந்து கிள்ளிப்போ" என்பார். யார் ரோஜாவோ அவர் வந்து கண் பொத்தப்பட்டிருப்பவரை கிள்ளிவிட்டு, மீண்டும் போய் ஒன்றும் தெரியாத வர் போல் தனது இடத்தில் அமர்ந்து கொள்ள வேண்டும். பின்னர் , கண் கட்டை அவிழ்த்து விடுவார். இது தான் விளையாட்டின் முக்கிய பகுதி. கண் பொத்தப்பட்டிருந்தவர் கண் ணைத் திறந்து பார்த்து, யார் தன்னை நறுக்கென்று கிள்ளி விட்டுப் போன வர் என்பதை ஊகிக்க வேண்டும்.

யார் திருட்டு முழி முழிக்கி றாரோ, யார் நமட்டுச் சிரிப்பு சிரிக் கிறாரோ, யார் பதற்றமாக இருக்கி றாரோ அவர்தான் கிள்ளியிருப்பார் என்று ஊகிக்க சில வழிகள் உள்ளன. இப்படியாக, தன்னைக் கிள்ளிய ரோஜா, இவர்தான் என்று கணித்து அடை யாளம் காட்ட வேண்டும். அதேசம யம், யார் கிள்ளினார்கள் என்பதைச் சொல்லவோ, குறிப்பால் உணர்த் தவோ கூடாது. கண் பொத்தப்பட் டவர் ("பி") ஒருவேளை, ரோஜா வைச் சரியாக இனம் கண்டுவிட்டால், அந்த அணி ("பி")வெற்றி பெற்று விடும். பின்னர், "ஏ" அணியில் ஒரு வரைத் தேர்வு செய்து கண்ணைப் பொத் திக் கிள்ளலாம். மாற்றித் தவறாகச் சொன்னால், மீண்டும் "ஏ" அணி, மீண்டும் எதிர் அணியிலிருந்து ஒருவ ரைத் தேர்ந்தெடுத்து, கண்ணைப் பொத்திக் கிள்ளி விளையாடும். சலிப் பூட்டாத இந்த விளையாட்டை நீங்களும் விளையாடிப் பாருங்கள்.

(விளையாடுவோம்)

கேள்வி: "நொய் நொய்ங்காதீங்க. பிக்பாஸ் முடிஞ்ச பிறகு தான் சாப்பாடு என்கிறாள்" என் மனைவி. என் கஷ்டம் தீர ஒரு வழி சொல்லு கைப்புள்ள?

கே.பரதன், வவுனியா

பதில் - அப்படியா சரி. இன்சுரன்ஸிலும், பாங்க் எப்.டியிலயும் நாமினின்னு ஷெரின் பேர மாத்தப் போறன் என்று சொல்லிப்பாரு.

கேள்வி: பொண்டாட்டியிடம் எதுக்கெல்லாம் திட்டு வாங்கக் கூடாது கைப்புள்ள?

சி.பரமலிங்கம், துன்னாலை

பதில்-ஏண்டா புளிச்சமாவு குடுத்தாய்என்று கடைக் காரன்கிட்ட சண்டைபோட்டு புளிக்காத மாவு வாங் கிட்டுப்போனா, புளிக்காத மாவுல எப்படி தோசை ஊத்துறது? மூளை இருந்தாத்தானே. இதுல ஊர்ல இருக்கிறவங்க டவுட்டுக்கெல்லாம் பதில் சொல் கிறார் என்கிறாள் என் தர்மபத்தினி.

கேள்வி: முதன் முதலா காதலிக்கலாம்னு ஒரு பொண்ணுக்கு லெட்டர் குடுத்தேன். "யாரையாவது லவ் பண்றீங்களா அண்ணா" என்று சொல்லிவிட்டுப் போயிட்டாள்?

கே.சாரங்கன், புத்தூர்

பதில் - சந்தோஷப்படுங்க ப்ரோ. ஆயிரம் முயற் சிக்குப் பிறகுதான் எடிசனுக்கு 'பல்ப்' கிடைச்சிது. நமக்கு முதல் முயற்சியிலேயே...

கேள்வி: சனி, ஞாயிறு விடுமுறை கழிஞ்சு திங்கட்கிழமை ஆபிஸுக்குப் போறதை நினைச்சா வெறுப்பாகத்தான் இருக்கு. இதை சமாளிக்க உருப்படியான ஒரு ஐடியாக பிளீஸ்?

வி.யோயேஸ்வரன், உடுவில்

பதில்-ஞாயிற்றுக்கிழமைநைட்டுபொண்டாட்டி யோட சண்டை போட்டாலே போதும். திங்கட் கிழமை ஈசியா வேலைக்குப் போகலாம்.

கேள்வி: என் பாதலியை நான் "தங்கம்" என்றுதான் அழைப் பேன். அவளிடம் சொல்வதற்கு சின்னதாக ஒரு கவிதை சொல்லு கைப்புள்ள?

கே.விஜயகுமார், அச்சுவேலி

பதில் - அநேகமாக நீ அறுவைச் சிகிச்சையில் தான் பிறந்திருக்கக்கூடும். ஆம்... தங்கத்தை வெட் டித்தானே எடுக்க முடியும்.

கேள்வி: கைப்புள்ள வயிறு பசிக்குது. ஆனா சாப்பிட முடியல்ல. இதன் பெயர் காதலா?

எஸ்.பாலா, கைதடி

பதில் - அல்சரா இருக்கப்போகுது முட்டாப் பயலே. போய்டாக்டரப்பாரு. காதலாம்ல கண்றாவி.

கேள்வி: மனிதன் எதற்கு அதிகம் பயப்படுகிறான் கைப் புள்ள?

எம்.கௌதமன், வதிரி

பதில் - அனபெல் படத்தில் பேய் பொம்மை கொடுக்காத பயத்தை மனைவியின் ஐந்து மிஸ்ட் கோல்கள் கொடுத்துவிடுகின்றன.

கேள்வி: மாமியார் வீட்டுக்குப் போனால் எத்தனை நாள் தங்குவாய் கைப்புள்ள?

ஆர்.மன்மதன், மானிப்பாய்

பதில் - போனதடவை போனபோது மேசையில் பல ஐட்டம்கள் இருந்தன. சாப்பிட்டு முடித்தபின், "உங்களுக்காக வெரைட்டி ரைஸ் பண்ணியிருந் தேன். எப்படி இருந்தது" என்று கேட்டார் என் மனைவியின் அம்மா. "எங்களை ஊருக்கு விரட்டி அடிக்கிற மாதிரி இருந்தது" என்று சொல்லவா முடியும். அடுத்தநாளே எஸ்கேப்.

கேள்வி: கவர்ச்சிக்கும் ஆபாசத்துக்கும் என்ன வித்தியாசம் கைப்புள்ள?

வை.வைஷ்ணவி, கொக்குவில்

பதில் - ரொம்ப சிம்பிள். உங்களைப் போன்ற வர்கள் பார்த்தால் கவர்ச்சி. என் போன்ற சின்னப் பசங்க பார்த்தால் ஆபாசம்.

சொல்லுங்கோ டொக்டர்?

டொக்டர்
எம்.கே. முருகானந்தன்
(குடும்ப மருத்துவர்)

மரபணு மாற்றப்பட்ட உணவுகளால் புற்றுநோய் ஏற்படுமா?

மரபணு மாற்றப்பட்ட உணவுகளால் தான் புற்றுநோய் ஏற்படுகின்றது என் கின்றார்கள், உண்மையா?

எஸ். மீனா

பதில்: - மரபணு மாற்றப்பட்ட உணவுகள் இப்பொழுது எங்கும் பரவலாகிவிட்டன. முக்கியமாக காய்கறி வகைகளும் பழ வகைத் தாவரங்களும்தான் அவ்வாறு மர பணு மாற்றம் செய்யப்படுகின் றன. நாங்கள் அந்தக் காலத்தில் சாப் பிட்ட பப்பாளிப் பழங்கள் உரித்த தேங்காய் அளவுதான் இருக்கும். ஆனால் இப்போது அவை உரிக் காத முழுத் தேங்காயைவிட பெரிய தாகிவிட்டன. பழவகைகள் மட்டு மல்ல கத்தரிக்காய், புடோல், பாவற் காய் என பல காய்கறி வகைகளும் அளவில், நிறத்தில் மணத்தில் சுவை யில் மாறிவிட்டன. அப்பிள், சோயா, சோளம் போன்றவை அதிகம் மரபணு மாற்றம் செய்யப்பட்டுள் ளன. மரபணுப் பொறிமுறை மூலம் வேறு உயிரினங்களிலிருந்து பெறப் பட்ட சில மரபணுக்களை (DNA) பழைய உயிரினங்களுக்கு மாற்றப் படுவதன் ஊடாக புதிய இனங்கள் அறிமுகமாகின்றன.

இவ்வாறு உருவாக்கப்படும் புதிய வகை காய்கறி பழவகைகள் போன்ற உணவுகள் பயனாளி விரும்பத் தக்க நிறம், சுவை போன்றவற்றை கொடுப்பதற்காகசெய்யப்படுகின் றன என்ற போதும், அத் தாவரங் களை நோய்கள் தாக்காதவாறு பாது காக்கவும், கூடிய விளைச்சலைப் பெறுவதையுமே பிரதான நோக்க மாகக் கொண்டுள்ளன.

இலகுவில் வளர்க்கப்படக்கூடிய தாக, காலநிலைகளுக்கு தாக்குப் பிடிக்கக் கூடியவையாக, பூச்சி புழுக்களிலிருந்து தாவரங்களைக் காப்பதற்காக, அளவில் நிறத்தில் மணத்தில் சுவையில் மாற்றங்களை ஏற்படுத்தும் என பலவிதமான நன்மைகளைக் கொடுக்கின்றன. ஆனால் இவ்வாறு மரபணு மாற் றப்பட்ட உணவுவகைள் இயற்கை யானவை அல்ல. எனவே உண்பவர் களுக்கு நோய்களை ஏற்படுத்தக் கூடும் என்ற அச்சம் பலரிடையே நிலவுகிறது. பலவகைப் பாதிப்பு கள் பற்றிச் சொல்லப்படுகின்றன.



மரபணு மாற்றப்பட்ட உணவு வகைகளால் ஒவ்வாமைப் பாதிப்பு அதிகமாக ஏற்படுவதாகப் பலரும் நம்புகிறார்கள். மேலை நாட்டில் வசிக்கும் ஒரு மருத்துவ சகா கூட அத்தகைய கருத்தை வெளியிட் டார். ஆனால் ஆய்வு ரீதியாக பார்க் கும்போது அவ்வாறு ஒவ்வாமை ஏற்படுவதாக சான்றுகள் இல்லை. ஒவ்வாமையை ஏற்படுத்தக் கூடிய உயிரனங்களிலிருந்து மரபணுவைப் பெற்று மாற்றம் செய்தால் அந் நிலை தோன்றுவது சாத்தியமே. உண்மையில் 1990 களில் பிரேசில் நாட்டைச் சேர்ந்த ஒரு வகை கொட்டையிலிருந்து பெறப்பட்ட மரபணுவால் ஒவ்வாமை ஏற்பட்ட தாகக் கண்டறியப்பட்டது. ஆனால் அதன் பின்னர் பாதுகாப்புகள் வலுப்படுத்தப்பட்டன. அவ்வாறு ஒவ்வாமையை ஏற்படுத்தும் தாவரங் களிலிருந்து மரபணு பெறப்படும் உணவுகளுக்கு உலக சுகாதார நிறு வனம் அங்கீகாரம் வழங்குவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எனவே நிகழ் காலத்தில் அந்த அச்சம் தவறானது.

மரபணு மாற்றம் செய்யும் போது பூச்சிகொல்லிகளை அதிகம் தாக் குப்பிடிக்கக் கூடிய வலிமையும், சில நோய்களுக்கு எதிரான வலு வும் அந்தத் தாவரங்களுக்கு கிடைக் கின்றன. அத்தகையவற்றை உண்ப தால் அன்றிபயோரிக் மருந்துக ளுக்கு எதிரான வலுவை இழக்க நேரலாம் என்ற அச்சமும் சிலரால் எழுப்பப்படுகிறது. ஆனால் அதற் கான ஆதாரங்கள் எதுவும் கிடை யாது. இதைப் போலவே மரபணு மாற்றம் செய்த உணவுகளை உண் பதால் புற்றுநோய் ஏற்படும் என்ற அச்சம் மிகப் பரவலாக உள்ளது. இங்கிலாந்தில் செய்யப்பட்ட ஆய்வு ஒன்றில் ஆய்வு செய்யப்பட்டவர்க ளில் மூன்றில் ஒருவர் மரபணு மாற் றம் செய்த உணவுகளை உண்ப தால் புற்றுநோய் ஏற்படும் எனத் தவறாக நம்புவதாகக் கண்டறிந் துள்ளார்கள். ஆனால், உண்மை யில் அந்த நம்பிக்கை தவறானது. மரபணு மாற்றம் செய்த உணவுக ளால் புற்றுநோய் ஏற்படுவதற்கான எதுவித ஆதாரங்களும் கிடையாது.

புற்றுநோய்கள் பலவிதமானவை. அவை வருவதற்கான காரணிகளும் வேறு வேறானவை. சில புற்று நோய்கள் வருவதற்கான காரணி களை மருத்துவ உலகம் கண்ட றிந்துள்ளது. உதாரணமாக வாய்ப் புற்றுநோயும் வெற்றிலை புகை யிலை சப்புதலும் என்பது நீங்க ளும் அறிந்ததே. ஆனால் எல்லாப் புற்றுநோய்களுக்கும் அவ்வாறு கார ணிகள் கண்டறியப்படவில்லை. எந்த ஒரு புற்றுநோய்க்கும் மர பணு மாற்றம் செய்த உணவுகளே காரணம் என்பது இதுவரை கண்ட றியப்படவில்லை. ■

மருத்துவ ரீதியாக உங்க ளுக்கு எழும் சந்தேகங் களை எமக்கு எழுதி அனுப் புங்கள். அவை தொடர்பில் உரிய மருத்துவர்களின் பதில்கள் எதிரொலியில் பிரசுரமாகும். உங்கள் சுய விபரம் இரகசியமாகப் பேணப்பட வேண்டுமாயின் அதனை மறக்காமல் குறிப் பிடுங்கள். நோயற்ற வாழ் வுக்கு கேளுங்கள். பதி லோடு பயனும் பெறுங்கள்.

ந.பரமேஸ்வரன்
parames35@gmail.com

பால்டயஸ் பாதிரியாரின் டயறி

(1505 முதல் 1948 வரையான யாழ்ப் பாணத்தின் வரலாற்றைக் கட்டுரையாளர் இங்கு தொடராகப் பதிவு செய்கின்றார். இங்கு கூறப்பட்டுள்ள தகவல்கள் பெரும்பாலும் ஆங்கில மூலங்களில் இருந்து பெறப்பட்டவை. தகவல்களில் வேறுபாடு காணப்படும் சந்தர்ப்பங்களில் இரண்டு தகவல்களையும் இங்கு தரவுள்ளதாகவும், அவை தொடர்பில் தான் தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை எனவும் கட்டுரையாளர் தெரிவித்துள்ளார்.)

இங்கு திருமணத்தின் போது மணமகன் மணமகளின் கழுத்தில் தாலி கட்டுகிறார். கணவன் இறந்ததும் தாலியும் கணவனின் சடலத்துடன் சேர்த்து எரிக்கப்படுகிறது. திருமணம் செய்யாதவன் அரை மனிதன் என இங்குள்ளவர்கள் கூறுகின்றனர்.

இங்கு பெண்களுக்கு 10 -11 வயதிலேயே திருமணம் செய்து வைத்து விடுகின்றனர். ஆனால் 13-14 வயது வரையும் கணவனைச் சந்திக்க அனுமதிப்பதில்லை. 8-9 வயதிலேயே பெற்றோர், உறவினர் முன்னிலையில் எனது பிள்ளை உனது மகனுக்குத்தான் என நிச்சயதார்த்தம் செய்து விடுகின்றனர். பெண்களின் சம்மதத்தைப் பற்றி அக்கறைப்படுவதில்லை. விவரம் தெரிய வயதில் அவர்களின் சம்மதம் இன்றி திருமணம் செய்து வைத்தால் விவரம் தெரிந்த பின்னர் அவர்களுக்கு தமது கணவனை பிடிக்காவிட்டால் அவர்கள் கவலைப்படுவார்கள் என்று சொன்னேன். எனது கருத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. மணமகனின் வயதைவிட மணமகளின் வயது குறைவாக இருக்க வேண்டும்.

திருமண நிகழ்வுகளில் மது பரிமாறப்படுவதில்லை. திருமணக்கொண்டாட்டம் 4 நாட்கள் நடைபெறும். மாலை வேளைகளில் ஆடல், பாடல் போன்ற நிகழ்வுகள் நடைபெறும்.

சுண்டுக்குளி தேவாலயத்துக்கு அருகில் சிவியர் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் யாழ்ப்பாண இராச்சியத்தில் யாழ்ப்பாண அரசனின் கீழ் பணிபுரிந்தவர்கள். இவர்களுடைய திருமணங்கள் யாழ்ப்பாண அரசனின் முன்னிலையிலேயே நடைபெற்றன. இவர்களுடைய தொழில் பல்லக்கு சுமப்பது. இப்பொழுது இவர்கள் பத்து இருபது பேர் சேர்ந்து டச்சுக்காரர்களை சுமந்து செல்கின்றனர். இவ்வாறு டச்சுக்காரர்களை சுமந்து செல்வது இவர்களுக்கு மகிழ்ச்சிதரும் விடயம். அத்துடன் இங்குள்ள டச்சுக் காரர்களுக்கு தேவையான விறகு, தண்ணீர் போன்றவற்றையும் இவர்கள் தான் காவிக்கொண்டு வந்து தருகின்றனர்.

இங்கு பரவர்களும் வசித்து வருகின்றனர். கடற் குதிரையின் பற்களை சுழியோடி பெற்றுக்கொள்வதும், முத்துகுளிப்பதும் தான் இவர்களுடைய தொழில். இவர்கள் போர்த்துக் கேய மொழியையே பேசுகின்றனர்.

சேட்டிமார்களும் இங்கு வாழ்ந்து வருகின்றனர். செட்டிமார் ஆடை உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றனர். செட்டி என்றால் வர்த்தகம் செய்பவர்கள் என்று பொருள். இவர்கள் தமது உறவுக்குள்ளேயே திருமணம் செய்கின்றனர். ஆடை உற்பத்தி செய்தல் இவர்களுடைய பரம்பரைத் தொழில். ஆடை உற்பத்தி தொழில் நுட்பங்களை தந்தை மகனுக்கு சொல்லிக் கொடுப்பார். இதே போல் உலோக வேலை, ஆபரணத் தொழிலில் ஈடுபடுபவரகளும் பரம்பரையாக தமது தொழிலை நடத்தி வருகின்றனர். கரையார் பெரிய நீளமான வலைகளை வைத்து மீன் பிடித்து வருகின்றனர்.

(வரும்)

இடருடை வழிபாடும்: அழிந்த நிலமீட்பும்!



(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பழைய செம்மலை நீராவியடி பிள்ளையாருக்கும் நடந்த நிலப்பறிப்பும் இதே வகைக்குரியதே! 1990 முதல் 2013 வரை அயலில் மக்கள் குடியிருப்புக்கள் எவையுமில்லாத தனிமையில் இருந்த பிள்ளையார் கோயிலுக்குரிய காணி, முல்லைத்தீவு - கொக்கிளாய் வீதியில் 18 வது கிலோமீட்டரில் வீதியை அடுத்திருக்கும் அதீத மேட்டுப்பாங்கான நிலத்தில் அமைந்திருக்கின்றது. ஆலயமுகப்பில் நின்று அவதானித்தால், செம்மலையின் கடற்கரைப் பகுதியையும் நாயாற்று பாலத்தையும் - தொடுகடல் பகுதியையும் முழுமையாக அவதானிக்க முடியும். போர்க்காலத்தில், தமது காவற் தேவைகளுக்காக ஆலய காணியில் முகாம் அமைத்து தங்கியது இராணுவம். வழிபட ஆளில்லாத ஏகாந்தத்தில், விநாயகருடைய வளவில் சிறிதாக புத்தபெருமான் குடியேறி, அவரைத் தொடர்ந்து பிக்கு குடியேறி, பிக்குவுக்கு வாழிடம் அமைத்து, விகாரை முகப்பில் 12 அடி உயர புத்தர் சிலை அமைத்து, தொல்பொருள் திணைக்களத்தின் உதவியுடன் பிள்ளையாரின் காணியின் மேல் வழக்கு போட்டு, தமிழர் திருவிழாவுக்கும் - வகைதொகையின்றி தமிழ்மக்கள் ஒன்றுகூடி வழிபாடியற்றவும் வழியமைத்திருக்கின்றனர், பேரினவாதிகள்.

வழக்கமாக அடுத்த ஊருக்கும் தெரியாமல் பொங்கிப்படைத்து, ஒரு பாதி தேங்காயை உடைத்து சுற்றி கழித்து ஒரு சீப்பு வாழைப்பழத்தோடு ஒரு கட்டி கற்பூரம் கொளுத்தி கும்பிட்டு, தின் றெழும்பி கையை கழுவிவிட்டு போகும் பொங்கலை - உலகம் முழுதும் தெரியப்படுத்திய தமிழர் திருவிழாவாக கொண்டாட வேண்டிய அவசியமான கடமைக்கும் - இன ஒற்றுமை குழுமுதலுக்குமாக நெருக்கித்தள்ளியிருக்கிறது, பௌத்த சிங்கள பேரினவாதத்தின் நிலவெறி.

தன்னார்வமாக ஒன்றிணைந்து பொங்கல் பெருவிழாவை, தமிழர் திருவிழாவாக கொண்டாடிய வடக்கையும் - கிழக்கையும் பிரதிநித்துவப்படுத்திய இளைஞர்களை நோக்கி தமிழ் அரசியல் தலைமைகளைத் தேடிவரவும் வைத்திருக்கிறது.

வாக்களித்து தெரிவு செய்த மக்களின் நிலைப்பாட்டுக்கு மாறுபாடான முடிவுகளை எடுத்த காலப்பெரும்பழியை சுமந்து நிற்கின்ற தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை, இனமுதன்மைக்கு மேலதிகமான மதப்பிளவுக்குள் விழுத்திய வெற்றியை ஆளுமினம் கொண்டாடத்தொடங்கியிருக்கும் ஒரு புறநெருக்கீட்டிருக்க - அடுத்தடுத்து விழுங்கப்படுகின்ற பாரம்பரியம் மிக்க தமிழர் நிலங்களை காக்கவேண்டிய காவல்கடமையை, அரசியல் சார்பற்ற இளையவர் குழுமங்கள் கையிலெடுத்திருக்கின்ற சூழ்நிலை தருகின்ற பெருமிதமிக்க மகிழ்ச்சிக்கு சமவளவிலான பதற்றமும் - பயமும் ஏற்படாமலுமில்லை.

இனத்தால் தமிழர்களாக, பெரும்பிரவாகமளித்த பேரெழுச்சியுடன், செம்மலையின் தமிழர் திருவிழாவில் உரிமைக்குரலோடு பங்குபற்றியிருந்த அன்புத்தமிழுறவுகளை நோக்கி நன்றியோடு கைகூப்புவதைத் தவிர வேறு எந்தத்தெரிவுமில்லை, இப்போதைக்கு!

■

மலிங்க எனும் ராட்சசன்



சுற்றில் இங்கிலாந்து அணிக்கு எதிராக இலங்கை வீரர் லசித் மலிங்க பந்து வீசியமையே சிறந்த பந்துவீச்சு முயற்சியாகப் பார்க்கப்படுகிறது.

உலகக் கிண்ணத் தொடரை மோசமாக ஆரம்பித்த இலங்கை அணி, நியூசிலந்து, அவுஸ் திரேலியாவுடன் தோல்விகள். பங்களாதேஷ், பாகிஸ்தானுடனான போட்டிகள் ரத்து. ஆப்கானிஸ்தானுடன் மாத்திரமே வெற்றி பெற்றிருந்த நெருக்கடியான நிலையில், பலம் வாய்ந்த இங்கிலாந்து அணியை எதிர்கொண்டது.

இங்கிலாந்து அணிக்கு எதிராக முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை 232 ஒட்டங்களைச் சேர்த்தது. இலங்கை வெற்றி பெற குறைந்த வாய்ப்பே இருந்த நிலையில், மலிங்க தனது பந்து வீச்சால் போட்டியின் முடிவைத் தலைகீழாக மாற்றி அமைத்தார்.

இதில் மலிங்க, 10 ஓவர்கள் பந்து வீசி 34 ஒட்டங்களை விட்டுக்கொடுத்து 4 விக்கெட்டுகளைச் சாய்த்தார்.

நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் 7 போட்டிகளில் விளையாடி, 13 விக்கெட்டுகளைக் கைப்பற்றி தனது உலகக் கிண்ண வாழ்க்கையை முடித்த இவர், ஒட்டுமொத்த உலகக் கிண்ணப் போட்டிகளில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய வீரர்கள் வரிசையில் மூன்றாவது இடத்தில் உள்ளார். 29 உலகக் கிணணப் போட்டிகளில் விளையாடியுள்ள இவர், 56 விக்கெட்டுகளைச் சாய்த்துள்ளார்.

இந்த வரிசையில் அவுஸ்திரேலியாவின் மெக்ராத் 71 விக்கெட்டுகளையும், இலங்கையின் முரளிதரன் 68 விக்கெட்டுகளையும் வீழ்த்தி முதலிலண்டு இடங்களில் உள்ளனர். பாஸ்தானின் வசிம் அக்ரம் 55 விக்கெட்டுகளுடன் நான்காவது இடத்திலும் இலங்கையின் சமிந்த வாஸ் 49 விக்கெட்டுகளுடன் ஐந்தாவது இடத்திலும் உள்ளனர்.

நடப்பு உலகக் கிண்ணத் தொடருடன் தனது உலகக் கிண்ண வாழ்க்கைக்கு முற்றுப் புள்ளி வைத்துள்ள மலிங்க, இனிவரும் சில ஒருநாள் போட்டிகளுடன் ஒருநாள் ஆட்டங்களுக்கு விடை கொடுப்பார் எதிர்பார்க்கலாம்.

இவர், சர்வதேச அரங்கில் இதுவரை, 225 ஒருநாள் போட்டிகளில் பங்கேற்று, 335 விக்கெட்டுகளைச் சாய்த்துள்ளார். இதில், இவரது சிறந்த பந்துவீச்சாக 38 ஒட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளை வீழ்த்தியமை விளங்குகிறது. அத்துடன் இவர், 8 தடவைகள் 5 விக்கெட்டுகளைச் சாய்த்துள்ளார். இவரது சராசரி 29.02 ஆகும்.

இலங்கையின் பந்துவீச்சில் முரளிதரன், சமிந்தவாஸ் வரிசையில் இணைந்தவர் லசித் மலிங்க.

எதிரணியில் நின்று துடுப்பைச் சூழற்ற நினைக்கும் வீரர்களுக்கு ராட்சசனாகவே இவர் தெரிவார். எதிரணி வீரரின் உடலைத் தாக்குவதை ஒருபோதும் குறியாக நினைக்காது, விக்கெட்டுகளை மாத்திரமே குறிவைத்துத் தாக்கும் நேர்மையான ராட்சசன் இவர். யோக்கர் பந்துவீச்சு இவருக்குக் கைவந்த கலை. எனினும், பந்துவீச்சில் உள்ள பல வகையான பந்துவீச்சுப் பாணிகளையும் சிறப்பாகச் செய்து முடித்தவர்.

இவரது ஓய்வு அண்மித்துள்ள நிலையில், ஏற்கனவே கீழிறங்கியுள்ள இலங்கை அணியின் அடுத்த கட்டம் குறித்த கேள்வி எழத் தொடங்கியுள்ளது.

ஆடுகளன்

நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் எதிர்பார்ப்பில்லாது சென்ற ஓர் அணியை, பிரமிப்புடன் பார்க்க வைத்து, முழு உலகுக்கும் ஒரு முன்னுதாரணமாக விளங்கி நாடு திரும்பியுள்ள இலங்கை அணி வீரர்களுள் ஒருவர்தான் ராட்சச யோக்கர் மன்னன்.

1983ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 28ஆம் திகதி காலியில் பிறந்த லசித் மாலிங்க, 2004 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 01ஆம் திகதி கொழும்பில் ஆரம்பித்த அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் ஆட்டத்துடன் சர்வதேச அரங்கில் காலடி எடுத்து வைத்தார்.

பின்னர் அதே ஆண்டு ஜூலை 17ஆம் திகதி நடைபெற்ற ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு எதிரான ஆட்டத்துடன் ஒருநாள் போட்டிகளிலும் களமிறங்கினார்.

2006ஆம் ஆண்டு இருபது-20 போட்டிகளில் அறிமுகமான அவர், 2010ஆம் ஆண்டுடன் டெஸ்டுக்கு முழுக்குப் போட்டார்.

இதன் பயனாக இருபது-20, ஒருநாள் ஒட்டங்களில் பிரகாசிக்க ஆரம்பித்த அவர், இலங்கையின் நம்பிக்கை நட்சத்திரமாக ஜொலித்தார்.

இருபது-20 உலகக் கிண்ணத்தை இலங்கை வென்றது இவரது தலைமையில்தான். இவ்வாறு தனது பந்துவீச்சுப் பயணத்தைத் தொடர்ந்தவண்ணமிருந்த மலிங்கவுக்கு, நடப்பு உலகக் கிண்ணம் பெரும் சவாலாக அமைந்தது.

பலவீனமாகக் களம்கண்ட இலங்கை அணியை தனது தோள்களில் சுமந்து செல்ல வேண்டிய இக்கட்டான நிலையில், அவர் அந்த நம்பிக்கையைச் சிறப்பாகவே செய்து முடித்துள்ளார்.

பத்து அணிகள் பங்கேற்ற நடப்பு உலகக் கிண்ணத் தொடரின், புள்ளிப்பட்டியலில் கடைசியிடத்தில் இருக்கவேண்டிய இலங்கை அணியை, தனது பந்துவீச்சால் அரையிறுதிக்கான வாய்ப்பைக் கூட எதிர்பார்க்க வைத்தவர். தனது திறமையால் ஏனைய வீரர்களுக்கும் நம்பிக்கையளித்து அவர்களையும் விளையாட உத்வேகம் செய்து, புள்ளிப்பட்டியலில் 6ஆவது இடத்தைப் பிடிக்க வைத்தவர் என்ற பெருமையும் இவருக்கே சேரும்.

இங்கிலாந்தின் ஆடுகளத்தில் ஒவ்வொரு அணியும் ஓட்டங்களைக் குவிக்க, இலங்கை அணியால் அவ்வளவு சாதிக்க இயலவில்லை. எனினும், பந்து வீச்சாளர்கள் மிகச் சிறப்பாக பந்து வீசி சில போட்டிகளின் முடிவுகளை மாற்றி அமைத்தனர். அந்த வகையில் லீக்

இப்பத்திரிகை மானிப்பாய் வீதி, உடுவில் என்ற முகவரியிலுள்ள அம்பலம் பதிப்பகத்தால், 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 10.07.2019 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.